# பொன்னி

689

மலர் 8 15—6—54 இதழ் 6



விலை

16 AUG

# சிறந்த புதிய வெளியீடுகள் !

★

| | | |
|---|---|---|
| நினைவுச்சின்னம் | இளமைப்பித்தன் | ... ரூ. 1- 0-0 |
| கடல் முத்து | எஸ். ஆறுமுகம் | ... ரூ. 1- 0-0 |
| உலக அரங்கில் | டி. கே. சீனிவாசன் | .... ரூ. 1- 0-0 |
| தபாலாபீஸ் விநோதங்கள் | க. சண்முகசுந்தரம் | .... ரூ. 0- 8-0 |
| கம்பன் கெடுத்த காவியம் | | ... ரூ. 0- 4-0 |
| இலக்கியச் சந்தையில் | மு. அண்ணாமலை | ... ரூ. 0- 8-0 |
| வீடும் விளக்கும் | 'சுகி' | ... ரூ. 0- 8-0 |
| தாஜ்மஹால் | நா. பாண்டுரங்கன் | .... ரூ. 0- 8-0 |
| கொடிமுல்லை | வாணிதாசன் | .... ரூ. 0-12-0 |
| இரு கதைகள் | நாரா நாச்சியப்பன் | .... ரூ. 0 -4-0 |

வணிகர்கட்குத் தக்க கழிவு உண்டு.

★

விவரங்கட்கு :

**பொன்னி லிமிடெட்**

111, பவழக்காரத் தெரு : : சென்னை – 1.

ஆசைக் கனவு
(தொடர் சித்திரம்)

?

எழுதுகிறார்

●

விரைவில்
எதிர்பாருங்கள்

OFFICE OF THE REGISTRAR … MADRAS
16 AUG

# பொன்னி

## பொருளடக்கம்

மலர் 8 | ஜூன் 15, 1954. | இதழ் 6

*திருவள்ளுவர் ஆண்டு 1985*
*ஆனித் திங்கள் 1-ம் நாள்*

தலையங்கம் .... 3
மீன் வேட்டைக்குப் பிறகு மான் வேட்டை .... 5
அந்த நாள்! ... 7
"கருத்திலொரு புரட்சி" ... 13
செய்தித் திரட்டு .... 15
உண்டோ பயன்? ... 17
மாணவர்களும் பொதுவாழ்வும்! ... 18
குத்தகை நிலம் ... 21
விநோத மண முறைகள் .... 31
குறள் ஆட்சி பெற்ருல்...! .... 35
கலியுகக் கண்ணகி .... 36
இன்பம் எங்கே? .... 39
வழுக்கி விழுந்தவள் ... 40
இலக்கியச் செல்வங்கள் .... 47
ரஸியாவின் காதல் .... 51
நமது மருத்துவர் ... 59
வளரும் இலக்கியம் .... 61

★

விலை 4 அணு

"பொன்னி"யில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள் நிகழ்ச்சிகள் யாவும் கற்பனையே. கட்டுரையாளர்களின் கருத்துக்கு — ஆசிரியர் பொறுப்பல்ல. —

# 12 விருந்து வரிசையில் உலக இலக்கியங்கள் 12

| | | | |
|---|---|---|---|
| 1. | இந்துலேகா | .... | மலையாள நாவல் |
| 2. | மாமனார் வீடு | .... | ஆங்கில நாடகம் |
| 3. | துன்பக்கேணி | .... | ஜப்பானியக் கதை |
| 4. | நூர்ஜஹான் | .... | வங்காளி நாடகம் |
| 5. | கைக்கடிகாரம் | .... | ரஷ்யக் கதைகள் |
| 6. | முத்துமாலை | .... | சீனக்கதைகளும் நாடகமும் |
| 7. | தாயகத்தின் அழைப்பு | .... | ஆங்கில நாடகம் |
| 8. | அறக்கோட்டம் | .... | இந்தி நாவல் |
| 9. | மாலதி—மாதவன் | .... | சமஸ்கிருத நாடகம் |
| 10. | கடல்மறவர் | .... | பிரஞ்சு நாவல் |
| 11. | கல்மனிதன் | .... | ஸ்வீடிஷ் கதைகள் |
| 12. | ஆண்டிமடம் | .... | ஆங்கில இசை நாடகம் |

*மேற்குறித்த 12 புத்தகங்களும் ரூ 6/—அனுப்பினால் தபால் செலவின்றி அனுப்பப்படும். தனித்தனியே பெறுவதற்கு பிரதி 8 அணா—தபால்செலவு 1 அணா.*

## பொன்னி லிமிடெட்

**111, பவழக்காரத் தெரு : : சென்னை—1.**

# திருவள்ளுவர் கண்ட திருநாடு!

ஒரே உலகம் காண விழைந்த வெண்டல் வில்கி, உலகையே ஒரு குடைக்கீழ் ஆட்டிப் படைக்க ஆசை கொண்ட ஹிட்லர், பொதுவுடைமை நாட்டின் புனிதத் தலைவர் ஸ்டாலின், எல்லா நாடுகளுக்கும் பொதுவான அரசியல் மன்றங்களை நிறுவிய அறிஞர் பெருமக்கள், உலகப் பெரியார் காந்தியடிகள், அவர்தம் வாரிசு — இந்தியாவின் ஒளி — தமிழர்களைக் காட்டுமிராண்டிகள் எனக் கூறிய காவா நாவினர் நேரு ஆகியோர் காண விரும்பிய விரும்புகின்ற நாட்டைப் போன்றதல்ல திருவள்ளுவர் காணும் திருநாடு.

திருவள்ளுவர் காண விழைந்த நாட்டின் நல்லிலக்கணத்தை நாடாள்வோர் உணர்ந்தால் நலம் பயக்கும். ஆனால் நம் நாட்டினை ஆளும் பொறுப்பேற்றுள்ள ஆளவந்தார் தெரிந்துள்ளதாகத் திறம்பட நடிக்கின்றனரேயன்றி' மெய்யாக உணர்ந்தாரில்லை. பொதுமக்களாவது தெரிந்துள்ளார்களாவென்றால் அதுவுமில்லை.

மாறாக, பஞ்ச தந்திரக் கதைகள், பகுத்தறிவுக் கொவ்வாத பாழும் பழம்புராண இதிகாசங்கள், காமலீலைகளை விளக்கும் கணக்கற்ற ஏடுகள், அறிவையும், அன்பையும், அறத்தையும் கொல்லும் பல இழிநூல்கள் இவற்றிலே பலர் ஈடுபட்டுள்ளனர். இங்கிலையிலுள்ள பொதுமக்களையும், ஆட்சிமுறையறியா ஆளவந்தார்களையும் நினைக்கும் போது நம் நெஞ்சம் குமுறுகிறது.

இனியும் இம்முறையிலிருந்தால் இருட்டுக்குத்தான் முன்னேற்றம் ஏற்படும். ஆதலின் இந்நிலையில் வள்ளுவர் கண்ட வளநாட்டைச் செவ்விய முறையிலே நாமும் கண்டு ஏனைய நாட்டவர்க்கும் எடுத்துரைக்க வேண்டும்.

திருவள்ளுவர் கண்ட நாட்டிலே என்றும் குறையாத நல்ல விளைபொருள்கள் உண்டு. வேந்தன் அல்லது நாடாளும் தலைவன் செந்நெறி விலகிச் சிறுநெறி செல்லின் இடித்துரைக்கும், செவியறிவுறுத்தும் கோவூரார், பிசிராந்தையார், புல்லாற்றூர் எயிற்றியனார், ஔவையார் போன்றவர்கள் உண்டு. பொருளும் அருளும் கொண்ட பொதுநல எண்ணமுள்ள, தாழ்விலாப் பொருட் செல்வர்கள் நிறையவுண்டு. இதனை யுணர்த்துவதே,

> **"தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச்**
> **செல்வருஞ் சேர்வது நாடு"**

என்ற பொய்யா மொழியாகும்.

மேலும் நாட்டில் இருக்க வேண்டியதைக் கூறிய திருவள்ளுவர் இருக்கக் கூடாதவற்றையும் கூறுகிறார். குடிப் பிறப்பழித்து, விழுப்பங்கொன்று தீராது வருத்தும் பசியும், நீங்காத நெடிய நோயும், அச்சமும் அழிவும் தரும் பகையும் இல்லாதிருக்க வேண்டும் என்று கூறவந்த வள்ளுவர்,

> **"உறுபசியு மோவாப் பிணியுஞ் செறுபகையுஞ்**
> **சேரா தியல்வது நாடு"**

என்று திருவாய் மலர்ந்துள்ளார்.

இதுமட்டுமன்று. நாடென்று நவிலப்படுவது நாடா வளமுடையதாக, நல்லோரின் பெட்டகமாய், நன்மனமுடையார் வாழிடமாக விளங்கவேண்டுமென்று கூறுகிறார். இவை யாவும் ஒருங்கே அமைந்து எழில் பெற்றிலங்கிய போழ்தினும் நாட்டை யாளும் தலைவனும் நாட்டு மக்களும் ஒருவரோடொருவர் அன்பால், ஆட்சி முறையால் இணக்கமில்லாது எதிர்ப்பட்டு மாறுபட்டு இருப்பாராகில் ஆட்சி ஒரு பயனுமின்றி அழியும் என்று எச்சரிக்கை விடுக்கும் முறையில்,

> **"ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே**
> **வேந்தமை வில்லாத நாடு"**

என்று கூறியுள்ளார்,

எனவே இன்று நம் நாடு அமைந்துள்ள நிலையையும், வள்ளுவரின் வாக்கையும் நல்லறிவுடைய நன்மக்களும் நாடாள்வோரும் நன்கு சிந்தித்துத் திருவள்ளுவர் கண்ட திருநாட்டை, செந்தமிழ்த் திருவிடத்தை, பைந்தமிழ் பேசும் பண்புடை நாட்டைச் சீரிய முறையிலே செயல் திறத்திலே நாம் காண, கண்டு மகிழ நாளும் நற்பணி பல புரிந்து நல்ல நாட்டை, வள்ளுவர் கண்ட வளமுள்ள நாட்டை அமைத்து அளிக்க ஆவன செய்வார்களாக.

# மீன் வேட்டைக்குப் பிறகு மான் வேட்டை!

நீலக் கடலின் கரையிலேயே நிலா முகத்தழகி நின்று கொண்டிருந்தாள். நேரத்தை நினைவுகள் தின்று கொண்டிருந்தன. அவள் இதயத்தை வேதனை மென்று கொண்டிருந்தது!

காட்டுயானைகளின் கூட்டம் போல் எழுந்தப் பேரலைகள் நுரைகக்கும் குதிரைகளைப்போல் ஓடி வந்துகொண்டிருந்தன. நரைத்துப் போன மேகங்கள் சில வானத்தில் நகர்ந்து கொண்டிருந்தன. சிரிக்கும் ரோஜாவாகக் கீழ்வானத்தில் மலர்ந்திருந்த கதிரவன் வெள்ளெருக்கு மலராக மாறிக்கொண்டே நடுவானத்தில் ஏறிக் கொண்டிருந்தான். எல்லை தெரியாத கடலை அப்படியே அள்ளிப் பருகிவிடுவதைப்போல அவள் பார்த்துக்கொண்டே நின்று கொண்டிருந்தாள். ஏதாவது ஒரு படகு எங்காவது ஒரு கோடியில் தென்படுகிறதா என்று அவள் கண்கள் தேடிக்கொண்டே இருந்தன. படகு தென்படவில்லை கடலில், அலைகள் ஓயவில்லை, கடலிலும் அவள் கருத்திலும்!

மீண்டும் மீண்டும் நீண்டு விரிந்த கடற் பரப்பிலேயே அவள் பார்வை அலைந்து கொண்டிருந்தது. அவள் இரு விழிகளிலிருந்தும் கிளம்பிய பார்வைப் பறவைகள் சிறகடித்து ஓடின—தெரியும் திக்கெல்லாம் தேடின. படகு தென்படவில்லை. ஒரு வேளை அடிவானத்துக்கு அப்பால் படகு வந்து கொண்டிருந்தால்...? அவள் பார்வைப் பறவைகள் கிளம்பின அடிவானம் நோக்கி. ஆனால் அடிவானம்...? கிட்டே நெருங்க நெருங்க எட்டி ஓடிக்கொண்டிருந்தது அது. படபடத்தச் சிறகுகளில் சோர்வு படர்ந்தது. அவள் விழிகளிலிருந்து கண்ணீர் வழிந்தது.

கடல் மேற் சென்றான் அவள் கணவன்-மீன் கொணர! தலைமையேற்று மீன் வேட்டைக்குச் சென்ற அவன் இன்னும் திரும்பவில்லை. கதிரவன் தன் கண்ணிமைகளை மூடும் வேளையில் கடல் மீது சென்றால் அவன் கண் திறக்கும் வேளையில் திரும்பிவிடுவதே அந்தப் பரதவ வீரனின் வழக்கம். அங்கு வாழ்ந்தப் பரதவர்களின் வழக்கமே அதுதான். மாலை சென்றால் காலை திரும்பிவிடுவர். அல்லது, தாமரைகள் மலரும் நேரத்தில் கட்டுமரமேறிக் கடல் மீது செல்வோர் அவ்வளவு பெரும் ஆம்பல் மொட்டுக்கள் கட்டவிழும் நேரத்தில் கரைக்குத் திரும்பிவிடுவர். ஆனால்.......? மாலை சென்ற அவள் மணாளன் காலை பிறந்து அது உச்சிவேளையாகும் அந்தப் பொழுதிலும் திரும்பவில்லை என்றால்......? நேரம் ஆக ஆக அவள் நெஞ்சில் பாரம் அதிகமாகியது. நீர் சொரியத்தொடங்கின அவள் நீள் விழிகள். என்ன செய்வாள் பாவம்! அவளே உணர்ந்தாள். தன்

கடை விழிகள் பெருக்கும் கண்ணீர் அலைகடலில் பெய்த அடை ம ழை தா ன் — பாலைவனத்தில் பாடிய பாட்டுதான் கரும்புத் தோட்டத்தில் வீசிய கற்கண்டுதான்! இப்படித்தான் அவள் கருதினுள். பரந்த கடலில் எங்கோ ஒரு பகுதியில் அவளை மறந்து மீன் வேட்டையில் குதூகலமாக நேரத்தைக் கழித்துக் கொண்டிருக்கும் காமில்லா உள்ளம் கொண்ட அவள் காதல் வீரன், கரையில் அவன் வரவுக்காக நின்று கருத்தும் கண்ணும் சோர்ந்து நிற்கும் அவள் கன்னங்களில் வழியும் கணணீர் அக்கண்ணீரைப்பற்றிக் கருதவா போகிருன்— கற்பனை யாவது செய்வானு—இல்லை கனவாவது காண்பானு? அதுதான் இல்லை. இப்படித்தான் அவள் எண்ணினுள். வெந்த புண்ணில் காய்ச்சிய வேலைப்பாய்ச்சியதைப் போல் உள்ளம் நொந்தாள்.

அலைகடல் அழகுச்சிலை. அது வடிக்கும் கண்ணீர். இரண்டு முறை ஆறுதல் சொல்லிவிட்டுச் சென்ற தோழி மீண்டும் வந்தாள். கணவன் வரவு காணுது கண்ணீர் பெருக்கும் கட்டழகியைக் கண்டாள். கணவன் அன்பின் மீது குறை கண்டு கடிந்துரைக்கும் அவள் சொல் கேட்டாள். வாட்டம் வளர்ந்தது தோழிக்கு. கடலின் நடுவே அவர் இருந்தாலும் கருத்தெல்லாம் அவள் மீது தான் என்று தோழி சொன்னுள், இல்லை என்று மறுத்தாள் அழகி. அதை மறுத்தாள் தோழி. 'என் நினைவா? அவருக்கா? நடுக் கடலிலா?' என்று கேட்டுப் பெருமூச்சு விட்டாள் அவள். தோழி விளக்க முரைத்தாள். "கடலில் வலை வீசும்போது கிடைப்பது மீன்கள் மட்டுமா, முத்துச்சிப்பிகளும் பவளக் கொடிகளும் கூட சிக்கும் வலையில்! முத்தைப் பார்த்ததும் உன் பற்கள்—பவளத்தைப் பார்த்ததும் உன் இதழ்கள்—அவ்வளவு ஏன்? மீனைப் பார்த்ததும் உன் விழிகள் அவர் நினைவில் தோன்ருமலா இருக்கும்?..." தோழி இப்படிப் பேசிக் கொண்டே இருக்கும் போது அழகி கை கொட்டிக் குதித்தாள். பேச்சைக் கேட்டு அல்ல, கடலில் தொலைவில் ஒரு படகு தென் பட்டதைக் கண்டு!

..படகிலிருந்து கரையேறிய வீரன்—அவள் உள்ளங் கவர்ந்த தீரன் ஓடி வந்து அவளைக் கட்டிக் கொண்டான். தோழி இருப்பதைக் கூட அவன் மறந்தான். அவன் பிடியை விலக்கி அப்பால் நகர்ந்தாள் அவள். காலந்தாழ்த்து வந்ததால் விளைந்த கடுஞ்சினம் என்று கருதினுன் அவன். அவள் அருகே சென்ருன். கரத்தை நீட்டி அவளைத் தன்னருகே இழுத்துக் கொண்டே சொன்னுன். "இனி மேல் நான் மீன் வேட்டைக்கே செல்லமாட்டேன். ஏன் தெரியுமா?" என்று கேட்டான், அருகிலிருந்த தோழி அபிநய மொழியில் பதில் சொன்னுள். "மீன் வேட்டைக்குப்பிறகு வீடு திரும்பினுல் இங்கே பெண்மான் பிடிபடாமல் ஓடுகிறது. அதைத் தன் பிடியில் சிக்கவைக்க ஏதாவது சொல்ல வேண்டாமா? உள்ளம் குளிர நல்ல நல்ல பொய்கள் சொல்ல வேண்டாமா? நீங்கள் மீன் வேட்டைக்குச் செல்லமாட்டீர்கள். ஏன் தெரியுமா? தெரியுமே—மீன் வேட்டைக்குப் பிறகு மான் வேட்டை!"

....அட்டைப்படம் இந்தக் காட்சியைத்தான் சொல்லுகிறது.

[கதையமைப்பையோ, கற்பனைக் கருத்துக்களையோ, சொற்றொடர்களையோ எடுத்தாள எண்ணுவோர் ஆசிரியர் தம் இசைவு பெறல்வேண்டும்]




## காட்சி 18

[இடம்: பொருநையாற்றங்கரை:—மாடலமறையோன், ஆசான், பைரவன் முதலியோர்]

மாடலமறையோன்: குறுக்கு வழியிலே நடுக்கமின்றி நான் செல்லமுடியும்! நெற்றியிலே நீறும், புத்தியிலே சூழ்ச்சியும், கையிலே கமண்டலமும், கழுத்திலே நூலும் இருக்கும்வரை மாடலன் எங்கு சென்றாலென்ன? யார் தடுக்கப்போகின்றனர்.........கங்கைக் கரையின் களம்நோக்கி, கனக விசயர் தலையிலே கல்சுமத்தச் செல்கின்றான் செங்குட்டுவன்.......அவனைத் தடுப்பார் யார்? தடுத்து நிறுப்பார்தான் யார்? இருக்கட்டும்......அன்பரே நான் உம்மிடம் சொன்னதை..........

| | |
|---|---|
| மாடலமறையோன்: | இவன் ஓர் ஆரியன்; ஆரியப் பண்பாடுகள் பரவவும், அவர் தம் வாழ்வு வளமுறவும் வகை தேடியவன். |
| பைரவன்: | மாடலமறையோனை ஒத்தவன். |

ஆசான்: மறக்கவில்லை, நிறைவேற்றப் போய்தான்.......
மாடலன்: என்ன நடந்தது இயம்பும் விரைவில்
ஆசான்: அந்த வில்லவன் கோதையும் விகட கவியும்........
மாடலன்: என்ன சொன்னார்கள்.
ஆசான்: பிரித்தாளும் சூழ்ச்சியின் பித்தலாட்டக்காரன் என்றார்கள்........என்னை
மாடலன்: என்ன! அப்படியா சொன்னான் அந்த வில்லவன் கோதை.......மன்னர் ஒன்றும் மாற்றம் கூறவில்லையா?

ஆசான்: இல்லை..........ஆம் என்று தலையசைப்பதுபோல் "புறப்படட்டும் நமது படைகள், பொங்கட்டும் குறுதியாறு" என்று இரைந்தார்......

மாடலன்: வில்லவன்கோதை.......அந்த வீணன், அவ்வாறு புகன்றான்.......வில்லவன்கோதை! அடே வீணனே! புல்லேந்திய கைகள் வாளேந்தவா போகின்றன என்றா எண்ணிவிட்டாய்? புல் லேந்திய இந்தக் கரங்களை வாளேந்திய உன் கரங்களால் வணங்கச் செய்யாவிட்டால், நெஞ்சில் அணிந்திருப்பது முப்புரி நூலல்ல; முழுப் பச்சைக் கயிறு என்றுஎண்ணிக்கொள்........!

பைரவன்: குட்டுவஞ் சேரலையே நம் குக்கைக்குள் அடைத் தோம்! இவன் எம்மாத்திரம்?

ஆசான்: என்ன—?

மாடலன்: ஆம்! அதுவும் இந்த மாடலன் மதி செய்த வேலை தான்....செங்குட்டுவன் ஆட்சியோ நம் இனப்பண்பையே அழிக்கத் தொடங்கிவிட்டது. இவன் மகன் குட்டுவஞ் சேரல் இந்தக் குவலயம் ஆளத் தொடங்கினால் நாம் அழிந்தே போவோம்—! நம் இனம் மடிந்தே போகும்.......

ஆசான்: ஆம்! உண்மைதான்.

மாடலன்: அதனால்தான்.......நான் மறையாளர் பரணரை... நல்ல தமிழ்ப் புலவரை நாடினேன்......கவிபாடிக் கோடிக் கணக்கில் காசு பொன் பெறுவதைத் தடுத்துக் காவலன் மகனைக் காணிக்கை யாகப் பெறச் செய்தேன்.....அதற்காக அண்டப் புளுகெல்லாம் அவரிடம் புளுகினேன். "மண்டலமே உம் வசம்" என்றேன். எத்தனைதான் தமிழைக் கற்றாலும் இனப்பண்பை மறக்கமாட்டார் என்பதால் குட்டுவஞ்சேரலை பரணரின் மாணாக்கராக்கினேன்...... குனிந்தது தமிழ்ப் பண்பு; குன்றேறியது நமது எண்ணம் என்று கோட்டை கட்டியிருந்தேன்! நாம் ஏன் தமிழைக் கற்றோம் தமிழ்ப் பற்றினலா? தாய்நாட்டுப் பற்றினலா? இல்லை.......இல்லை....தமிழ் நாட்டிலே, நாம் வாழவேண்டும். அதற்கு ஒரே வழி தமிழைக் கற் றல்......கற்றோம். அவர்களை நம் காலடியில் வீழ்த்திவிட்டோம் என்றிருந்தேன். அந்தப் பேரெண்ணத்தின் பேரிடியாகிவிட்டான் வீணன் வில்லவன்கோதை.

## காட்சி 19

*[இடம்: குணவாயிற் கோட்டம்........இளங்கோ, வில் லவன்கோதை முதலியோர்]*

வில்லவன்: வில்லவன் கோதையை வெறுக்கிறது அந்த வேதியர் கூட்டம்.

அடிகள்: தவறென்ன? தமிழகத்தையே அவர்கள் வெறுத் தாலும் தவறில்லை. தாய்நாட்டுப் பற்று அற்றவர்களா? அவர்கள்.

ஆரியரை அழிக்கும் நம்மைப் பார்த்துப் பூரிப்பா அடைவர்?........ நாட்டுப்பற்ருல் நல்லன புரிவோம்......கயவர்களின் புன்மொழி களைக் கால் தூசெனப் போக்குவோம், வீணர்களின் பழிச் சொற் களுக்கு நாணுதவன்தான் நாட்டுக்குப் பணியாற்றும் நல்ல தொண் டன் என்பதை நாம் மறத்தல் ஆகாது....என்னைக்கூட கேட்டார்கள்,

வில்லவன் : யார்?

அடிகள் : பெயர் பைரவனும்?

வில்லவன் : ஆ....அந்த வஞ்சகனு? என்ன கேட்டான்?

அடிகள் : "கண்களை இறுக மூடி, கருத்தை ஒருமுகப்படுத்திக் காட்டில் கடுந்தவம் புரியவேண்டிய துறவிகள், நாட்டில் நடமாடுவ தேன்? சமுதாயத்தில் அரசியலில் சமவுரிமை பெற்றிருப்பதேன்?" என்று கேட்டான் அந்த பைரவன்:

வில்லவன் : தாங்கள்.......

அடிகள் : "துறவிகளைக் கேட்பானேன்? என்னையே கேட்க லாம்" என்றேன்.

வில்லவன் : உம் .... ....

அடிகள் : துறவறம்! எது துறவறம்? ஆண்டவன் அளித்த அன்பினைத் துறந்து மக்களின் அவதியினைப் போக்காதிருப்பதா? அருள்நெறி தவறி மருள் நெறியிற் புகுவதா? அன்னை நாட்டை எண்ணிப் பாராமல் அகில வாழ்வைத் துறப்பதா? உற்ருர் உறவி னர், பெற்ருர் பிறந்தார்களை விட்டு நீங்குவதா? எது துறவறம்? இதுவா துறவறம்?

ஓராயிரம் மக்களின் வாழ்க்கை உயர்விற்காக எவனொருவன் தன் இன்ப வாழ்வைத் துறக்கின்ருனோ! அவன்தான் உண்மைத் துறவி. பிறர்நலம் பேணும் பெரு முயற்சிக்காகத் தன்னலத்தைப் பேணுத வாழ்க்கை இருக்கின்றதே அதுதான் துறவற வாழ்க்கை. ஆண்டவன் வீடு பேற்றை அளிப்பான் என்றெண்ணி, அதற்குத் தன்னை மட்டும் தயாராக்குகின்ருனே, அவன்; மக்கள் மனைவி உற் ருர் உறவினர் நாடு மொழி அனைத்தையும் மறந்து கானகத்துறை கின்ருனே அவன்; தன்னலக்காரன்.

நான் கூறுகின்றேன்: நாட்டை, மொழியை, நாட்டு மக்களை நன்னெறிப்படுத்தும் தன்னல மற்ருேரே உண்மைத் துறவியர்; காட்டை யடைந்து நாட்டைப்பற்றிய கவலை சிறிதுமின்றி வாழும் அவர்கள் தன்னலவாதிகள் போலித் துறவிகள்.........." என்று புகன்றேன்.

வில்லவன் : என்ன சொன்னுன்?

அடிகள் : சொல்ல என்னவிருக்கிறது? எதையோ எதிர் பார்த்து ஏமாந்துபோன குள்ளநரியாகிப் போனுன்......

வில்லவன் : நாட்டிலே நேர்மைக்கு எதிர்ப்பு..........நீதிக்கு மறுப்பு......அறிவுக்குத் தடை......அறியாமைக்குப் பொன்னுடை....

அடிகள் : அதனுலென்ன? எதிர்ப்பில்லாக் கொள்கையும், இசை பொருந்தாப் பாடலும் ஏற்றம் பெற்றுப் பிறரால் போற்றப் படுவதில்லையே! என்றைக்கும் நல்ல கொள்கைக்கு நாட்டில் எதிர்ப் பிருக்கத்தானே செய்யும்..........இருக்கட்டும்.......வட நாட்டு வழிச் செலவு என்றைக்குத் தொடக்கம்?

வில்லவன் : நேற்றைய தினமே படைஞர் புறப்பட்டுவிட்டனர். இன்று நான் புறப்படும் தருவாயில்தான் தங்களைக் கண்டு செல்ல வந்தேன்.........வருகிறேன் அடிகளே வருகிறேன். வணக்கம்.......

அடிகள் : நல்லது.......வெற்றிபெற்று வீரராய்த் திரும்புக.... இடையில்.......

வில்லவன் : ஆம்........சில நாட்கள் நீலகிரிப் பெருமலையில்....

## காட்சி 20

[இடம் : நீலகிரி....செங்குட்டுவன் முதலியோர் வீற்றிருக்கின்றனர்....ஆரிய முனிவர்கள் ஆங்கு வந்தடைகின்றனர்.]

செங்கு : (எழுந்து நின்று) அறநெறி உணர்ந்தீர்! வருக! வருக !! வணக்கம்.

முனிவர் : செஞ்சடைக் கடவுள் சேவடி மறவா வஞ்சி நாட்டு வேந்தே வாழ்க நின் கொற்றம்!

செங்கு : அன்பு சான்றீர்! (இருக்கையைக் காட்டி) அமர்ந் தருள்க!

முனிவர் : மன்னர் மன்ன! விண்ணகத்தினின்றும் இம் மண்ண கம் நாடிவந்தோம்; வாள் வேந்தன் உமைக்கண்டு வாழ்த்துக்கூற. வாழ்க வேந்தே வாழ்க! வையகம் வாழ்த்த நீவிர் வாழ்க!

செங்கு : மண்ணகம் நாடி வந்தீர்! உம்மை வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம். துறவறநெறியினர் நாட்டின் துயர் தீர்க்கும் அருவிகளன்றோ!

முனிவர் : மன்னர் மன்ன! வாழ்க! யாம் புறப்பட வேண் டும். அதற்கு முன்னே ஒன்று கூறுகின்றோம். மன்ன! மலயத் தேகுகின்றோம் யாம். நின் விருப்பம் இமயத்தேகல் என அறிந் தோம். இமயம் சென்றால்........அருமறையோதிய அந்தணரையும் ஆண்டு வாழ்வோரையும் ஆதரிக்க வேண்டுகின்றோம். வாழ்க நின் கொற்றம்! வருகின்றோம்!!

[முனிவர்கள் புறப்படுகின்றனர்
ஒருபுறம் மகிழ்வூட்டியும், வில்லவன்கோதையும்.]

மகிழ்வூட்டி : முத்திப் பார்ப்பனர் எத்திசை புகினும்.......

வில்லவன் : ஆம் இனத்தைக் காக்கின்றனர். எங்கு சென்ருலும்.........

மகிழ்வூட்டி : ஆமாம் காக்கைக் கூட்டம் அவர்கள். நம் இனம் இருக்கின்றதே; தமிழினம்......அது நாய்க் கூட்டமாக மாறிவிட்டது. இனத்தை வாழவிடாது..........

[பணியாள் ஒருவன் இடையே புகுந்து]

பணியாள் : வாழ்க வேந்தே வாழ்க! சஞ்சயன் முதலாத் தலைக்கீடு பெற்ற கஞ்சுக முதல்வர் தங்களைக் காண வந்துள்ளனர்...

செங்கு : வரட்டும்!

[சஞ்சயன் அவையினுள் புகுதல்]

சஞ்சயன் : மன்னர் மன்ன! வாழ்க! நின் கொற்றம்!! வளர்க நின் ஆட்சி!

செங்கு : சஞ்சய வருக!

சஞ்சயன் : மன்னர் மன்ன! வேற்றுமையின்றி நின்னொடு கலந்த நூற்றுவர் கன்னரின் திறைப்பொருள்களை ஏற்றருள்க! ஏற்று மகிழ்க!!

செங்கு : மகிழ்ச்சி! சஞ்சய! வேறு செய்திகள் ஏதேனும்...

சஞ்சயன் : ஆம் அரசே! கன்னித்தமிழ் நாட்டார் கங்கையைக் கடப்பது கண்ணகியின் கற்படிமம் ஒன்றற்கே என்ருல்......ஓங்கிய இமயத்தில் கல்லெடுத்து வீங்கு நீர்க் கங்கையிலே நீர்படுத்தி, யாம் தரும் ஆற்றலம் என்றுரைத்தனர்; நட்பாளர் நூற்றுவர் கன்னர். கண்ணகியின் கற்படிமத்திற்காகக் காவல் வேந்தன் கடும் போர் புரியவேண்டுமென்பதில்லை. எங்களால் அப்பணியை ஆற்ற முடியும் தங்கள் ஆணை கிடைத்தால். பூனைக் கூட்டத்தை அழிக்க புலி வரவேண்டு மென்பதில்லை.

செங்கு : இல்லை........கண்ணகியின் கற்படிமத்திற்காக மட்டுமல்ல, கன்னித்தமிழ் நாட்டான் வடவர் நாட்டிலே காலெடுத்து வைத்தது; மங்கை யொருத்திக்கு மாலை சூட்டி மகிழ்ந்த நேரத்திலே அந்தக் கங்கை நாட்டை யாளும் கயவர்கள் கொங்கு நாட்டானைக் குறை பேசினராம்.......முறை தெரியாதவர்கள். அன்ருெரு நாள்...

## திருப்புக் காட்சி 21

[இடம் : கங்கைக் கரையில் மணப்பந்தர்—கனகன், விசயன் முதலியோர் கள்ளுண்டு மகிழ்கின்றனர். மங்கைக்கு மாலை சூட்டல் முடிகின்றது]

கனகன் : புலிக்கொடி யேந்திய புல்லர்கள்; சோணுட்டிருந்து போந்த சோம்பேறிக் கூட்டத்தார்; இமயத்தின் முகட்டிலே புலிச் சின்னத்தைப் பொறித்துச் சென்ருர்களாம். கடலந்தானை கனகன் ஆளாத அந்த நாளிலே கன்னித் தமிழ் நாட்டான் காலெடுத்து வைத்தானும் கங்கை நாட்டில்

விசயன் : ஆம்! விசயன் விழித்தெழாத அந்த நாளிலே சேர நாட்டு வீணர்கள் இங்கு வந்து வெற்றிக்கொடி நாட்டினராம். கொங்கு நாட்டுக் கோமகனை கங்கையாற்றிலே நீர்ப்படுத்தினராம்! விசயன் அந்த நாளில் இங்கு வீற்றிருக்கவில்லை; வீற்றிருந்தால் தமிழ் நாட்டார் வேலிழந்து ஓடும் அந்த வினோதக் காட்சியை; படையிழந்து நின்றிடும் அந்தப் பரிதாபக் காட்சியை; உலகம் பார்த்து சிரித்திருக்கும்....

உத்தரன் : புலி வில் கயல் கொடியை இமய நெற்றியிலே பொதித்துச் சென்ற அந்த நாளில் எம் போன்றோர் இங்கு வீற்றிருந்தால் அந்த வம்பர்கள் வலியிழந்து எம் அடிவணங்கும் காட்சியை இந்த வையகம் கண்டிருக்கும்....... எங்கள் வெற்றி வானம் எட்டியிருக்கும்.

சித்திரன் : இந்தச் சித்திரன் ஆட்சிப்பீடத்தில் அமராத அந்த நாளிலே எங்கும் புகழ் பரப்பினனும் நெடுஞ்சேரலாதன். அந்தக் கொடுஞ்சேரலாதன் இன்று வந்தால் கொடியிழந்து முடியிழந்து குனிந்து நிற்கும் காட்சியை இந்தக் குவலயம் கண்டு சிரித்திருக்கும்.

கனகன் : இன்று படையெடுத்து வரட்டும் அந்தப் பாண்டியன்.

விசயன் : போர் வேட்டு வரட்டும் அந்தச் சோழநாட்டான்....

உத்திரன் : வீரனென்றால் இப்போது நேர் வரட்டும் அந்தச் சேரநாட்டான்........

சித்திரன் : ஆரியவரசர் அயர்ந்திருந்த அந்த நாளிலே பேரிகை கொட்டிய அற்பர்கள்; படையெடுத்து வரட்டும் இந்தப் பக்கத்திலே; போரேற்று வரட்டும் அந்தச் சூரப்புலிகள். (தொடரும்)

வித்துவான். **சிங்காரவேற் சேதிராயர்**
தலைமைத் தமிழாசிரியர்
**மாநாட்டாண்மைக் கழக உயர்நிலைப்பள்ளி**
**நன்னிலம்** (தஞ்சை மாவட்டம்)

—:  :—

## வாழ்த்து

பொன்னியெனு நல்யாறு புனனுடு போர்ந்து பலகால் கொண்டோடி
இன்னினிய பல்பொருளுந்தந்து மகிழ்வூட்டி வருமியல்பே மானப்
பொன்னியெனும் நல்லிதழும் அரசுமொழி கலைமுதலாம் புகழ்மைசான்ற
பன்னரிய பலபொருளுந்தந்து நிலவுலகதனில் பரந்து வாழி!

# "கருத்திலொரு புரட்சி"

இளசை–சாமிநாதன்

—★—

அவள்எழிலே அவள்விழியும்
அழகுறவே தான்காட்டத்
தவறவில்லை; எனினுமந்தத்
தையலுளம் வெயிற்புழுவாய்
அவதியுறுங் காரணத்தை
யாரறிவார் இவ்வுலகில்?
பவமதுவே எனமொழிந்தால்
பதைக்காதோ பெண்ணுலகம்!

அறிந்தசிலர் எடுத்தியம்ப
அஞ்சுவதும் தம்முணர்வை
மறந்துபலர் மணிமொழியாம்
மங்கைதனை மாணுறுநாண்
துறந்து(ம்)அலர் தூற்றிடவே
துணிகின்றூர் எனினுலக
அறமிதுவோ என்றெண்ணி
அலருதோ பெண்ணுலகம்!

மாலைகொண்ட மன்னவனும்
மாண்டிடஅம் மங்கைதனை
ஆலையுண்ட கரும்பெனவே
அலைக்கழித்தால் இவ்வுலகப்
பாலைகண்டு பாழடைந்த
பழங்கொள்கை விலங்கொடித்துச்
சோலையண்டி இன்புறத்தான்
துடிக்காதோ பெண்ணுலகம்!

என்றுரைத்தாள் எழில்விழியாள்;
"ஏன்"என்றேன்; கூறுகின்றூள்;
"கன்மனத்தார் விதவையென்ற
கடுவிலங்கு தான்பூட்டித்
தன்னகத்தார் இடுபணிசெய்
தாமியங்கிப் பொறியெனவே
என்னினத்தார் வாழ்ந்திடுதல்
ஏற்புடைத்தோ?" எனமொழியும்!

மனமறியா இளமைகண்டும்
மணம்என்றூர்; விளையாட்டுத்
தன(ம்)நிறைந்த யானுமெந்தன்
தாயருகிற் சென்றணைந்தேன்;

புனலாட்டிப் பூமுடித்துப்
புத்தாடை புனைவித்தங்(கு)
அனலெழுந்த அகிற்புகையின்
அருகினிலே அமர்த்திட்டார்.

முடிந்ததுஎன். திருமணமும் ;
மூவிரண்டு திங்களின்பின்
'படிந்ததங்தோ பாசி'யென்று
பாவையரும் எனைநோக்க
'மடிந்ததுயார்' என்றேன் ;நின்
மணவாளன் தான்'என்றார் ;
ஒடிந்துவிழுங் கொம்பானாள்
உயிரீந்த என்தாயும்.

வேத(ம்)மிகப் பயின்றவரென்
றேநடித்தன் றெம்மிருவர்
சாதகமும் பொருந்தியதாய்ச்
சழக்குறைத்தே மண(ம்)முடித்த
பாதகரின் செயல்கண்டேன் ;
பதைக்கின்றேன் ; எனினுமின்றக்
காதகரும் எனைக்கண்டால்
'காரிகையுன் விதி'என்பார்.

வந்தவரென் தமையனென்று
வாய்திறந்தால் வளைநுழைந்து
தந்திரமாய் உடலிழுத்துத்
தலையினைமுன் தங்கவைக்கும்
அந்தமுறும் அரசமணி
அரவங்கள் எனையண்டி
''இந்தவிதம் பேசுதல்தான்
எற்றுக்கோ ?' எனமொழியும்.

எங்கெங்கோ சென்றிருந்து
இங்குவந்தேன் எழில்நிறைந்து
தெங்கங்காய் மிதந்தோடும்
தேனருவி தான்என்று ;
அங்கங்கோர் ஊசிகொண்டு
அணுவணுவாய் உடல்துளைக்க
இங்குள்ள யாவருமே
ஏதேதோ உரைக்கின்றார்.''

என்றழுதே எழுந்திருந்தாள்
'எங்கெ'ன்றேன் ; தாய்பிரிந்த
கன்றதுபோற் கதறிஎந்தன்
''கருத்திலொரு புரட்சி''செய்தே
அன்றகன்ற அவளுலகில்
அகங்களிக்க வாழ்ந்திடு(ம்)நான்
என்றென்றே என்மனமும்
ஏங்கிடுதென் செய்திடுவேன்.

## செய்தித் திரட்டு

**ஜில்லா போர்டு தேர்தல்!**

சென்னை மாநிலத்தின் ஜில்லா போர்டு தேர்தல்கள் ஆகஸ்டு 29-ம் நாள் தொடங்கி அக்டோபர் இறுதிக்குள் முடிவடைகிறது. தேர்தல் முடிவுகளும் உடனடியாகத் தெரிந்துவிடும்.

**நிறவெறியை எதிர்த்து மா-செ-துங்!**

நிறவெறியை எதிர்த்து தென்னுப்பிரிக்காவில், ஜனநாயக உரிமைகளுக்காக வெள்ளையரல்லாதார் நடத்திவரும் அறப்போராட்டத்தை ஆதரித்து மக்கள் சீனுவின் அதிபர் மா-செ-துங் ஒரு செய்தி அனுப்பியுள்ளார்.

**பிச்சைக்காரர்களை ஒழிக்க!**

சென்னை மாநிலத்தில் உள்ள முக்கிய ஊர்களில் பிச்சைக்காரர்களை ஒழிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சென்னை மேயர் தலைமையில் கூடிய சுற்றுப் பயணப் போக்குவரத்து ஆலோசனைக் கமிட்டி ஒரு தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறது.

**அரை டிக்கட்டுப் பிரச்னை!**

ரயில் வண்டிகளில் உள்ளது போலவே பஸ்களிலும் மூன்று வயது முதல் 12 வயது வரை உள்ள இளைஞர்களுக்கு அரை கட்டணம் வசூலிப்பது பற்றி அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

**கல்வி நிலை உயர!**

அரசியல் வாதிகள் தலையீட்டால்தான் நமது குழந்தைகளின் கல்வி அடிக்கடி சீர்கெட்டுப் போய் இருக்கிறது என்றும், அரசியல்வாதிகளும், அரசியல் அதிகாரம் படைத்தவர்களும் தலையிடாமல் ஒதுங்கி நின்று கல்வி நிபுணர்களின் கருத்துக்கு மதிப்பளித்தால் நாட்டின் கல்வி அமைப்பு மிகவும் பயனுடையதாக அமையுமென்று டாக்டர் லட்சுமணசாமி முதலியார் சென்னை மாநில 44-வது கல்வி மாநாட்டு தலைமையுரையில் தெரிவித்தார்.

**மருத்துவர் கோரிக்கை!**

மருத்துவ சங்கத்தினர் முதன் மந்திரி காமராஜரை சந்தித்து தங்களுக்கு உள்ள குறைகளை தெரிவித்ததுடன் பல லட்சம் மக்களைக் கொண்ட மருத்துவர் சமூகத்திற்கு சென்னை மேல் சபை

---

### குமாரவேல் மறைந்தார்

கல்லக்குடி அறப்போராட்டத்தில் கலந்துகொண்டு கலைஞர் மு. கருணநிதியுடன் ஆறுமாத சிறைதண்டனை அனுபவித்துவிட்டு வெளிவந்த மணப்பாறை குமாரவேல் எனும் 23 ஆண்டுகளே நிரம்பப்பெற்றத் தோழர் சிறை தந்த தீரா வியாதியால் உடல் நலங்கெட்டு கடந்த 27-5-54ல் சாவால் கொத்திச் செல்லப்பட்டார் எனும் செய்தி கேட்டு வருந்துகிறோம். அவரது உடல் அடக்கத்தன்று சுடலையில் எல்லா இயக்கத்தினரும் கலந்துகொண்டு தங்களது இறுதி வணக்கத்தைத் தெரிவித்தனர். அவரது நினைவாக மயானக் கரையில் ஊராட்சி மன்றம் புதிய குழாய் ஒன்றைத் திறந்துவைத்தது. அண்மையில் அவருக்கு நினைவுக் கல்லும் நாட்டப்பட்டது.

---

யில் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் மகஜர் மூலம் தெரிவித்துள்ளனர்.

**இலங்கைத் தமிழர் நிலை !**

இலங்கைவாழ் இந்தியர் சம்பந்தமாக சென்னை அரசாங்கத்தின் கருத்தை அறியும் பொருட்டு மத்திய அரசாங்கத்தின் அதிகாரி ஒருவர் அனுப்பப்படுவார் என்ற செய்தி கிடைத்திருக்கிறது.

**லோகியாவின் விலகல் !**

தோழர் ராம் மனோகர் லோகியா, பிரஜா – சோஷியலிஸ்ட் கட்சியிலிருந்து விலகிக்கொள்வதாக அறிவித்துள்ள செய்தி கிடைத்திருக்கிறது.

**டிராம் மீண்டும் ஓட !**

டிராம்களை ஓட்ட நகராண்மைக் கழகம் முன்வராவிட்டால் தனிப்பட்ட கம்பெனியிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைப்பதுபற்றி கவனிக்கப்படும் என்று ஒருபேட்டியில் காமராஜர் தெரிவித்தார்.

**இலங்கை சட்ட சபையில் இந்தியருக்கு இடம் !**

இலங்கை சட்ட சபையில் இந்தியருக்கு நான்கு இடங்கள் ஒதுக்கப்படும் மசோதா ஒன்றை கொத்தலவாலா தாக்கல் செய்துள்ளார். இந் நால்வரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை இலங்கை மக்களாகப் பதிவு செய்துகொண்டவர்களுக்கே உண்டு.

**புதிய வாரத்தாள் !**

கவிஞர் கண்ணதாசன் 'தென்றல்' வார இதழின் ஆசிரியராகவும், பதிப்பாளராகவும் சென்னை மாநில மாஜிஸ்ட்ரேட் முன்பு பதிவு செய்துகொண்டுள்ளார். தி. மு. கழகக் கொள்கைகளைத் தாங்கி வெளிவர இருக்கும் தென்றலின் முதல் இதழ் நிகழும் திங்கள் 22-ம் நாள் நாடெங்கும் கிடைக்கும்.

**புதிய போலீஸ் ஐ. ஜி.**

சென்னை மாநில போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலாக இதுவரை பணியாற்றி வந்த ஜே. தேவசகாயம் மைசூருக்கு மாற்றப்பட்டதால் அவரது இடத்திற்கு வி. ஆர். ராஜரத்தினம் புதிய ஐ. ஜியாக பதவி ஏற்றார்.



கீரன் : பாண்டியா எங்கே உன் பாட்டி?

பாண்டியன் : சொர்கவாசலுக்கு போயிருக்கா!

கீரன் : என்னப்பா பாட்டியை அப்படி சொல்லுற!

பாண்டியன் : ஆமாப்பா உண்மைதான் "சொர்க்கவாசல்" சினிமாபார்க்க போயிருக்கா!

# உண்டோ பயன்?

எழில்வேந்தன்

பண் : சார்கேசரி  தாளம் : ஆதி

எடுப்பு

உரிமையைப்பெற் றேமென்றுவப்படைந் தாலும்
உண்டோ பயன் சொல்வீர் உலகில்  (உரிமை)

தொடுப்பு

பெருமையை அழித்திடும் பேதைமைச் செயல்புரிந்து
சிறுமைதனை அடைந்து சீரழியும் வகையில்  (உரிமை)

முடிப்பு

எண்ணுடனே எழுத்துமின்றி மக்கள்
கண்ணிலிகளாய் கருத்தற்று வாழ்க்கையிலே
உன்னி இதை நீக்க உருவான திட்டங்கள்
எண்ணிச்செயல் புரிந்து ஏற்றம்பெரு நிலையில்  (உரிமை)



# மாணவர்களும் பொது வாழ்வும்!

★

சோழன்

★

நம் நாட்டில், இளைஞர்கள்—சிறப்பாக மாணவர்கள் 'பொது வாழ்வு' என்றால் ஏதேனும் ஓர் அரசியல் கட்சியில் சேர்ந்து கொண்டு, பொது மேடையில் ஏறி, எதையாவது பேசுவது என்று கருதுகிறார்கள். தங்கள் பெயர் பத்திரிகைகளில் வர வேண்டுமென்றுபெரிதும் விரும்புகிறார்கள். இந்த ஆவலின் தூண்டுதலால், தங்கள் படிப்பைப் பாதியிலே நிறுத்திக் கொண்டு அரசியலிலே குதித்து விடுகிறார்கள். இது விரும்பத் தக்கதுமல்ல; வரவேற்கக்கூடியதுமல்ல. ஏனெனில் அரசியல் கட்சிகளிலே புதிதாகச் சேர்கின்றவர்கட்கு, அதிலும் இளைஞர்கட்குத் தரப்படுகின்ற ஆரம்ப விளம்பரத்தைப் பார்த்துப் பூரித்துப்போகிற மாணவர்கள், பெருவாரியான அளவிற்கு இம்முறையைப் பின்பற்றத் தொடங்கிவிட்டால் நாட்டில் அரைகுறைப் படிப்பாளிகள்தானே அதிகம் மலிந்துவிடுவார்கள்! இப்படிப் பட்டவர்களாலேயே நாடு நிரப்பப்பட்டுவிட்டால், பொதுவாக நாட்டின் தரமே குறைந்துவிடுமல்லவா? எனவே, மாணவர்கள் தங்கள் படிப்பு முடியும்வரை அரசியல் மோகினிகளின் வலையில் வீழ்ந்துவிடாமல் மிக எச்சரிக்கையாக இருக்கவேண்டும்! ஆனால் அதே சமயத்தில் இந்த மோகினிகளை, மாணவர்கள் சரியாகப் புரிந்து கொள்ளவும் வேண்டும்! புரிந்துகொள்வதிலே ஆர்வமும் உற்சாகமும் காட்ட வேண்டும்! அரசியலைப் பற்றி ஏதும் அறிந்துகொள்ளாமல் புத்தகப் புழுக்களாகவே (Book Worms) இருந்து விடக்கூடாது! இப்படிப்பட்டவர்களால் நாட்டிற்கேயன்றி அவர்கட்கும் எவ்வித பயனுமில்லை!

பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் நல்ல முறையில் கழிக்கப்படுகின்ற ஒவ்வொரு நாளும், அவர்களுக்கும்—அவர்கள் தம் நாட்டிற்கும் உலகிற்கும் உள்ள தொடர்பினைச் சீரிய முறையில் தெரிந்துகொள்ளுகின்ற வாய்ப்பினைத் தருகின்றது. பள்ளிப் பருவத்திலே, தங்கள் பாடப்புத்தகங்களை மட்டுமே படிப்பதோடு நின்றுவிடாமல், நூல் நிலையத்திலுள்ள பலதரப்பட்ட அறிவியல் நூல்களைப் படித்துப் பயன்பெற வேண்டும். மாணவப் பருவம், வாழ்க்கையிலேயே மிக மகத்தான பருவம்! மனக் கவலை இல்லாத—இருக்க முடியாத பருவம்! எனவே ஏராளமாகப் படிக்கமுடியும். படித்தவற்றை அப்படியே தன்னகத்தே நிறுத்திக் கொள்ளவும் முடியும். அப்படிப்பட்ட மகத்தான மாணவப் பருவத்தை விரைவில் முடித்துக்கொண்டு வாழ்வில் இறங்க, யாரும் முயற்சிக்கக்கூடாது. கூடாததுமட்டுமல்ல, அப்பருவத்தை மிகப் பெரும் அளவிற்கு இலாபகரமாகவே பயன் படுத்திக் கொள்ளவும் வேண்டும்.

ஆங்கில ஆசிரியர் சிசரோ (Cicero) என்பாரும் 'புத்தகங்களைப் படிப்பது தான் இளைஞர்கட்குச் சரியான ஊட்டம் (போஷாக்கு)!' (Study of Letters is the nourishment of our youths) என்கிறார்.

மாணவர்கள் தங்கள் வாழ்வை, பண்பாட்டை, நாகரிகத்தை, கலாச்சாரத்தை, பழக்க வழக்கங்களை உயர்த்திக் கொள்ளவேண்டுமானல், முதலில் தங்கள் நாட்டின் வாழ்வு, பண்பாடு, நாகரிகம், கலாச்சாரம், பழக்க வழக்கம் இன்ன பிறவற்றினைப் புரிந்து கொள்ள வேண்டும்! இதற்கு நாட்டின் பண்டைய இலக்கியங்களை, அற நூல்கள், அறிவியல் நூல்கள் ஆகியவற்றைப் புரட்டிப் புரட்டிப் படிக்கவேண்டும்! படித்து, அவற்றினை அறிவிலே ஏற்றுக் கொண்டு, அந்தப் பண்டைய பண்பாட்டிற்குக் கேடு சூழாத வகையில் நல்ல பழக்க வழக்கங்களையே மேற்கொள்ள வேண்டும்! மாணவர்கள் தாங்கள் பிறந்த மண்ணை—நாட்டை—நாட்டின் வரலாற்றை ஊன்றி ஊன்றிப் படிக்க வேண்டும். நாட்டின் வரலாற்றிலே எங்கெங்கு வளைவு நெளிவுகள் காணப்படுகின்றனவோ அங்கெல்லாம் உன்னிப்பாகக் கவனிக்கவேண்டும். கவனித்து, அந்த வளைவு நெளிவுகட்கு யார்—எந்த சூதுமதியினர் பொறுப்பாளி என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்! அந்தச்சூதுமதியினர்களிடம் எச்சரிக்கையாக நடந்து கொள்ளவேண்டும். வரலாறு ஒரு அற்புதமான தொடர் நாவல்! மீண்டும் அப்படிப்பட்ட வளைவு நெளிவுகள் ஏற்படா வண்ணம் கண்காணித்துக் கொள்ளவேண்டும்.

மாணவர்கள் எதையும் 'ஏன்?' என்ற உரைக்கல்லில் உரைத்துப் பார்க்க வேண்டும்! (Try to learn the 'why' of things) என்கிறார் ஐசனேவர்! தங்கள் மாட்டு தரப்படுகின்ற எல்லா செய்திகளின்பேரிலும்—ஏன்? எப்படி? எதற்காக?—என்பன போன்ற வினக்களை வாரி வீசி விடைகளைத் தேடிப்பிடிக்க வேண்டும். விடைகள் இல்லாத இடத்து—தரமறுக்கப்படுமிடத்து—அந்தச் செய்திகளை ஏற்றுக்கொள்ளவே கூடாது.

"எப்பொருள் எத்தன்மைத்
தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு"
"எப்பொருள் யார்யார் வாய்க்
கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு"

என்கிறார் வள்ளுவரும்! தரப்படுகின்ற செய்திகளை யெல்லாம் ஏற்றுக்கொள்வது என்று ஆரம்பித்தால் மூளை ஒரு குப்பைத் தொட்டியாகத்தானே காட்சியளிக்கும்!

ஆகவே எதற்கும் அறிவுப் பொருத்தம் இருக்கிறதா என்று பார்த்த பிறகே ஏற்றுக் கொள்

**சந்தாதாரர்களுக்கு:**

அலுவலகத்திற்கு எழுதும் கடிதங்களில் தங்கள் சந்தா எண்ணைக் குறிப்பிடுதல் நலம்.

—பொறுப்பாளர்.

கிற பண்பை மாணவர்கள் பெருவாரியாகப் பெருக்கிக் கொள்ள வேண்டும். 'இது விஞ்ஞான காலம், ஒவ்வொரு நம்பிக்கையும் பகுத்தறிவு என்னும், தொடு கல்லிலே வைத்துச் சோதிக்கப் படுகிறது!' (This is an age of Science. Every faith is being tested on the touchstone of reason) என்று பெரியார் ஒருவர் கூறியுள்ளார். எனவே மாணவர்கள் குருட்டு நம்பிக்கையை அறவே விடுத்து, பகுத்தறிவைப் பெருக்கிக் கொள்ளவேண்டும். 'எதையும் நம்பிக்கையின் காரணமாக ஒப்புக்கொள்ளாமல், சோதனை செய்து பார்த்த பிறகுதான் ஒப்புக்கொள்ளக் கற்றுக்கொண்டிருக்கிறான் விஞ்ஞான மனிதன்.' (The man of Science has learned to believe in justification not by faith but by verification) என்று கூறுகிறார் மேல் நாட்டு ஆசிரியர் ஹக்ஸ்லி!

பொதுவாழ்வு என்றால் ஏதோ உல்லாசமாகக் காலங் கழிப்பது என்று சிலர் தவறாகக் கருதுகிறார்கள். ஆனால் காண்டேகர் கூறுகிறார் 'பொதுத் தொண்டு என்பது இனிமை தரும் கனவல்ல; கசப்பான உண்மை!' என்று. இளைஞர்கள் இந்த உண்மையைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் பொது வாழ்வில் குதித்து விடுகிறார்கள். சொந்த வாழ்விற்கு வழி இருப்பவர்கள் அரசியலிலே முழுநேரத்தொண்டு புரிவதில் நமக்குத் தடையேதும் இல்லை! ஆனால் சொந்த வாழ்வை தங்கள் உழைப்பின் மூலம்தான் நடத்திக்கொள்ள வேண்டும் என்ற நிலையில் உள்ளவர்கள் அதனைக் கெடுத்துக் கொண்டு பொது வாழ்விலே இறங்கி இறுதிவரை அல்லல் உறுவது சரியல்ல! இப்படிப் பலர் இருப்பதை நாம் அறிவோம்! 'பொதுத் தொண்டு சொந்த வாழ்வோடு இணைந்து போகவேண்டும். சொந்தவாழ்வும் நாட்டுப்பற்றும், சரியான முறையில் நோக்குமிடத்து, எதிர்ப்பட்ட கொள்கைகள் அல்ல! இரண்டும் கூட்டாளிகளே! (Never forget that self Interest and patriotism, rightly considered, are not contradictory ideas. They are partners.) என்று அழகாகக் கூறுகிறார் அமெரிக்க நாட்டுத் தலைவர் ஐசனோவர்!

எனவே, மாணவர்கள் தங்கள் படிப்பு முடிந்த பிறகு, நாட்டிற்கு முழுநேரத்தொண்டாற்ற இயலாதவர்கள் (இப்படிப்பட்டவர்கள் தான் மிகப்பலர்) தங்கள் வாழ்வை ஒரு துறையில் அமைத்துக் கொண்டு, ஓய்வு நேரங்களில் தங்களாலான தொண்டினை, இயன்ற அளவு சமுதாயத்திற்குச்செய்யலாம். தமது உதவியை நாடுவோருக்கு உதவுதல்; தம்மிடம் மாறுபட்ட கருத்துக்கொண்டவர்களிடம் அன்புடனும் அனுதாபத்துடனும் நடந்துகொள்ளல்; ஒவ்வொருநாளும் தம் வேலையை முன்னைய நாளைவிடத் திறம்படச் செய்தல் போன்ற பணிகளில் ஈடுபடலாம்! இப்படிப்பட்ட பணிகள் யாவும் பொதுத் தொண்டாகவே தான் கருதப்பட வேண்டும் —கருதப்படும்! ஆகவே, இளைஞர்கள்—சிறப்பாக மாணவர்கள் இவற்றையெல்லாம் நன்றாக சிந்தனை செய்து பார்த்து, தீர எண்ணி, தங்கள் நிலைமைக்கேற்ப, தக்கவாறு நடந்துகொள்வார்களாக! *




# குத்தகை நிலம்

புதுவை சுப்பிரமணியன்

திருவேங்கடத்திற்கு ஐந்து ஏக்கர் நிலம் இருந்தது; தியாகத்தின் பரிசாகப் பெற்றதல்ல. ஐந்து ஏக்கர் என்றதும் இந்நாளில் அந்நினைவு வருவது இயற்கை; ஆனால் திருவேங்கடமோ தியாகம் என்றால் எப்படி இருக்கும் எங்கு கிடைக்கும் என்று கேட்கக் கூடியவர். அது அவராக உழைத்துச் சம்பாதித்ததுமல்ல; அப்படியிருந்தால் அதைக் கண்ணுங் கருத்துமாகப் போற்றி வரமாட்டாரா? அது பரம்பரைச் சொத்து! அதனால் தானோ என்னவோ அவர் அதை வட்டிக்குவிட்ட முதலாகக் கருதி வந்தார். நிலம் விளைந்தால் லாபம்! விளையாவிட்டால் நஷ்டம் ஒன்றும் இல்லையல்லவா? நிலத்தைக் குத்தகைக்கு விட்டிருந்த அவருக்கு இதே எண்ணந் தான்!

அவரைப் பொறுத்தவரை நஷ்டமில்லை என்பது உண்மைதான்! ஆனால் அந்த நாளிலிருந்து அதனோடு தன் வாழ்க்கையைப் பிணைத்துக் கொண்ட உழவன் மாடசாமிக்கு?....பாவம்! அவன் தான் அந்த நிலத்தைக் குத்தகைக்கு எடுத்திருந்தான். ஐந்தாண்டுகளாக அவன் வாழ்வில் மண்ணைப்போட்டு வந்த அந்த நிலத்தின்பால் இன்னும் அவன் மதிப்பு வைத்திருந்தான். விளைந்துவிட்டால் பலன் கிடைப்பதில் அந்த நிலத்துக்கு இணை கிடையாது என்பது அவன் நினைப்பு. அப்படிப்பட்ட அருமையான மண்ணும் அது. "கிளி கொஞ்சும் நிலமுங்க" என்று அவனுக்கேயுரிய தோரணையில் அதைப் புகழ்ந்து கூறுவான்.

அவன் கூறுவதில் உண்மையில்லாமற் போகவில்லை. அப்போது கதிரொரு முழங்காணும் நிலமாகத்தான் அது இருந்தது. ஒவ்வோராண்டும் தவறாது குத்தகையின்படி மூன்று வண்டி ஏற்றிக் கொண்டு செல்வான் மாடசாமி. ஒரு மரக்கால் கூடப் பிசகாது அளந்து கொடுத்தபின் கொள்கை நிறைவேறிய வீரனைப் போல் அவன் முகம் மலரும். திருவேங்கடம் மட்டும் அவனைச் சும்மா அனுப்புவாரா?

அவனுக்குப் பிடித்த மீன் குழம்போடு விருந்து நடத்தி, பரிசாகப் புத்தாடை கொடுத்து மனநிறைவோடு அவனை வீட்டிற்கனுப்புவார். புது வேட்டியுடுத்துப் புதுத்துண்டை முண்டாசு கட்டிக் கட்டை வண்டிமேல் கம்

பீரமாக அமர்ந்து, ஏதோ ஒரு கிராமியப் பாட்டை முணு முணுத்த வண்ணம் யாரோ ஒரு சிற்றரசன் நகர்வலம் வரும் தோரணையில் அவன் வீடு திரும்புவதைப் பார்க்க வேண்டுமே! கம்பர் பார்த்தால் மாடசாமி உலா ஒன்றுகூடப் பாடிவிடுவார்.

இது அன்று! இன்று எல்லாம் பழங்கதையாகி விட்டது.

இன்று அவன் தலையைச் சொரிந்து கொண்டு பாளம் பாளமாய் வெடித்துக் கிடக்கும் நிலத்தைப் பார்த்துப் பார்த்து ஏக்கப்பெரு மூச்சுக்கள் விடுவதைக் காணும்போது யாருக்கும் இரங்கற்பா பாடவே தோன்றும். வானம் ஒரேயடியாகச் சதி செய்து அவன் வாழ்வைக் குட்டிச் சுவராக்கிவிட்டது.

அது வானம் பார்த்த பூமி! கிராமத்தின் கீழ்க்கோடியிலுள்ள ஏரியிலிருந்து பிரியும் கிளைக்கால் வாய் ஒன்று அதற்கு நீரளித்து வந்தது. ஏரியோ பருவமழை பெய்தால் ஏரியாகத் தோற்றமளிக்கும்; இன்றேல் ஆடுமாடுகள் மேயும் பொட்டலாக மாறிவிடும். இத்தகைய இடத்தில் வானம் தொடர்ந்து வஞ்சனை செய்தால் வளமான பூமிதான் என்ன செய்ய முடியும்? அது மாடசாமியை வாடவைத்து விட்டது. அவ்வப்போது வானத்தை அண்ணாந்துபார்த்து மாடசாமி மனம் உடைந்துபோவான்; என்றாலும் அவனுடைய நம்பிக்கை இற்று விடவில்லை.

வாழ்க்கை என்பது ஓர் சூதாட்டம் என்பார்கள். அக்கூற்று மாடசாமியின் வாழ்வில் நூற்றுக்கு நூறு உண்மையாக இருந்தது. சூதாட்டத்தில் தொடர்ந்து தோற்றுக் கொண்டிருப்பவனுக்கு எழுந்து செல்ல மனம் வராது. ஒவ்வொரு முறை தோற்கும்போதும் அடுத்த ஆட்டத்தில் இழந்த பணத்தையெல்லாம் மீட்டுவிடலாம் என்றே அவன் நினைப்பான். அந்த நம்பிக்கையிலேயே அவன் மனம் உறைந்துகிடக்கும். மாடசாமிக்கு வாழ்வில் அத்தகைய பிடிப்புத் தான் இருந்தது.

ஒரு சமயம் திடீரென மழை பெய்யும்! அதற்கென்றே காத்திருந்தவன்போல மாடசாமி தாமதமின்றி நாற்றுவிட்டு விடுவான். அதன்பின் பிடுங்கி நடுவதற்கு நாட்களை எண்ணிக் கொண்டே வருவான். எண்ணிக்கைதான் வளருமே யொழிய எண்ணம் நிறைவேறாது. கடைசியாக அவன் நாற்றுவிட்ட பலன் மாடுகளுக்கு இரண்டு மூன்று நாள் தீனி கிடைப்பதோடு சரி! அடுத்த ஆண்டு கூடவா வானம் பொய்த்துவிடும் என்று இறுதியில் மனத்தைத் தேற்றிக் கொள்வான் அவன்.

அடுத்த ஆண்டு வரும். தொடர்ச்சியாக ஒரு வாரம் மழை கொட்டு கொட்டென்று கொட்டும், ஏரியிலே பெருத்த அளவில் தண்ணீர் வந்து விடும். நெற்பயிர் தோன்று முன்னரே மாடசாமியின் நம்பிக்கைப் பயிர் வளர்ந்திருக்கும். எருவிட்டு, நாற்றுவிட்டு, உழுது, நட்டு முடிந்த பின்னரும் ஒரு மாதம் வரையிலும் தண்ணீர் தேவைப்படும். அப்போதுதான் வானம் வேண்டுமென்றே வஞ்சனை செய்யும். ஏரியைப் பார்த்தால் ஒரே பொட்டலாய்க் காட்சியளிக்கும். கடைசியில் அந்தஆண்

டும் நிலத்தில் மாடுகளை விட்டு மேய்க்கவே நேரும்.

சென்ற ஐந்தாண்டுகளாக இதே நாடகம். மாடசாமியின் உடைமை முழுவதும் எரு உருவாக மாறி அந்த நிலத்தில் கிடந்தது. ஒரு முறை வானம் கருணை காட்டினால் போதும்! காலந்தவறாது விளைவுக்கேற்றவாறு பெய்யும் ஒரே ஒரு மழை! அதுவே போதும்! நிலத்தில் எருவாகப்போட்ட பணத்தையெல்லாம் மீட்டுவிடலாம் என்பது அவன் நம்பிக்கை.

என்னவோ அந்த ஆண்டில் மாடசாமியின் நம்பிக்கை மலை போல் வளர்ந்திருந்தது. அந்த ஆண்டில் மழைக்குப் பஞ்சமில்லை என்ற பஞ்சாங்கக் கூற்றை யாரோ அவனுக்கு விளக்கமாக எடுத்துச் சொல்லியிருந்தார்கள். அது மட்டும் காரணமல்ல! என்னவோ அவனுக்கு அசாதாரண நம்பிக்கை. அந்த ஆண்டில் கண்டிப்பாகத் தன் நிலம் விளைந்துவிடும் என்று உறுதி கொண்டிருந்தான்.

## 2

உச்சி வெயில் கொளுத்தியது. குடிசைக் கதவில் சாய்ந்தபடி கணவன் வரவை எதிர்பார்த்திருந்தாள் செல்லாயி. காலையில் வெறும் வயிற்றோடு போனவன் இன்னும் திரும்பவில்லையே என்ற ஏக்கம் அவள் முகத்தில் வெளிப்பட்டது, மழைக் காளான்கள் போல இங்கொன்றும் அங்கொன்றுமாக ஒழுங்கின்றித் தோன்றிய குடிசைகளைத் தாண்டிச் சாலைவரை வந்து பார்வையை ஓட்டினாள்.

சாலை மணல் கனலைக் கக்கியது. அந்த வெயிலில் பிறந்த மேனியுடன் குடியானவச் சிறுவர்கள் இங்கும் அங்கும் ஓடி ஆடித்திரிந்தனர். சாலையின் புறத்தேயுள்ள புளிய மரங்கள் அனலில் குளிர்காய்வதைப் போல் அசைவின்றி இருந்தன. மர நிழலில் கிழவியொருத்தி ஈக்களும் கொசுக்களும் புடைசூழக் கிழங்கு விற்றுக் கொண்டிருந்தாள். கிழவியின் பக்கத்தில் போய் நின்று கொண்ட செல்லாயிக்குப் பாலையாய்த் தெரிந்த சாலையின் கோடியில் தனி ஆள் வருவது தெரிந்தது. நடையிலிருந்தே அவன் மாடசாமிதான் என்பதை அறிய அவளுக்கு அதிக நேரமாகவில்லை.

விதை தயார் செய்வதற்காகப் பக்கத்துக் கிராமத்துக்குச் சென்றிருந்தான் மாடசாமி. போன காரியம் பழந்தான் என்பது அவன் நடையிலிருந்தே தெரிந்தது.

செல்லாயி விடு விடென வீட்டிற்கு வந்தாள். கிணற்றடிக்குப்போய் செம்பில் தண்ணீர் மொண்டு காத்திருந்தாள். முண்டாசை அவிழ்த்து முகத்தில் வழிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டே மாடசாமி கொல்லைப் பக்கமாக வந்தான்.

"என்ன? பழந்தானே?" என்றாள் செல்லாயி.

"பழந்தான்! என்னவோ மாரியாயி கருணையாலே எல்லாம் இதே போல முடிந்தால் நிலம் பவுனாக விளைந்து விடும்."

செல்லாயி உள்ளே வந்து கூழைக் கரைத்து வெங்காயத்தை எடுத்து வைத்தாள். மாடசாமிக்கிருந்த பசியில் கூழ் தேவாமிர்தமாக இருந்தது. அவன் சுவைத்

துக் குடித்தான். இடையிலே பலமான காற்று வீசக் கூரையிலிருந்து பொல பொல வெனத் தூசு விழுந்தது. கலயத்தின் வாயைக் கையால் மறைத்தபடி மாடசாமி சுவரோரமாக நகர்ந்தான்.

"இதோ பாரு!" என்றாள் செல்லாயி!

அவன் அவளைப் பார்க்கவில்லை. ஏக்கத்தோடு கூரையைப் பார்த்தான். பெயருக்குக் கூரையென்றிருந்தது அது. கீற்றிலுள்ள ஓலைப் பகுதியெல்லாம் நீங்கி எஞ்சிய வெறுங் குச்சிகள் மட்டும் சிலந்திக் கூட்டைப் போலத் தோற்றமளித்தன.



கணவன்:—அந்தப் பிச்சைக்காரன் உன்னை என்னமோ புகழ்ந்தானே, என்ன?

மனைவி:—ஒரு காலணா போடுங்களேன். உங்களைப் பார்த்தா தேவதை மாதிரி இருக்கேன்னு சொன்னான்.

கணவன்:—ஐயோ பாவம்! குருடன் போல இருக்கு.

"இந்தத் தடவையாகிலும் கூரையைப் பிரித்துக் கட்டலே! அப்புறம் நாம் இங்கிருப்பதை விடக் களத்து மேட்டிலே போய்க் குடியிருக்கலாம்!" என்றாள் செல்லாயி.

"பாரேன்! இந்த வருஷம் நிலம் விளையத்தான் போகுது. கூரையைப் பிரித்துக் கட்டத்தான் போறேன்! அது மட்டுமா? அடகு வைத்திருக்கும் உன் கம்மலை மீட்கப் போறேன்! அப்புறம் நீ முன்பு கேட்டாயே அந்தச் சேலை...."

"ஆமாம்! கம்மலும் கண்டாங்கியும் இல்லாமல்தான் எனக்குக் குறையாய்ப் போய்ச்சு!" என்று அலுத்துக் கொண்டாள் செல்லாயி.

"அடே! வேறென்ன குறையாம் என் ராசாத்திக்கு!" எனக் கிண்டலாகச் சொல்லி விட்டு மாடசாமி கை கழுவச் சென்றான்.

வெளியிலிருந்து மாடசாமி என்னும் குரல் கேட்டது.

"வாங்க! உள்ளார வாங்க மாமா!" என்று வரவேற்றாள் செல்லாயி!

தலை நரைத்த கிழவர் உள்ளே வந்து அமர்ந்தார்.

"அண்ணாரு எங்கே இந்த வேளையிலே!" என்று கேட்டுக் கொண்டே தோட்டத்திலிருந்து வந்தான் மாடசாமி.

"கொல்லைப் பக்கமாகப் போய் வரேன் தம்பி! ஆமாம்! என்ன? நான் கேள்விப்பட்டது நிசந்தானா?"

"என்னது?"

"என்னவோ கருப்பன் சொல்லிக்கிட்டிருந்தானே; உங்க ஐயா கொல்லையை வித்துடப் போவதாக"

"என்ன?....கொல்லையை வித்துடப் போருரா?...."

"அப்படின்னு உனக்குத் தெரியாது! அதுதானே கேட்டேன்; தெரிந்தால் எனக்குச் சொல்லியிருப்பாயே!"

"இருக்காது அண்ணு! அப்படியென்ருல் என்னிடம் சொல்லியிருப்பாரே!"

",எதற்கும் தெரிஞ்சுக்கலாமுன்னுதான் வந்தேன்; சரி; நான் வரேன்!"

"இருங்க அண்ணு! செல்லாயி! அண்ணுருக்குக் கொஞ்சம் கூழ் வாரேன்!"

"இருக்கட்டும் தம்பி! நான் வாரேன்!"

கிழவர் அவனுக்குச் சொந்தமல்ல; பயிர்த் தொழிலில் அவனுக்கு ஆசிரியர்; உழுதுண்டு வாழும் பரம்பரையில் அவனுக்கு முன்னேடி! அவனிடம் தனிப்பட்ட அன்பு கொண்டவர். அவர் சென்ற பிறகு மாடசாமி மன அமைதி யின்றித் தவித்தான்.

"ஏன் இருக்காது?............பின் எப்படி அந்தப் பேச்சு இங்கு வந்தது?............ஒருகால் அதுவே உண்மையாக இருந்தால்.........தீயில்லாமல் புகை யெழும்புமா? ஐயோ! அது மட்டும் உண்மையாளுல் அவன் வாழ்வு என்னுவது?....அவன் கட்டிய கோட்டைகள்..."

மாடசாமிக்கு இருப்புகொள்ளவில்லை. அவன் அப்போதே கிளம்பிச் சென்று உண்மையை அறிந்துவரத் துடித்தான். காலையில் போய் வந்த களைப்போடு மீண்டும் பத்துமைல் தொலைவு நடந்து போய் வருவது அவனுக்குப் பெரிதல்ல; ஆனல் செல்லாயிதான் விடியலிற் போகலாமென்று சொல்லி அவனைத் தடுத்து விட்டாள்.

## 3

காலைச் சிற்றுண்டியை முடித்த பின் கணக்குப் புத்தகங்களோடு வந்தமர்ந்தார் திருவேங்கடம். ஒரு வாரத்து வருமானத்தில் இரு நூறு ரூபாய் இடித்தது. அதைச் சரி செய்யும் நோக்கத்தில் வீட்டிலே சாவகாசமாகப் பார்க்கலாம் என்ற எண்ணத்தோடு கணக்குப்புத்தகங்களை வீட்டுக்கு எடுத்து வந்திருந்தார்.

அந்த ஊர்ப்பெரு வணிகர்களில் அவர் ஒருவர். ஊரிலே பெரிய பலசரக்கு மண்டி அவருடையது. விற்பனை மொத்தமாகவும், சில்லறையாகவும் தனித்தனியே நடைபெற வசதியுடையது அங்கே அது ஒன்றுதான். முதலில் அது சிறிய கடையாகத்தான் இருந்தது. நாளடைவில் திருவேங்கடம் அதைத் தம் உழைப்பாலும் திறமையாலும் அவ்வளவு பிரபலமடையச் செய்துவிட்டார். அவரைப் பெரிய மனிதராக்கிய அக்கடையை இன்றும் அவர் தம் உயிருக்குச் சமமாக மதித்து வந்ததில் வியப்பில்லை.

ஒரு மணி நேரத்திற்கு மேலாகியும் திருவேங்கடத்தால் தவறைக் கண்டுபிடிக்க முடியவில்லை. புத்தகங்களை மூடிவிட்டுச் சென்ற வாரத்துக் கடை நடைமுறைகளில் சிந்தை செலுத்தலானர். அதன் மூலமாவது தவறு புலப்படாதா என்ற எண்ணம்.




கடமும் தம் மனத்திலுள்ள செய்தியை அவனுக்கு எப்படித் தெரிவிப்பதென்று தயங்கினர். மாடசாமியும் தான் கேட்க நினைத்ததை எப்படித் தானகக் கேட்பது என்று தயங்கினன்.

கடைசியில் திருவேங்கடமே ஒருவாறு தொண்டையைக் கனைத்துக் கொண்டு தொடங்கினர்.

'மாடசாமி! உன்னை எதற்குப் பார்க்க வேண்டுமென்றிருந்தேன் தெரியுமா? இதைச் சொல்லத் தான்! இப்படிச் சொல்கிறேனே என்று வருத்தப் படாதே! ஏதோ! இவ்வளவு காலம் நீதான் அந்த நிலத்தைப் பயிர் செய்து வந்தாய்! ஆனல் சென்ற ஐந்தாண்டுகளாக ஒன்றும் பலனில்லை; அதற்கு நீ தான் பொறுப்பாளி என்று நான் சொல்லவில்லை, நீ பயிர் வைத்து அந்த நிலம் விளையவில்லை! அவ்வளவுதான்! இனி உன் உழைப்பில் அந்த நிலம் விளையாது போலிருக்கிறது. உனக்கும் அதற்கும் இனிமேல் ராசியில்லை. அதனல்தான் நான் அதை வேறு ஆளிடம் விட்டுவிட முடிவு செய்து விட்டேன். ஆகவே...."

"கும்பிடுறேனுங்க" என்னுங் குரல் கேட்டுத் திருவேங்கடம் திரும்பினர்.

மாடசாமி நடையிலே பணிவோடு நின்றிருந்தான்.

"வாடாப்பா! உன்னை நானே வந்து பார்க்க வேண்டுமென்றிருந்தேன். இப்போது நீயே வந்து விட்டாய்!..........ஊம்! நிலத்தை எந்த அளவிலே வைத்திருக்கிருய்?"

"அதுதான்! எள் போட்டிருந்தேனுங்களே'

"எப்படி இருக்கு?"

"ஏதோ பாதிக்குப் பாதியாவது தேறுமுங்க"

"எப்போது அறுப்பு?"

"இன்னும் இரண்டு வாரத்துக்குள்ளே பிடுங்கி விடவேண்டியது தானுங்க"

"ஊம்! சீக்கிரமாகப் பிடுங்கி ஒழுங்கு படுத்து"

சிறிது நேரம் இருவரிடையே மௌனம் நிலவியது. திருவேங்

மாடசாமி திடுக்கிட்டான். அவன் நினைத்து வந்தது ஒன்று: இங்குக் கேட்பது வெருென்று.

"சாமி! இதற்கு நான் ஒருக்காலும் சம்மதிக்கமாட்டேனுங்க! நிலம் உங்க உடைமையா இருக்

கிற வரை என் கையை விட்டு மாறப்படாதுங்க.''

"இல்லே! நான் சொல்வதைக் கேள்! தற்காலிகமாக அதைக் கை மாற்றி விடுகிறேன். ஒரு வருடம் உன்னை விட்டு மாறியிருக்கட்டும்! பிறகு உனக்கே மீட்டுக் கொடுக்கிறேன்! மேலும்........''

"வேண்டாங்க ஐயா! என் குழந்தை போல் பாவித்து வந்தேனுங்க! எவ்வளவு எரு போட்டிருக்கிறேன்! எவ்வளவு செலவு செய்திருக்கிறேன்!''

"அவ்வளவு செய்தும் ஐந்து வருடமா என்ன ஆச்சு?''

"மானம் வஞ்சனை செய்தா நான் என்னங்க செய்யறது?''

"நீ ஒன்றும் செய்ய வேண்டாம்! ஐந்தோடு இதை ஆறுவது வருடமாக நினைத்துக் கொள் என்றுதான் சொல்கிறேன். மேலும் அதை நான் நீண்ட நாளைக்கு வைத்திருக்கப் போவதில்லே. நல்ல விலைவரும் போது தட்டி விடலாம் என்றிருக்கிறேன்''

"சாமி! இந்த வருசம் எனக்கு நம்பிக்கையிருக்குங்க! எப்படியும் உங்கள் குத்தகையைக் கொடுத்து விடறேனுங்க.''

"இதோ பார் மாடசாமி! வீணுகப் பேச்சை வளர்த்து வானேன்! நான் வேறு ஆளுக்கு வாக்குக் கொடுத்து விட்டேன். என்னிடம் மறு பேச்சுக் கிடையாதென்பது உனக்குத் தெரியும்! எனவே இந்த ஆண்டில் நீ கண்டிப்பாக என் நிலத்தில் ஏர் கட்ட முடியாது.''

திருவேங்கடத்தின் வாதத்திற்கு நீதியின் ஒத்துழைப்பு இல்லே என்பது தெரிந்தது. அதனுல் தான் அதுவரை தாழ்ந்து ஒலித்து வந்த அவர் குரலில் வேண்டுமென்றே கண்டிப்பை வர வழைத்துக் கொண்டு தீர்மானமாகச் சொல்லிவிட்டு அவர் எழுந்தார்.

மாடசாமி சிலேயாக நின்ருன். மேலே அவன் என்ன சொல்லக் கிடக்கிறது? நிலம் அவருடையது!

திருவேங்கடம் மாற்றுடையணிந்து கொண்டு கடைக்குக் கிளம்பி விட்டார். அவர் சென்ற பின் அவருடைய மனைவி வந்து மாடசாமியை விசாரித்தாள். அவன் வரும்போதெல்லாம் அவனுக்குப்பசியார அமுது படைத்தனுப்பும் அந்த அம்மாளுக்கு மாடசாமியிடம் தனி அன்பு. அந்த அம்மாளின் பேச்சிலிருந்துதான் மாடசாமிக்குப் புதிய உண்மை விளங்கியது.

"யாரோ கருப்பனுமேடா! உங்கள் ஊர் தானும்! அவன் தான் அன்றைக்கு ஐயாவிடம் வந்து ஏதேதோ சொல்லிக் கெஞ்சினுன், அப்போது ஐயாவோடிருந்த சிநேகிதர்களும் அவனுக்கு ஒத்துப்பாடினுர்கள். ஐயாவும் "சரி"ன்னுட்டார்.

மனமுடைந்து நடைசோர்ந்து வீடு திரும்பிய மாடசாமியின் மனத்திலே ஒரே போரட்டம்!

திருவேங்கடத்தின் நன்றி மறந்த செயல் அவனுக்கு அவ்வளவு பெரிதாகத் தோன்றவில்லே. முன்னுள் வரை அவர்பால் வைத்திருந்த மதிப்பு இன்னும் அவன் மனத்தைவிட்டு முற்றும் நீங்கவில்லே. அவனுடைய ஆத்திரமெல்லாம் கருப்பன் மேல்தான் இருந்தது.

கருப்பன்! பயிர்த் தொழிலை மறந்து பட்டணம் போய் அங்கு ஏதோ ஓர் அலுவலகத்தில் காவற்றெழில் புரிந்து அது மூடப் பட்டதும் மீண்டும் கிராமத்துக்கு ஓடிவந்துவிட்ட பரதேசிப் பயல்! அவன்தான் ஐயாவிடம் வந்து தந்திரமாகப் பேசி அவர் மனத்தை மாற்றி விட்டிருக்கிறான். வீணுகத் தன் வாழ்வில் குறுக்கிட்ட அவனை அன்று இரவே வெட்டிப் போட்டுவிடலாமா என்று மாடசாமி நினைத்தான்.

கிராமத்தை நெருங்க நெருங்க அவன் சினம் தணிந்துகொண்டே வந்தது. "சமயம் வரும்போது பார்த்துக்கொள்ளலாம்" என்ற ஒரே முடிவு அவன் நெஞ்சில் நிலைத்தது.

4

எல்லா நிலங்களிலும் உழுது நாற்று நட்டு விட்டார்கள். திருவேங்கடத்தின் நிலம் மட்டும் மாறுதலின்றி அப்படியே இருந்தது. அதில் போட்டிருந்த எள்ளும் இன்னும் பிடுங்கப்படவில்லை.

கருப்பன் எள்ளைப் பிடுங்கி ஒழுங்குபடுத்துமாறு பலமுறை சொல்லி விட்டான். மாடசாமியோ திருநாளைப் போவாரைப் போல நாளை நாளை என்று ஒத்திப் போட்டுக் கொண்டே வந்தான்.

கருப்பனின் கோபம் நாளுக்கு நாள் வளர்ந்தது. விதைப்பதற்குப் பருவம் தவறிப் போகிறதே என்ற பதைப்பு அவனுக்கு. அன்று அவன் முடிவாகச்சொல்லி விட்டான்.

"நாளைக்கு இல்லேன்னு அப்புறம் நடப்பது வேறு விதமாகத்தான் இருக்கும்,"

மாடசாமி அவன் வார்த்தையைப் பொருட்படுத்தவில்லை. அவன் எதற்கும் துணிந்தவனுயிருந்தான். அன்பாகப் போற்றிய நிலம் தன் கையைவிட்டு நழுவிவிடவே அவனுக்கு வாழ்க்கையில் பிடிப்பற்று விட்டது.

"நாளைக்கு இல்லேன்னு என்ன தான் செய்வாரு பார்ப்போமே" என்று தனக்குள் சொல்லிச் சிரித்துக் கொண்டான்.

விடியற்கால மங்கலான நிலவு!

மணி நான்கிருக்கும்! ஊர் உறங்கிக் கொண்டிருந்தது. எப்பக்கமும் அமைதி சூழ்ந்து கிடந்தது.

மாடசாமி உபாதையின் பொருட்டுக் குடிசையினின்று வெளிக் கிளம்பினுன்.

எங்கோ ஒருகோழி தன் முதற் குரலை எழுப்பிற்று.

ஏரியிலே நிலவொளி நிகழ்த்திய விந்தையைக் கண்டபடி மாரியாயி கோயில் மேட்டை ஏறினுன் மாடசாமி; அங்கிருந்து பார்த்தால் அவன் நிலம் மட்டுமல்ல; எல்லா நிலங்களின் பேரிலும் ஒரு கண்ணேட்டம் விடலாம்.

"இதென்ன? இந்த வேளையில் யார் அவன் நிலத்தில் உழுது கொண்டிருப்பது? அவன் போட்டிருந்த எள் என்னுவது?

மாடசாமி விடு விடெனத் தன் குடிசைக்கு வந்து நீண்ட தடிக்கொம்பொன்றை எடுத்துக் கொண்டு புறப்பட்டான்.

நிலத்திலே உழுதுகொண்டிருந்த கருப்பன் தன்னை நோக்கி ஆள் ஓடிவருவதைக் கண்டு திகைத்தான். அவன் இதை

எதிர்பார்க்கவில்லை. மாடசாமியைப் பயமுறுத்த வேண்டுமென்பது அவன் எண்ணம்; அதற்கு அறிவிப்பாக நிலத்தில் சிறு பகுதியை உழுதுவிட்டு ஊர் விழிப்பதற்கு முன் போய்விடலாமென நினைத்திருந்தான், அதன் விளைவாக வருவதைப் பிறகு சமாளித்துக்கொள்ளலாம் என்பது அவன் முடிவு; அவ்வாறே பாத்தியை ஒட்டினாற்போல மிகச் சிறு பகுதியையே அவன் உழுதிருந்தான்; அதனால் சேதம் ஒன்றும் விளைந்து விடப்போவதில்லை.

மாடசாமி இதை யெல்லாம் நினைத்தானா? அவனுக்குப் பழைய நினைவு பீறிட்டெழுந்தது. அவன் மீசை துடித்தது.

"என்னடா! கேள்வி முறையில்லேன்னு நெனச்சுக்கிட்டே?" என்றான் ஆத்திரத்தோடு.

"முறையோட நடந்து பார்த்தாச்சு! இனி முறைதவறி நடக்க வேண்டியதுதான் என்ற முடிவுக்கு வந்தாச்சு" என்று பட்டணத்து மிடுக்கோடு சினிமா வில்லன்போலப் பேசினான் கருப்பன்.

"என்ன முறையோடு நடந்தேடா? பிச்சைக்காரப் பயலே."

"இந்த அஞ்சு ஏக்கரை விட்டா பிச்சை எடுக்க வேணுமேன்னு தான் சண்டைக்கு வர்றே நீ."

"யாருடா பிச்சை எடுக்க வேணும்? உசிரோட இருக்கிற நெனப்பிருந்தா மருவாதையாப் பேசு!"

"நீ மட்டுமென்ன! மார்க்கண்டேயர் வரம் வாங்கிட்டு வந்தியோ"

வார்த்தை வளர்ந்தது.

கைகலப்பு ஏற்பட்டது.

இருவரும் கட்டிப் புரண்டனர்.

கடைசியாக, ஓங்கி ஓர் அறை விட்டான் கருப்பன்.

மாடசாமி பதறினான். அவன் ரத்தம் கொதித்தது. என்ன செய்கிறோமென்று நினைக்காமல் அருகில் கிடந்த தடிக்கம்பை எடுத்து கருப்பன் மண்டையில் ஓங்கி அடித்து நெட்டி உதைத்துத் தள்ளினான்.

வேரறுந்த மரம்போல் விழுந்தான் கருப்பன். போதாக் குறைக்குச் சேற்றிலே புதைந்து கிடந்த ஒரு கருங்கல் வேறு அவன் மண்டையைப் பதம் பார்த்தது. அவன் முழுதும் சித்தம் இழக்கவில்லை; அதற்குள் அக்கல்லையெடுத்து வீசியெறிந்தான். மாடசாமியின் மண்டை பிளந்து கொண்டது, இரத்தம் பீறிட்டது. அவனும் உணர்வை இழந்து விழுந்து விட்டான்.

அமைதியான சூழ்நிலை அவர்கள் சண்டைக்கு உரமூட்டியது போலாயிற்று. இரு உடல்களும் சேற்றிலே புதைந்து கிடந்தன. அவர்கள் மண்டையிலிருந்து ஆறாய்ப் பெருகிய இரத்தம் சேற்றோடு சேறாய்க் கலந்து பரவியது.

அதுவரை உழவர் மக்களின் குருதியை வியர்வை உருவத்திலே குடித்து வந்த அந்நிலம் அப்போது கொண்ட மட்டும் குருதியாகவே குடித்துத் தீர்த்தது.

சுற்றுப்புற நிலங்களில் நாற்று விட்டு நடும் நாட்களாகையால், அடுத்த அரை மணி நேரத்திலேயே அங்கு ஆள் நடமாட்டம் தோன்றியது, செய்தி விரைவாகப் பரவி கிராமமே அங்கு சூழ்ந்து கொண்டது. கிராமத்துக்கு வெளியே தெரிக்

தால் விளைவு விபரீதமாகுமோ என்றஞ்சிப் பலர் ஒன்றுசேர்ந்து கிராம வைத்தியரின் வீட்டுக்குச் சென்றனர். வைத்தியரின் நம்பிக்கை அவர்களுக்கு ஆறுதல் அளித்தது; என்றாலும் மாடசாமியும் கருப்பனும் உணர்வுடன் எழுந்து நடமாட ஒரு மாத காலத்துக்கு மேலாயிற்று.

அந்த ஒரு மாதமும் செல்லாயி கண்ணீரைப் பெருக்கிய வண்ணமே இருந்தாள். அந்தக் கண்ணீர் மழையைக் காணப் பொருமல்தானோ என்னவோ வானம் அந்த ஆண்டில் மழையாகப் பெய்து தீர்த்தது!

## 5

அந்த ஆண்டில் நல்ல மழை! பூமி குளிர்ந்து விட்டது. ஏரி குளங்கள் நிரம்பிவிட்டன! நிலங்களிலெல்லாம் பொன்மணிக் குவியல்! சுற்றுப்புறமெங்கும் நல்ல விளைச்சல்! ஆனால் திருவேங்கடத்தின் நிலம் மட்டும் கஞ்சனுடைய பணம்போல் மாறுதலின்றி அப்படியே இருந்தது.

அதனால் அவருக்கென்ன? "நிலம் விளைந்தால் லாபம்! விளையாவிட்டால் நஷ்டம் ஒன்றும் இல்லையல்லவா" என்று நினைத்து அந்த ஆண்டில் தம் கடையில் வந்த இரட்டிப்பு லாபத்தால் பூரித்துப் போய் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தார் அவர். *

## எழுத்தாளர்களுக்கு

பொன்னி இதழுக்குக் கதை, கட்டுரை, கவிதை முதலியவற்றை யனுப்புவோர் கீழ்க்காணும் குறிப்புக்களைக் கவனித்தருள வேண்டுகிறோம்!

★ பிறமொழிக் கலப்பின்றி நல்ல இனிய எளிய தமிழில் எழுதியிருக்கின்றீர்களா?

★ பகுத்தறி வுணர்ச்சியைச் சிறிதேனும் ஊட்டத்தக்கதா யமைந்துள்ளதா?

★ தமிழ், தமிழர் தமிழ் நாட்டுப்பற்றை மக்களிடை உண்டாக்குமா?

★ பண்டைத்தமிழ் இலக்கியக் கருத்துக்களை மக்களுக்கு எடுத்துணர்த்துமா?

★ ஆராய்ச்சியுரைகள் உளவா? புதிய கண்டு பிடிப்புக்களா? புதுமைகளா?

ஆசிரியர்.

# விநோத மண முறைகள்

எஸ்.என்.கே.ராஜன்

ஹொராளெயர் :

தென் கன்னட தேசத்தைச் சேர்ந்த ஹொராளெயர் (Holeyar of South canara) ஜாதியில் மணமகன் வீட்டார் அரிசி, வெற்றிலே, பாக்கு முதலியவற்றை எடுத்துக் கொண்டு மணப்பெண் வீட்டிற்குப் போவார்கள். இரவு முழுதும் மணப்பெண் வீட்டுக்கெதிரில் மணப்பெண்ணினல் செய்யப்பட்ட பாயின்மேல் மணமகன் உட்கார்ந்திருப்பான். அடுத்த நாள் காலே மணப்பெண்ணேக் கொண்டுவந்து மணமகனுக் கெதிரில் உட்கார வைப்பர். ஒரு முறத்தில் வெற்றிலே, பாக்கு முதலியவற்றை வைத்து இருவருக்கும் நடுவில் வைப்பர். அப்பொழுது எல்லோரும் அரிசியை வீசுவர். பிறகு மணப்பெண் பாயைத் தூக்கிக்கொண்டு மணமகனுடன் புறப்பட்டு அவனுடைய வீட்டை அடைவாள். அடுத்த நாள் முதல் நான்கு நாள் வரை மணம் நடைபெறும். கடைசி நாள் மணமக்கள் மேற்கூறிய பாயை எடுத்துக்கொண்டு அருகிலுள்ள குளத்திற்கோ அல்லது ஆற்றிற்கோ சென்று, அதிலுள்ள மீனேப் பிடித்து, அதை மணமக்கள் முத்தமுட்ட பிறகு மீனேயும் பாயையும் குளத்திலோ, ஆற்றிலோ எறிவர்.

ஊராலி :

கோயமுத்தூர் ஜில்லாச் சமவெளிகளில் வாழும் ஊராலி ஜாதியாரிலே மணததை நிச்சயப்படுத்த மணமகனின் பெற்ருேர், உற்ருர் உறவினர்களுடன் பெண் வீட்டிற்குச் செல்வர். அங்கே அவர்கள் வெகு விமரிசையாக வரவேற்கப்படுவர். அதாவது பெண் வீட்டார் விருந்தாளிகளின் கைத்தடிகளே மரியாதையுடன் பெற்றுக்கொண்டு அவர்களேப் பாயின்மேல் உட்காரச் செய்வர். அவர்களுக்கு நடுவிலே உயரமான ஒரு கல்லே நிற்க வைத்து அதன் மேல் பூக்களே வைத்துப் பூஜை செய்வர். பிறகு, ''சுவாமி! மணம் சுபமாக முடிய வேண்டுமென்ருல் வலப்பக்கம் பூ விழட்டும். இல்லேயேல் இடப்பக்கம் விழட்டும்!'' என்பார்கள். இதற்குப் ''பூ வைத்துக் கேட்டல்'' என்று பெயர். பூவானது எப்பக்கமும் விழாமல் இருந்தால் அது சுபசகுனம் என்பது அவர்களது கருத்து.

குருபர் :

குருபர் என்ற கன்னட கடையர்களில் ஒரு பிரிவினர் மணப்பெண்ணைத் தேர்ந்தெடுக்கும் போது அப்பெண்ணின் தலையில் சுழிகள் அல்லது சுருள்கள் இருப்பதைப் பார்ப்பர். இவ்வாறு சுழி பார்த்து குதிரைகளையும், பசுக்களையும் வாங்குவது நாம் அறிந்ததே. ஆனால் மேற்கண்ட ஜாதியார் பெண்ணைக் கொள்ளும் போதும் சுழி பார்த்தே தேர்ந்தெடுக்கின்றனர். அவற்றில் சில சுழிகள் நல்ல அதிர்ஷ்டத்தைக் கொடுத்துக் குடும்பத்தைச் செழிப்படையச் செய்யும் என்றும், சில துரதிர்ஷ்டத்தைக் கொடுத்துக் குடும்பத்தை நாசப்படுத்தும் என்றும் கூறப்படுகிறது. ஆகையால் நல்ல சுழி இருக்கும் பெண்களையே தேர்ந்தெடுப்பர்.

ஊராலி :

ஊராலி ஜாதியைச் சேர்ந்த தமிழ் விவசாயிகளில் ஒருவன் கள்ளத்தனமாக ஒரு மணமாகாப் பெண்ணுடன் நட்பு வைத்துக் கொண்டிருந்து அது கண்டு பிடிக்கப்பட்டு விட்டால் அவன் அபராதம் விதிக்கப்படுவான். அத்துடன் அந்தப் பெண்ணையே அவன் மணந்து கொள்ளவேண்டும். அப்பொழுது தாலிக்குப் பதில் தன் இடுப்பில் கட்டியிருக்கும் அரைஞாண் கயிற்றை அவிழ்த்துப் பெண்ணின் கழுத்தில் கட்டுவான்.

கோரமர் :

தெலுங்கு நாடோடி ஜாதியைச் சேர்ந்த கோரமர் (Koramar) என்பவர்கள் தாலிக்குப் பதில் ஒரு கயிற்றில் கருமணிகளைக் கோர்த்துக கட்டுவர். அதன் காரணம் பின்வருமாறு சொல்லப்படுகிறது: முன்பொரு தடவை மணமகன் தாலியைக் கொண்டு போக மறந்து விட்டானும். ஆகையால் தாலிக்கு வேண்டிய தங்கத்தை எப்படியாவது கொண்டு வரும்படியாகப் பிள்ளைக்கு உத்தரவிட்டனராம் பெண் வீட்டார். அவனும் தங்கத்தைத் தேடிப் போனவன் திரும்பவே இல்லையாம். அதிலிருந்து அக்குலத்தாரிடையே நடக்கும் மணத்தில் தாலிக்குப் பதில் கருமணிகளைக் கோர்த்துக் கட்டும் வழக்கத்தைக் கையாண்டனராம்.

ரெட்டி :

தெலுங்கு விவசாயிகளான ரெட்டிகள் தாலிக்குப் பதில் சாதாரண நூல் கயிற்றை மஞ்சளில் நனைத்துக் கட்டுவர். அதற்குக் காரணமாக வழங்கும் கதை பின்வருமாறு: முற்காலத்தில் ஒரு ரெட்டித் தலைவன் தன் மணத்தின் போது தட்டானை அழைத்துத் தாலி செய்து கொண்டுவரப் பொன் விலையையும், கூலியையும் கொடுத்தானும். குடிகாரனுக இருந்த அந்தத் தட்டான் தன் கடமையை மறந்து பணத்தைக் குடியில் செலவிட்டு விட்டான். மண நாள் வந்தது. ஆனால் தாலி வந்த பாடில்லை. அதனுல் அந்த ரெட்டித்தலைவன் தன் உடையிலிருந்து நூலைப் பிரித்துத் தாலிக்குப் பதிலாக அதை மஞ்சளில் நனைத்து மணப்பெண்ணின் கழுத்தில் கட்டினுனும். அவ்வழக்கமே நடைமுறையில் இருந்து வருகிறது.

காண்ட்லா :

காண்ட்லா (Gandla) என்னும் தெலுங்கு வாணியர் தாலிக்குப்

பதில் நூற்றியொரு மஞ்சள் நூலைச் சேர்த்து மணப்பெண்ணின் கழுத்தில் கட்டுவார்களாம்.

மொடாதி காபு :

காபு ஜாதியாரில் மொடாதி காபு (Motathi Kapu) என்னும் பிரிவினர் தாலிக்குப் பதில் நூல் கயிற்றையே கட்டுவர். இதற்கும் ஒரு காரணம் சொல்லப்படுகிறது. முன்பு அவர்கள் நாட்டை ஒரு அரசன் ஆண்டு வந்தானும். அப்பொழுது மொடாதி காபு ஜாதி உழவர் களஞ்சியத்திற்குத் தானியத்தைக் கொடுக்காமல் ஏமாற்றி விட்டனராம். அவர்களைத் தண்டிக்கும் எண்ணத்தில் அரசன் தன் தந்தையின் சிரார்த்தத்திற்குப் பூசணிக்காய்களைக் கொண்டு வந்து கொடுக்கச் சொன்னுராம். அப்படிச் சொல்லிவிட்டு உடனே தன் ஆட்களை அழைத்து பூசணித் தோட்டத்திற்குச் சென்று பூசணிக் காய்களை யெல்லாம் நாசம் செய்து விடும்படி உத்தரவிட்டாராம். அவர்களும் அப்படியே செய்து முடித்து விட்டனராம். பிறகு சிரார்த்த தினத்தன்று பூசணிக்காய் எங்கும் கிடைக்காமையால் காபுக்கள் அரசன் முன் சென்று செய்வதொன்று மறியாமல் நின்றனராம். உடனே அரசன் வேண்டிய பூசணிக்காய் எடைக்குச் சமமான பணத்தைக் கொடுக்கும்படி உத்தரவிட்டாராம். அதற்கு அவர்கள் ஒத்துக் கொள்ளவே நாசமாக்கப்பட்ட பூசணிக்காய்களை ஒரு தட்டிலும், பணத்தையெல்லாம் மற்றொரு தட்டிலும் வைத்து நிறுத்தார்களாம். ஆனுலும் எடை சரியாக வரவில்லை. அவர்களிடம் பணமும் தீர்ந்துவிட்டது. ஆகையால் தங்கள் மனைவிமக்கள் கழுத்திலிருந்து தாலிகளையெல்லாம் கழற்றி வந்து தராசில் வைக்கவே எடை சரியானதாம். அதிலிருந்து தாலியைக் கட்டும் வழக்கத்தை அவர்கள் விட்டு விட்டனராம்.

தொரெயர் :

தொரெயர் (Toreyar) என்ற மீன் பிடிக்கும் கன்னட ஜாதியார் மணத்தை மணமகன் வீட்டிலே தான் நடத்துவார்கள். காரணம் முன்பு அவர்கள் ஜாதி அரசருடைய மகனுக்கு மணமான போது அவன் பெண் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கே கொலை செய்யப்பட்டானும்.

குறவர் :

நாடோடி ஜாதியைச் சேர்ந்த குறவர்களின் மணமானது யாதொரு சடங்குமில்லாமல் மஞ்சள் நீரில் நனைக்கப்பட்ட கயிற்றைப் பெண்ணின் கழுத்தில் கட்டி, பெண்ணுக்கு வேண்டிய விலையை (இரண்டரை ரூபாயை)க் கொடுத்து, விருந்தொன்று வைத்து விடுவார்கள். ஆனுல் மணமக்களின் மணத்தை அவர்கள் பிறக்கா முன்னமேயே நிச்சயித்து விடுவார்கள். அதாவது தங்களுக்குள் உறவு ஏற்படுத்திக் கொள்ள விரும்பும் இரண்டு பேர் ஒருவருக்கு ஆணும், மற்றொருவருக்குப் பெண்ணும் (அல்லது மாறியோ) பிறந்தால் அவ்விருவருக்கும் மணம் செய்து விடவேண்டும் என்று வாக்குக் கொடுத்துக் கொள்வார்கள். அதை உறுதிப்படுத்திக்கொள்ள இருவரும் புகையிலையைக் கைமாற்றிக்கொண்டு கள்ளையும், சாராயத்தையும் குடிப்பார்கள். ஆனுல் அவ்வாறு அவர்கள் எண்ணத்தின்படி அவர்களுக்கு

ஆணும் பெண்ணும் பிறக்காமல் இரண்டும் ஆணுகவோ, அல்லது இரண்டும் பெண்ணுகவோ பிறந்தாலும், அன்றி ஆணும் பெண்ணும் பிறந்தும் மணம் நடக்காத முறையில் தடைகள் ஏற்பட்டாலும் முன்பு வாக்குக் கொடுத்த போது ஏற்பட்ட செலவை இருவரும் மாற்றிக்கொள்வர்.

எருகாளர் :

எருகாளர் (Yerukalar) என்ற நாடோடி ஜாதியாரும் தாலியைக் கட்டாமல் பாசிமணி இவற்ருலான ஒரு சரத்தைப் பெண்ணின் கழுத்தில் கட்டுவர். அவர்களில் மணமாகும் தறுவாயில் ஒரு பெண் இருக்கிறதென்று தெரிந்தால் மணமகனின் தந்தை அக் கூட்டத்தாரின் தலைவனுடைய சம்மதத்தின்மேல் கொஞ்சம் பணத்தைப் பெண்ணின் தகப்பனுருடைய துணியில் முடிந்து விடுவான். அத்துடன் தலைவனுக்கும் பெண்ணின் தந்தைக்கும், மற்றுமுள்ளவர்களுக்கும் விருந்து வைத்துக் களிப்பூட்டுவான்.

நாட்டுக்கோட்டைச் செட்டிமார்:

சில காலம் முன்வரை நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள் மணத்தின்போது பெண்ணின் கழுத்தில் மணமகன் தாலி கட்டாமல், பல மக்களுக்குத் தந்தையான ஒரு பெரியவர் தாலியைக் கட்டுவார்.

முகம்மதியர் :

தென்ஞட்டு முகம்மதியர்களிடையே சில பிரிவினரில் பெண்ணின் கழுத்தில் மணமகன் தாலி கட்டாமல் வயதான ஒரு ஸ்திரியே கட்டுவாள்.

காணிகர் :

திருவாங்கூரில் காணிகர் (Kanikar) என்ற காட்டு ஜாதியாரிடையே மணமகன் மணப்பெண்ணின் தாய்க்கு ஒரு புதுத் துணியையும், மணப்பெண்ணுக்கு ஒரு புதுத் துணியையும் கொடுப்பான். அத்துடன் மணப்பெண் பருவமடைந்திருந்தால் ஐந்தரைப் பணமும், பருவமடையாமலிருந்தால் ஏழரைப் பணமும் பெண்ணின் தகப்பனுர் அல்லது நெருங்கிய சுற்றத்தாரிடம் கொடுப்பான். தாலி வெள்ளியாலான தாக இருக்கும். மணப்பெண் பருவமடைந்திருந்தால் மணமகனின் சகோதரி மணப்பெண்ணின் கழுத்தில் தாலியைக் கட்டுவாள். பருமவடையாத பெண்ணுக இருந்தால் மணமகனே தாலியைக் கட்டுவான்.

கூனவேளமா :

கூனவேளமா (Goona Velama) என்ற தெலுங்கு விவசாயிகளில் மணம் செய்துகொள்ள விரும்புவோன் தெலுங்குச் செம்படவராகிப் பள்ளிகளில் இருவருக்கும் ஆகும் மணச் செலவைக கொடுத்துவிட்டுப் பிறகே மணத்தை நடத்தி வந்தனர். ஆனுல் இப்பொழுது அப்படியல்லாமல் மணமாகும்போது மீன் பிடிக்கும் வலே ஒன்றை வீட்டிற்கு முன்ஞல் தொங்க விடுவர். அதன் காரணம் பின்வருமாறு: முன்பொருகாலத்தில் கூனவேளமா ஜாதியாரின் முன்னேர்கள் கடலில் பிரயாணம் செய்துக் கொண்டிருக்கும் போது அவர்களுடைய விரோதிகள் வந்து எதிர்த்தனராம். அப்பொழுது செம்படவப் பள்ளிகள் வந்து தங்கள் படகில் எல்லோரையும் ஏற்றிக்கொண்டு வந்து காப்பாற்றிஞர்களாம்.

# குறள் ஆட்சி பெற்ருல்......!

மணிமுகம்

'' பிறப்பொக்கும் உயிர்க்கு எல்லாம் '' என்றே — சாதி
பேதங்கள் மாய்ந்திடச் சட்டமுண்டு !
'' அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை '' — என்று
அகவாழ்வு சுகப்படச் சட்டமுண்டு !

'' யாகாவா ராயினும் நாகாக்க '' — என்று
நாமாறு நேருக்குஞ் சட்டமுண்டு !
'' சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு '' என்றே — நல்ல
சொல்லடக்கம் சொல்லவும் சட்டமுண்டு !

'' கற்க கசடற '' என்று உண்மை — நலங்
கனிந்த கல்விக்குச் சட்டமுண்டு !
'' பற்றுக பற்றற்ருன் பற்றினை '' — என்றே
பக்தர்கட்குந் தக்க சட்டமுண்டு !

'' உண்ணுமை வேண்டும் புலால் '' — என்று
உயிரெல்லாம் உயிர்பெறச் சட்டமுண்டு !
'' தன்னைத்தான் காக்கின் சினங்காக்க '' — என்று
தகைமைக்கு வகைகாட்டச் சட்டமுண்டு !

'' தோன்றிற் புகழொடு தோன்றுக '' — என்று
தோன்றிய பலன்சொல்லச் சட்டமுண்டு !
'' அன்றறி வாம்என்ன தறஞ்செய்க '' — என்று
அறமென்றுஞ் சிறப்புறச் சட்டமுண்டு !

எட்டுத்திக்கில் வாழும் மாந்தர்களும் — ஏற்று
ஏற்றஞ்செய்யுங் குறள் ஆட்சிபெற்ருல்
சட்டமெல்லாம் இன்பச் '' சொர்க்கவாசல் '' — காட்டும்
சட்டமாய்க் கட்டாயம் நன்மையூயும்.

# கலியுகக் கண்ணகி

பி. எல். சாமி

[ஆண், பெண் படிக்கும் ஹைஸ்கூல். தலைமை ஆசிரியர் ஆபீஸ் அறையில் உட்கார்ந்திருக்கிறார்.]

தலைமை ஆசிரியர்: 'வாயிலோயே வாயிலோயே'

[பியூன் தூங்குகிறான், கதவோரத்தில்.]

வாயிலோயே வாயிலோயே
செவிட்டுப் பிணமே! குட்டிச்சுவரே!
சீக்கிரம் வாராய் சீக்கிரம் வாராய்.

பியூன்: (விழித்தெழுந்து) வந்தேனய்யா வந்தேன்.

தலைமை ஆசிரியர்: பரிமள சுகந்தப் பாக்குத்தூளும்
பட்டணம் பொடி ஒரு பத்து டப்பியும்
வீட்டுக்காரிக்குக் காப்பித்தூளும்
விரைவில் வாங்கி இங்குக் கொணர்வாய்.

பியூன்: சரிதானய்யா இதோ வந்தேனய்யா.

[பியூன் வெளியே போகிறான். அவனைப் பரிமளா என்ற மாணவி நிறுத்துகிறாள். அவள் பரீட்சைப் பேப்பரைக் கையில் வைத்துக் கொண்டு தலைவிரிகோலமாய் கோப மாய்த் தோன்றுகின்றாள்.]

பரிமளா: வாயிலோயே வாயிலோயே!
இரக்க மொன்றில்லா அரக்க நெஞ்சத்து
பள்ளித் தலைவரின் வாயிலோயே
கத்தைக் காகிதம் கையிற் கொண்டாள்
பரிமளாவென்ற பெயரைக் கொண்டாள்
கதவிடத் தாளய்யா கதவிடத்தாளென்று
அறிவிப்பாயே அறிவிப்பாயே.

[பயந்து 'கிடு கிடு'வென்று நடுங்கிக் கொண்டு ஆபீஸில் பியூன் நுழைகிறான். ஹெட்மாஸ்டர் தூங்கிக் கொண்டிருக் கிறார்.]

பியூன்: ஐயா! ஐயா!!
கத்தைக் காகிதம் கையிற் கொண்டாள்
பரிமள சுகந்தப் பெயரைக்கொண்டாள்.

[தூங்கி விழுந்து கொண்டிருந்த ஹெட்மாஸ்டர் தூக்க கலக்கத்தில்]

தலைவர்: பரிமள சுகந்த மூக்குத்தூளா
ஆஹா கொணர்வாய் வாயிலோயே

பியூன்: ஐயா அதுவில்லை
பரிமளா வென்றொரு.......

தலைவர் : (தூக்கக் கலக்கத்தில்)
என்னடா இல்லை
பரிமள சுகந்த காப்பித்துளா?
சீக்கிரம் சேர்ப்பாய் ஆத்துக்காரிக்கு.

பியூன் ; காப்பியுமில்லை கீப்பியுமில்லை
பரிமளா வென்றொரு பயங்கரப்பாவை
பத்ரகாளியோ! பராசக்தியோ!!
கதவிடத்தாளய்யா கதவிடத்தாளே.

தலைவர் : (பயந்து திடுக்கிட்டு) ஐயோ பத்ரகாளியா!
(அதற்குள் சமாளித்துக் கொள்கிறார்)
........................பரிமளாவா
பரவாயில்லை வரவிடு இங்கே.

[விரித்த தலையுடன் கோபாக்கினி வீச பரிமளா நுழைகிறாள்.]

பரிமளா : இரக்கமொன்றில்லா அரக்க நெஞ்சத்து
பள்ளித்தலைவரே உமக்கோர் வணக்கம்.

தலைவர் : பரிமள சுகந்த பெயருடைப்பாவாய்
ஈதென்னகோபம்! இதென்ன கோலம்?

பரிமளா : எங்கும் புகழ் நற்கொங்கு நாட்டின்
கொங்குச்செல்வியாம் கண்ணகி குலத்தில்
வந்துதித்தேன் நல்வராகபுரத்தில்
கோவையில் படித்தேன் நாகையில்
[படித்தேன்
ஆம்பூர் வந்தேன்பெரும் தீம்புக்காக
கனஜோரான கருப்பு ரிஸ்ட்வாட்ச்
கமலா எந்தன் காதற் தோழி,
மங்கையர்க்குள் மடமக்குவான
பங்கஜம் எந்தன் பாங்குறு தோழி
பார்ப்போர் எல்லாம் பயந்து சாகும்
பர்வதகுமாரி என் பிரிவிலாத்தோழி

தலைவர் : பரிமள சுகந்த பாவை நல்லாளே!
தோழியர் பட்டியல் பார்த்தாய் விட்டது
வந்த காரியம் விரைவில் பகர்வாய்.

பரிமளா : (கோபத்தோடு வார்த்தைகளைக் கொட்டு கின்றாள்.)

அறிவொன்றில்லா ஆசிரியர் அமைந்தார்
அழகில்லையென்று மார்க்குகள் குறைத்தார்
பழகிலையென்றால் மார்க்குகள் கழிப்பதா?
வாய் நீளமென்றால் அம்சங்கள் போவதா?
ஈதென்ன நியாயம் இதென்ன நீதி?

தட்டை முகமெனில் மார்க்குகள் கட்டையோ?
குட்டைச் சடையெனில் மார்க்கில் சொட்
[டையோ!
அம்சங்கள் தருவது அழகைப் பார்த்தா?
மார்க்குகள் தருவது முகத்தைப் பார்த்தா?
வித்தை படிக்கவா விளம்பரப்படுத்தவா
பள்ளிக்கு வந்தோம் பள்ளித்தலைவரே!

[கத்தைப் பேப்பர்களை நீட்டுகிருள். தலைமை ஆசிரியர் ஒவ்வொன்ருய்ப் பார்க்கிருர்.]

கத்தைப் பேப்பரைக் கண்ணுல் பாரும்
கணக்குப் பேப்பரில் கழித்த மார்க்குகள்
ஒன்று இரண்டா இருபத்தி மூன்று.
ஆங்கிலத்தாளில் குறைத்த மார்க்குகள்
அரையா காலா சுளையாய் இருபது.
தமிழில் எனக்கு மார்க்குகள் எட்டாம்,
அதுவும் கேட்டால் ஓசி மார்க்காம்.
படித்துப்பாரும் மார்க்குகள் தாரும்
தேர்வில் தவற நான் மண்டுகமில்லை.
அரையாண்டுத் தேர்வில் மார்க்குகள்
[அதிகம்.
வேண்டுமென்றே எனை அந்த வாத்தியார்
அழகில்லையென்று பெரும்பழி செய்தார்,
பேப்பரைப் பாரும் பேப்பரைப் பாரும்.
பள்ளித் தலைவரே பேப்பரைப் பாரும்.
அறிவிற்கு அம்சமா? அழகிற்கு அம்சமா?

தலைமை ஆசிரியர்: (பேப்பர்களைப் படித்துப் படித்துப் பார்க்கிருர். வேண்டுமென்றே பெயிலாக்கியதைப் பார்க்கிருர்.)

(மெதுவாக) பி. ஏ. படித்த பையன்களெல்லாம்
பள்ளியில் வந்து வாத்தியாரானர்,
அழகைப் பார்த்து அம்சங்கள் தந்தார்.
அறிவைக் கண்டால் அலட்சியம் செய்தார்.

(சத்தமாக) பொய் சொல் ஆசிரியன்தன் சொல் கேட்ட
நானேதலைவன் நானேதலைவன்.

[ஹெட்மாஸ்டர் மயக்க மடைந்து விழுகிருர்.]

பரிமளா: (சபதம் செய்கிருள்)

பட்டாங்கில் எனது பெயர் பரிமளா ஆமாஞல்
ஒட்டேன் பள்ளியோ டொழிப்பேன்
மூளுகதீயே மூளுக தீயே
பள்ளியெங்கும் மூளுக தீயே
பள்ளியெங்கும் பரவுக தீயே.

(சிலப்பதிகாரம் வழக்குரைக்காதையைத் தழுவி எழுதப்பட்டது.)

# இன்பம் எங்கே?

**சிந்தனைமணி**

தென்றலிலே தவழ்கின்றாள்; மணம்பரப்பும்
    தேன்மலராய்ச் சிரிக்கின்றாள் மாலைநேரம்!
குன்றினது உச்சியிலே கோலங்காட்டி
    குலவுகின்றாள் மேகத்தைத் தழுவுகின்றாள்!
வென்றுவரும் தமிழரது வீரங்கண்டு
    வெட்கத்தால் வெளுத்திருக்கும் நிலவின்மேலே
நின்றுஎனைப் பார்க்கின்றாள்; நிலைமறந்தேன்!
    நெஞ்சத்தை இழுக்கின்றாள் நிலைமறந்தேன்!

துள்ளிவரும் அருவியிலே அவளின்தோற்றம்!
    தோகையினை விரித்தாடும் மயிலைப்போல
கள்ளியவள் வண்ணமெல்லாம் காட்டிநின்றாள்!
    கண்சிமிட்டும் தாரகையாய் வானத்தட்டில்,
எள்ளியவள் நகைக்கின்றாள்; "அழகி" என்றேன்
    இலக்கியமாம் தோட்டத்தில் இன்னொருத்தி,
கிள்ளைமொழி பேசிஎனைக் கொள்ளைகொண்டாள்
    கிடந்திட்டேன் அவள்மடியில் "தமிழே" என்றேன்,



# வழுக்கி விழுந்தவள்



கலைவாணன்

அலர் முகத்தை தலையணையில் புதைத்துக்கொண்டு குவளைக் கண்களை இறுக மூடிக்கொண்டாள் அந்த மலர்க்கொடி. முகத்தை மட்டும் புதைத்துக் கொண்ட மோகனவல்லியால் மோதிவரும் எண்ண அலைகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. கண்களை மூட முடிந்த அக்கன்னியால் கலங்கிக் கிடந்த உள்ளத்தை மூடிவைக்க இயலவில்லை. வாட்டமுற்ற மதிமுகத்தின் களங்கமாக வழிந்தோடும் கண்ணீர்—பிஞ்சு நெஞ்சை இறுக்குகின்ற நஞ்சு அவளின் தணியாத துயரம்.

சழக்கர் மத்தியில் இழிந்து கிடக்கும் சமூகத்தின் வழுக்கி விழுந்தவள் என்றக் குற்றச் சாட்டு. ஒழுக்கம் கெட்டவள் என்ற ஊராரின் இழுக்குச் சொற்கள். எந்த அற்பனால் அவள் பெண்மை தகர்க்கப்பட்டதோ அந்தக் கயவனின் கற்பிழந்தவள் என்ற அவச்சொல். அவளின் வாடியமலருடல், வதங்கிய பிஞ்சு நெஞ்சு — மெள்ள மெள்ள இறுக்கிக் கொண்டிருந்த கருக்கலிலே வெந்துகொண்டிருந்தன. ''வழுக்கி விழுந்தவள்'' அவள் ரோஜா இதழ்கள் முணுமுணுத்தன. அவள் எண்ணச் சிறகு விரிந்தது.

ஆம், அவள் வழுக்கி விழுந்தவள் தான். வழுக்கி விழுந்தவளை எழுப்பிவிட வேண்டிய சமூகம், தரையிலே கவிழ்த்த பால் மீண்டும் தரமுடியுமா என்று சாஸ்திரம் பேசுகிறது. வழுக்கி விழ ஏதுவான வஞ்சகனை இழுத்து வந்து வெட்ட வெளிச்சமாக்கவில்லை. வழுக்கி விழுந்தவள் என்று நிந்திக்கும் இந்த வக்கில்லாத சமூகம் மனத்திரையில் வஞ்சகத்தின் உருவம் நிழலாடியது. களங்கப்படுத்திவிட்ட கயமையின் சாயல். கொஞ்சல் மொழியில் மிதந்த அவளின் நெஞ்சிலே நஞ்சைக் கலந்துவிட்ட வஞ்சகன் பாலனின் வடிவம். மின்னலிடும் இன்ப நினைவுகள், துன்பக்கேணியில் ஆழ்ந்து கிடக்கும் அவளுள்ளத்தில் மிடுக்கு நடை போட்டன.

* * *

''அன்னம்'' புதுக்குரல் கேட்டு விதுப்புற்று நின்ருள் அந்த மது மலர்க்குழலாள். குரல் வந்த திக்கில் திரும்பிப் பார்த்தாள் குமரி. பார்த்திட்ட பாவையின் கண்களில் ஒருவித வியப்பும் பயமும் பரந்து நின்றன. எதிரில் நின்று கொண்டிருந்த இளைஞன் சிரித்துக்கொண்டே ''என்ன, அன்னம், அப்படியே திகைத்துப் போய் நின்று விட்டாய். என்

னைத் தெரியவில்லையா உனக்கு. நான்தான் பண்ணைக்காரர் மகன் பாலன். படிக்கப் பட்டணம் சென்றவன் இப்போதுதான் வந்திருக்கிறேன்'' என்றான்.

அன்னத்திற்கு என்ன சொல்வதென்றே புரியாமல் தடுமாறி ''ஓகோ அப்படிங்களா. நான் வருகிறேன்'' என்று கூறிவிட்டு நகர முயன்றாள். ''அன்னம், என்ன அதற்குள் கிளம்பிவிட்டாயே. இதற்காகவா உன்னைக் கூப்பிட்டேன். நான் போகும் போது நீ எவ்வளவு சிறியவளாக இருந்தாய். இப்போதோ நீ பருவக் குமரி. இளமொட்டு விரிந்த எழில் மலரின் இனிய மணம்.''

அவள் முகம் சிவப்பேறியது. தலையைக் கவிழ்த்துக்கொண்டாள். ''அன்னம், ஆகா. சிவப்பேறிய உன் செந்தாமரை முகம் மேற்றிசையில் தோன்றும் அந்திச் செவ்வானம், மோகன முக மலரில் குதித்தாடும் மொட்டு விழி வண்டுகள்'' அவளால் பொறுக்க முடியவில்லை. ''இதென்ன இப்படிப் பேசுகின்றீர்கள். அதுவும் உங்களில் தாழ்ந்த என்னிடமா இந்த வார்த்தைகள். வேண்டாம் போங்கள்'' வார்த்தைகளைக் கொட்டினாள் அவள்.

''வண்ணத்தில் தோய்த்தெடுத்த பெண்ணரசி! வெறும் புகழ்ச்சி இல்லை, என் மின் விளக்கே. இதய அடிவாரத்தில் எழுந்த இன்ப ஆசைகளை உணரவில்லையா நீ'' ஆசைப் பார்வையை அள்ளித் தெளித்தான் அவன் மேல். ''அவளோ இதய உணர்ச்சிகளாகவே இருக்கலாம். ஆனால் இடம் பொருள் காலம் இவைகளைப் பற்றியும் சிந்தித்துப் பாருங்கள். வருகிறேன்'' சொல்லி விட்டுப் பறந்து போனாள் அந்தச் சிட்டு.

வீட்டிற்குச் சென்ற அவளுக்கு வேலை மேல் நாட்டம் இல்லை. அவளின் ஒரே வளர்ப்புப் பாட்டிக்கு அதிசயமாகத்தான் இருந்தது அது. அந்த இளைஞன் அவளின் உள்ளத்திற்கு வேலை கொடுத்து விட்டிருந்தான். அமைதியான நேரத்தில் கல்லை எறிந்து விட்டு வேடிக்கை பார்த்தான் அவன். அடங்கிக் கிடந்த அவளின் உணர்ச்சிகளைத் தூண்டி விட்டன அவன் சொற்கள். ஆடிஅறியா இளங்கொடி அடித்த தென்றலிலே அசைந்து கொடுத்தது. அடக்க முயன்றாள் அவள். அத்துணைக் கத்துணை பீறிட்டுக் கிளம்பின உணர்ச்சிகள் அவளை அறியாமலே உள்ளத்தில் ''மறுநாளும் வரமாட்டாரா'' என்றொரு சபலம்.

மறுநாள் காலையிலும் ஆற்றங்கரைக் கருகில் சென்ற அவள்



'அன்னம்'' என்ற அதே குரலைக் கேட்கத் தவறவில்லை. திரும்பிப் பார்த்தாள். செவ்விதழில் ஓர் முல்லை நகை சிதறியது. "ஆகா மொட்டவிழ்ந்த பூவிதழின்நடுவே சத்தான முத்துக்கோப்பு. இரு பக்கமும் இணையில்லா இரண்டு மலர்விரிப்பு. மேலோ மோகனத் தில் ஆழ்த்துகின்ற முகில்பரப்பு'' இன்ப போதையில் உளறிக் கொண்டே நெருங்கி அவள் மலர்க்கரம் பிடித்தான்.

அன்னம் தன் கைகளை திமிறிக் கொண்டு அவன் பிடியினின்றும் விடுவித்துக்கொள்ளத்தான் நினைத்தாள். ஆனால் அவளை அப்படிச் செய்யவிடாமல் ஏதோ தடுத்தது. மனக் கண்முன் சமூகத்தின் கொள்ளிக் கண்களின் உருட்டுப் பார்வை தோன்றியது. திடுக்கிட்டு "விடுங்கள் கையை'' என்று திமிற முயன்றாள். ஆனால் அவனோ சிறைப்பட்ட அவளின் தளிர்க் கரங்களை விடுவிக்க மனமில்லாதவன் போல் இன்னும் இறுக்கிப் பிடித்துக் கொண்டே'' அன்னம், ஏன் பயப் படுகின்றாய். நீ சொன்னதுபோல் இடம், பொருள், காலம் இவைகளைப் பற்றிச் சிந்தித்தபின்தான் இந்த முடிவிற்கு வந்திருக்கிறேன். படாடோபத்தைக் காட்டி மிரட்டுகின்ற பணம். சாஸ்திரத் தளையிலே கட்டுண்டு கிடக்கும் சமூகம். எது தடையாக வரினும் உன்னைக் கைவிடேன்'' தளிர்மேனி அவன் கைகளிலே தவழ்ந்தது. நெஞ்சிரண்டும் நெருங்கி வந்து காதல் மொழி பேசின. இதழ்களோடு இதழ்கள் பொருந்தி நின்றன.

பாம்பாட்டத்தின் லாவண்யத்தில் பறிகொடுத்துவிட்ட தவளை பளபளக்கும் புலியின் நிறவர்ண ஜாலத்தில் ஒடுங்கிவிட்ட இள மான். பாதகனின் படாடோபச் சொற்களில் மயங்கிவிட்ட பாவை. நித்த நித்தம் வாழ்விலே மெள்ள மெள்ள வழுக்கிக் கொண்டே இருந்தாள். இல்லை. வழுக்கலிலே அழுத்திக்கொண்டிருந்தான் அந்த வஞ்சகன் பாலன். தீண்டாத தளிர்மேனி அந்தத் தீயவனின் கைக்கூண்டுக் குள் கிடந்தது. எச்சில் படாத இளம்பழ எழிற்கதுப்போ இன்று சுவைத்திட்ட எச்சில், கயவன் தந்த இன்பத்தில் குளித் தெழுந்து களிப்புக் கொண்டாள் கள்ளமில்லாக் கன்னி.

வாரம் ஒன்று ஓடியது. விரைவிலே தன்னை மணஞ்செய்து கொள்ளுமாறு பாலனை அரிக்கத் தொடங்கினாள் பாவை. அவனோ "கல்யாணம்தானே அதற்கென்ன ஜாமென்று நடத்தி விட்டால் போகிறது'' என்று சொல்லி தட்டிக் கழித்துக் கொண்டே போனான். கூண்டிலே சிக்கிவிட்ட கோலக்கிளி கொடிய வேடனின் கூற்றைக் கேட்காமல் கூத்தாடவா முடியும்.

நாட்கள் ஓடி மாதம் நகர்ந்தன. பாலன் அவளின் மணத்தைப் பற்றி எண்ணியதாகவே தெரிய வில்லை. இன்பக் கயிற்றில் ஆடியது உள்ளம். துன்ப வயிற்றில் வளர்ந்தது சின்னம். ஆம்! அவர்கள் காதலில் பழுத்த கனி. அவர்கள் துய்த்திட்ட இன்பத்தின் அடையாளம்.

அனலிற்பட்ட புழுபோல் துடித்தாளப்பேதை. சமூகத்தின் கொள்ளிக் கண்கள் அவளைச் சுற்றி வட்டமிட ஆரம்பித்தன. உருவாகும் கரு, பெருகுகின்ற

ஊராரின் சந்தேகக் கண்ணோட்டம், சுடர்விட்டு எரிகின்ற ஜுவாலையில் துவண்டு வீழ்ந்து சுருளாமுன் வழிசெய்ய ஓடினாள் சுந்தரி.

மனோகரமான மாலை நேரம். மந்தகாசப் புன்னகையை வீசி மறைந்து கொண்டிருந்தான் கதிர்ச்செல்வன். முல்லைக் கூட்டம் வளர் மலர்த் தோட்டம், காத்திருந்த பாலனிடம் ஓடி வந்தாள் கன்னி. "நீலப் புருவைப் பார்த்து நெடுநேரம் காத்திருந்தேன், கோலமயிலே! நீ வர இந்நேரமா?" மங்கையின் முகத்திலோ சொல்ல முடியாத வாட்டம்.

"வண்ண முகத்திலா வாட்டம் காரணம் சொல்லமாட்டாயா கண்ணே"

"ஒன்றுமில்லை, அத்தான். திருமணத்தைப் பற்றி உங்களிடம் எத்தனையோ முறை கூறிவிட்டேன். நீங்கள் அதைப் பற்றி நினைப்பதாகவே தெரியவில்லை. இவ்வாறிருந்தால் ஊர் என்ன சொல்லும்".

"ஊரா. அது என் காலடியில். உளறுவதற்கு ஏது அவ்வளவு துணிவு?"

"ஆனால் நான் அதன் காலடியில் தானே. மேலும் நம் அன்பின் சின்னம்...."

மின் தாக்கியது போன்ற உணர்ச்சி. உள்ளத்தில் தடுமாற்றம். முகம் வெளிறியது "என்ன அத்தான்" என்றாள் அன்னம். சமாளித்தவாறு "ஒன்றுமில்லை அன்னம். விரைவில் முடிவு செய்வோம். நாழிகை ஆகிவிட்டது. நாளைப் பார்ப்போம்" என்று கூறிவிட்டுப் பறந்தான் அவன்.

நாழிகைக் கணக்காக காதல் மொழி பேசி இன்ப போதையில் ஆழ்த்தியவன் இன்று சேதி கேட்டு உளம் நடுங்கி உயிரொடுங்கி ஓடிவிட்ட நயவஞ்சகத்தை உணர முடியவில்லை அந்த நங்கையால். 'நாளை வருவான்' என்ற நம்பிக்கையோடு சென்றாள் நாளையும் வந்தது. நாடிச் சென்ற காதலன் வரவில்லை. நாளை நாளை என்று நாட்கள் ஓடின. சஞ்சலமும் சந்தேகமும் ஊடுருவி நெஞ்சத்தை இறுக்கியது.

மங்கை காதலனுக்காக காத்துக் கிடந்தாள் மலர்த் தோட்டத்திலே. காதலனோ தூரத்தில் பூத்துக் கிடந்தான். ஆசைக் கன்னியின் நோட்டத்திலே அலர் விழிகள் பெருக்குகின்ற கண்ணீரில் மிதந்தாள் அவள். அவனோ ஆசைக் கன்னி அள்ளித் தெளித்த பன்னீரில் மிதந்தான். துன்ப அணைப்பிலே அன்னம், துவளும் மலர்க்கொடியின் இன்ப அணைப்பிலே அந்தத் துன்மார்க்கன். ஊரின் உருட்டு விழி அவளின் மேல் அக்கறையோடு ஊடுருவிப் பார்த்தது. சேதி அறிந்த அவள் பாட்டியும் அவளைத் தனி விடுத்து வேறெங்கோ சென்று விட்டாள்.

*         *         *

சிந்தனை கலைந்தது. ஆனால் சேயிழையின் உள்ளத்து மாசு கலையவில்லை. புண்பட்ட உள்ளத்தைப் புரையோடச் செய்தது புரட்டுக்காரனின் திருமணச் செய்தி. வாழும் வஞ்சகன் என்று பாவை பதறினாள். எழுப்பிவிட்ட கோட்டைகளை இடித்துவிட்ட ஈனன் என்று உள்ளம் எரிமலையாகக் குமுறியது. பாதகனின்

படாடோபப் பேச்சு தன்னைப் பழிவாங்கும் கட்டாரியாக மாறி விடும் என்று அவள் இஞ்சித்தும் நினைத்ததில்லை.

வாழ்வை வளமாக்கிக்கொள்ள அவன்பால் மன்றாட நினைத்தாள் மங்கை. சந்தர்ப்பம் வாய்க்க வில்லை. சஞ்சலப்பட்டாள். திரு மணத்திற்கு முதல் நாள். ஆற் றங்கரையோரம் எதிர்பாராத விதமாகச் சந்தித்தாள் அந்தக் கயவனை. பாவையைப் பார்த் தான் பாராமுகமாகச் சென்றான்.

"அத்தான் சற்று நில்லுங் கள்" என்று அவனை அணுகி னாள் அன்னம். திரும்பிய பாலன் "ஓ, அன்னமா! என்ன சேதி" என்றான். "என்ன அத்தான் ஒரு வாரமாக உங்களை தோட்டத் தில் காணவே காணோம். காத் திருக்கிடந்து கலங்கித் திரும்பச் செய்துவிட்டீர்களே"

"இல்லை அன்னம், எனக்கு ஒரு முக்கிய வேலை."

"முக்கிய வேலை என்ன? கல் யாண ஜோலி என்றுதான் சொல் லுங்களேன். அதை ஏன் மறைக்க வேண்டும்."

"ஆமாம். அதற்கு இப்போது என்ன என்கிறாய்" என்றான் கடுப்புடன்.

"எனத்தான். உங்கள் வார்த் தையில் இவ்வளவு கடுரம், இன் பக்கனியாகத் தித்தித்த உங்கள் பேச்சு இன்று ஏன் எட்டிக் காயாகக் கசக்கின்றது. சிந்தித் துப் பாருங்கள் சற்று. சீறி விழும் சமூகம் திரண்டு வரினும் கைவிடேன் என்று கூற வில்லையா தாங்கள்? சிங்காரத் தோட்டத்திலே மனோகரமான மாலையிலே, தென்றலடிக்கும் வேளையிலே, செதுக்காத பொற் சிலையே, சிரிக்கின்ற முழுநிலவே என்று தெவிட்டாது புகழ்ந்த தெல்லாம் பொய்தானா அத் தான்?"

"ஆம் அன்று கூறினேன். அது என் குற்றமா? அப்படி ஆக்கி விட்ட உன் அழகின் குற்றம்"

"ஏன்? இன்று மட்டும் அந்தக் கரும்பு கசந்து விட்டதா சொல் லுங்கள். காந்த முகம் என்பீரே அதிலென்ன களங்கத்தைக் கண் டீர். வர்ணிக்கும் வஞ்சியுடலில் ஏற்பட்ட வாட்டந்தான் என்ன. புகழ்ந்திட்ட வடுக்கண்கள் இன்று புரையோடி விட்டதா அத்தான்".

"போதுமுன் பொழிப்புரை. களங்கமுற்ற கன்னி பாவச் சின் னத்தை தாங்கும் உன்னை ஏற் றுக்கொண்டு என்னை அவமானப் படச் சொல்கிறாய். அப்படித் தானே?"

"களங்கமுற்ற கன்னி. ஆம் உண்மைதான். ஆனால் அக் களங்கத்திற்குக் காரணம் யாரென்று சிந்தித்துப் பாருங் கள். புதிய இளம் கனியைச் சுவைத்திட்ட புண்ணியவான் நீங்கள்தானே, எனக்கேற்பட்ட களங்கம். அதை விளக்க முறச் செய்யலாம் நீங்கள்".

"அன்னம். சும்மா ஏன் சள சளவென்று பேசுகின்றாய். கல் யாணம் ஆனால்தான் என்ன ஆசைக்கன்னி உன்னை மறப் பேனா"

"அத்தான் இதுவா உங்கள் முடிவு. தேனல் நீர் அருந்தலாம் என்று சிந்தை குளிர்ந்தேன். நீங் கள் காட்டுவது கானல் நீரா. இன்பத்தை எதிர்பார்த்த எனக்கு நீங்கள் தரும் பரிசு துன்பந் தானா. அமுதென்று நினைந்து

அகமகிழ்ந்தேன். ஆனால் அதில் நெஞ்சை இறுக்கும் நஞ்சை அல்லவா கலந்துவிட்டீர்கள். சோலையைப் பாலையாக்கும் வேலை எதற்கு? நீங்கள் என்னைக் கைவிட்டு விட்டால் என் கதி........'' காலைப் பிடித்துக்கொண்டு கதறினாள். கலங்கவில்லை கயவன்.

''உன்கதியை நான் காட்டியா நீ தெரிந்துகொள்ள வேண்டும். நீயே நிர்ணயித்துக்கொள் அதை.''

''அடப்பாவி'' என்ற சொல் அவள் வாயினின்று கிளம்பிற்று. பாலனோ அதைவிட்டு அகலாமல் எங்கேயோ பார்த்துக்கொண்டிருந்தான். அவள் கண்களுக்கு அவன் பயங்கர மிருகம். வஞ்சித்துவிட்ட நஞ்சு. கணத்தில் ஒரு காட்சி மனதில் தோன்றி மறைந்தது. புதுமணப் பெண்ணுடன் பாலனின் போக வாழ்வு. உள்ளத்தில் புயல் வீசியது. ''சீச்சீ பாதகஞ்செய்த பாவிக்கு இன்ப வாழ்வா, கூடாது. பண்பற்றவனைப் பழிவாங்க வேண்டும்.'' அடுத்து ஓர் எண்ணம். எல்லாம் கணத்தில் நிகழ்ந்து விட்டன.

உள்ளப் புயலை அடக்கிக் கொண்டு ஒரு புன்னகையை அள்ளி வீசி அவனை அணுகினாள் அவள். ''அத்தான் வேகத்தில் ஏதேதோ உளறிவிட்டேன். மன்னித்து விடுங்கள். உங்கள் அன்பிருந்தால் போதும். நாளை உங்களுக்குத் திருமணம், இனி எங்கே அடிக்கடி வரப்போகிறீர்கள். ஆதலால் இன்றுமட்டும் இன்பமாக பேசிப் பொழுதைப் போக்குவோம். இரவு வீட்டிற்கு வாருங்கள்'' என்றாள். ''உண்மையாகவா கண்ணே'' என்றான் ஆச்சரியத்தோடு. ''ஆம். மறந்து விடாதீர்கள்'' கூறிவிட்டுப் போய் விட்டாள். அவனும் அகமகிழ்ந்து போனான்.

இரவு நேரம். அறை மூலையில் கிடந்த முக்காலியில் இரண்டு பால் கிண்ணங்கள். வஞ்சகன் பாலனின் வரவை எதிர் பார்த்துக் காத்துக் கிடந்தது ஒன்று. மற்றென்றோ வஞ்சமில்லா வஞ்சியை எதிர்பார்த்தது. பாலனின் பகட்டையும் வெளி வேடத்தையும் உணர்த்திக் கொண்டிருந்தது பாலின் வெண்மை. அதில் கலந்திட்ட நஞ்சோ அவன் இதயத்தைத் திறந்து காட்டியது

வழிமேல் விழி வைத்து வஞ்சகன் வரவை நோக்கினாள் அன்னம். எதிர்பார்த்தவனும் வந்து அங்கே கிடந்த கட்டிலிலே அமர்ந்தான். அலங்கார வனிதையாக அன்னமும் அருகில் உட்கார்ந்தாள். ''அன்னம் இன்று நீ எவ்வளவு அழகாய் இருக்கிறாய் தெரியுமா. வண்ண நிலவில் பதித்திட்ட மாணிக்கம் நீ''.

''ஆம் அத்தான். வாழ்வின் கடைசி நாள் தானே. ஆர அமர அனுபவியுங்கள்''

''என்ன வாழ்வின் கடைசி நாளா?'' திடுக்குற்றுக் கேட்டான் ''பின் இல்லையா. நாளைத்தான் நீங்கள் உங்கள் புது மனைவியோடு சல்லாபம் செய்வீர்கள் இந்த இன்ப வாழ்வு இன்றோடு தானே''

''அப்படிக் கூறாதே அன்னம். உன்னை மறப்பேனா நான்''. எப்படி அத்தான் மறக்க முடியும். நினைக்குஞ் சக்தி இருந்தால் தானே மறப்பதற்கு'',

## சோவியத் பூமியில்

புரட்சிக்கு முன்பு சோவியத் ரஷ்யாவில் 859 செய்தித் தாள்கள் இருந்தன. மொத்தம் 30 லட்சம் பிரதிகள் வெளியிட்டு வந்தன.

இப்பொழுது ஏறத்தாழ 410 லட்சம் பிரதிகள் வெளியிடும் 8000க்கு மேற்பட்ட செய்தித்தாள்கள் வெளிவருகின்றன.

அந்நிய மொழிகளில் 80 மொழிகளில் செய்தித்தாள்களும், 50 மொழிகளில் கருத்திதழ்களும், 119 மொழிகளில் புத்தகங்களும் அரசாங்கம் வெளியிடுகிறது.

பொதுவுடமைக் கட்சியின் செய்தித்தாளான "பிராவ்தா"வின் முதல் இதழ் லெனின் அவர்களால் 1912-ம் ஆண்டு மே திங்கள் 5-ம் நாள் வெளியிடப்பட்டது.

"இந்நேரத்தில் ஏனிந்த பேச்சு கண்ணே, நான் இப்போது உன் கண் செய்யும் ஜாலத்தில் அல்லவா ஒடுங்கிக் கிடக்கிறேன்".

"அத்தான். பால் ஆறிப் போகிறது. குடித்துவிட்டு எப்பொழுதும் பேசிக்கொண்டிருக்கலாம்",

பால் கிண்ணத்தை எடுத்து வந்து பாலனிடம் நீட்டினுள். "பாலைக் குடியுங்கள் அத்தான். பறந்து வரும் இன்பம்", "பார்வை மது தரும் இன்பத்தை விடவா" வாங்கிக் குடித்தான். அதே சமயம் அவளும் எடுத்துக் குடித்தாள்.

"துன்ப உலகம், இனிமேல் நம்மைத் தொடராது அத்தான்" "அதில் என்ன சந்தேகம் கண்ணே"

சில கணத்தில் விஷ வேகத்தால் நெஞ்சு எரிகிறது.

"அன்னம். இதென்ன நெஞ்சை எரிகிறதே" நெஞ்சை இறுக்கிப் பிடித்துக் கொள்ளுகிறுன்.

"சற்றுப் பொறுத்துக் கொள்ளுங்கள் அத்தான். வேலை செய்யும் விஷம் உம்மை மட்டுமல்ல இதோ இந்த வழுக்கி விழுந்த வளையும் இன்ப உலகிற்குக் கூட்டிச் சென்றுவிடும். "என்னடா நாளை பக்கவாத்திய மேளங்கள் பலமாக முழங்க, தாளத் தம்பட்டங்கள் சலசலக்க, பூத்த முகத்தோடு புதுப்பெண்ணின் கழுத்தில் தாலியைக் கட்டவேண்டிய நமக்கு இன்று சாவு மேளம் அதிர்ந்தொலிக்க, முறைகாரர்கள் முணுமுணுக்க, முகம் வெளிர, நம் கழுத்தில் மரணக் கயிற்றைக் கட்டிவிட்டாளே" என்று பார்க்கிறீர்களா? கபடமில்லாத கன்னியைக் கைவிட்டவர்கள் கதி இதுதான் அத்தான்." அதற்குமேல் அவளால் பேச முடியவில்லை. "ஐயோ அன்னம்" என்றலறிக் கொண்டு கீழே விழுந்தான். அவள் மலருடலும் பக்கத்தில் விழுந்தது.

"விர் விர்" என்று காற்று ஜன்னல் வழியாகப் புகுந்தடித்தது. அதன் வேகத்தில் அறையில் எரிந்துகொண்டிருந்த விளக்கு அலைக்கழித்தது. சற்று நேரத்தில் அது அணைந்தே விட்டது. அறை முழுவதும் ஒரே இருள். சுடுகாட்டமைதி அங்கே. வாழ்விலே வழுக்கி விழுந்தவள் வாழ்க்கையினின்றும் வழுக்கி விழுந்து கிடந்தாள். இனி சமூகத்தின் கோரப் பிடிப்பு, ஊராரின் ஏசல்—இவைகளுக்குப் பயப்பட வேண்டிய அவசியமில்லை அவளுக்கு. ஆனல் அறிவற்ற சமூகம் மட்டும் அர்த்தமில்லாமல் உளறிக்கொண்டு கிடந்தது, "வழுக்கி விழுந்தவள், வழுக்கி விழுந்தவள்" என்று.

# இலக்கியச் செல்வங்கள்

செங்கதிர்

## கமழும் வேங்கை

காணுமிடமெங்கும் நீக்கமற நிறைந்துள்ள காரிருள்! நீர் செறிந்துள்ள முகிலினம் தம்மில் மோதி இடிக்கும் பேரோசை! விண்ணிலிருந்து மண்மீது பாய்வனபோல் தோன்றிப் 'பளிச்'சென ஒளிவீசும் மின்னல்! நிலைபெற்ற உலகை நிலைகுலைக்க முயல்வதுபோல் பேரிரைச்சலோடு பெய்யும் அடைமழை! நிலத்தைத் தன்கீழ் மறைத்துக் கொண்டு கணத்திற்குக் கணம் உயர்ந்து பெருக்கெடுத் தோடும் பெருவெள்ளம்! இத்தகு நள்ளிரவில் ஊரார் அமைதியாகத் துஞ்சுவது, இவ்வேளையில் வெளிவர அஞ் சிப் பதுங்கிவிட்டனரோ என்றே எண்ணும்படி யிருக் கின்றது!

தலைவியும் தோழியும் மட்டும் விழித்துக் கொண்டிருக் கிறார்கள். தலைவன் மலைநாட்டைச் சேர்ந்ததோர் ஊரில் வாழ்பவன். அவன் இவ்விரவில் வந்து சந்திக்கவேண்டிய குறியிடத்தில் ஒதுங்கியிருக்கிறார்கள்.

'இரவுக் குறி' என்பது தலைவியின் வீட்டிற்கு அண் மையிலுள்ள இடமாகும். 'பகற் குறி' என்பது ஊருக்கு வெளியிடமாகும்; பகற்காலத்தில் ஊரார் யாரும் கண்டு கொள்ளாத வண்ணம் இருக்க ஊருக்குப் புறம்பே உள்ள இடமே ஏற்றதாகும். தலைவனும் தலைவியும் நட்புக் கொண்ட புதியவர்களாய் ஊருக்குள் சந்திக்க வெட்கி இவ்வாறமைத்துக் கொள்வர். இருவர்க்கும் உறுதுணையா கின்றவள் தோழியே! பகற்குறி வீட்டினெல்லை கடந்த

இடமாகும். மலர் பறித்தல், நீராடல் முதலிய செயல் மேலிட்டுத் தலைவி தோழியுடன் சென்று ஊருக்கு வெளியே யுள்ள குறித்த இடத்தில் தலைவனைச் சந்திப்பாள். பகற் குறியிலேயே வந்து பழகும் தலைவனை மணந்துகொள்ளும் படி வற்புறுத்தும் நோக்கத்துடன் 'இரவுக் குறி'யினைத் தோழி அமைப்பாள். இரவு காலமாகையால் இயல்பாக அஞ்சும் தலைவிக்கு ஏதுவாக அவளுடைய வீட்டினெல்லை கடவாத இடத்திற்கே தலைவன் வந்து சந்திப்பான். இவ் வாறு 'இரவுக் குறி' வீட்டினெல்லை கடவாத இடமாகும்.

வேற்றூரிலிருந்து தலைவன் வரவேண்டும். அவன் வருகையைப் பெருவேட்கையுடன் எதிர்நோக்கி யிருக்கிறார் கள். சுற்றுப்புறத்தைக் காணமுடியாமல் அவர்கள் கண் களின் முன்னே இருண்ட திரையிட்டிருக்கிறது நடுயாமம்! மழை பெய்யும் முகிலினம் வானெங்கும் படர்ந்துள்ளமை யால் விண்மீனொளியும் இல்லை! நீர்ப்பெருக்கு அடர்ந்து செல்வதனால் நிலத்தை நோக்கி வழிகாண்பதும் அரிது! எவ்வுயிர்க்கும் உலகைத் தோற்றுவிக்கும் ஞாயிறு இப்போ தின்மையால் இருளே இப்போது ஆட்சி செலுத்துகின் றது! சந்தடியின்றி அமைதியாக ஊரார் துஞ்சுவதனால் ஊரின் இருப்பிடத்தை வெளியிலிருந்து வருவோர் அறிய இயலாது! எனவே தலைவன் வரும் வழியில் இன்று 'தடை களாக' நிற்பன: இடையறாது பெய்யும் மழை, நிலத்தை மறைக்கும் நீர்ச் செலவு, செறிந்து காணும் இருள், உறங் கும் ஊராரின் அமைதி!

தலைவன் வருவது அரிது! அவன் இனி வாரான் என்று நினைந்து இருவரும் திரும்பிச்செல்ல அடி எடுத்து வைக்கும் போது அண்மையில் காலடியோசை கேட்கிறது! பதுங்கிப் பாயவரும் புலிபோல ஒதுங்கிவரும் உருவம்! ஆம்! தலை வன் தான் அவர்களை அணுகி வந்துகொண்டிருக்கின்றான்!

இருட் கடலை நீந்திவந்த அவனைக் கண்ட தலைவியின் கண்கள் கண்ணீர்க் கடலாயின! பெருமழையில் நனைந்து —அல்ல, குளித்து!—வந்த அவனுக்காக அவளுடைய உள்ளம் வேதனையால் வெம்பிற்று; எனினும் தன்பால் அவன் கொண்டுள்ள பேரன்பை நினைந்து உருகி உவகை யுற்றது! குற்றம் செய்பவனைப்போல அவன் ஏன் இரவில்

பதுங்கிவர வேண்டும்? குறி தவருமை வேண்டி இருளில்— வான் மழையில் அவன் ஏன் நீராடி வரவேண்டும்? திரு மணம் செய்துகொண்டு உரிமையோடு துய்க்கும் பேரின் பத்தைப்பற்றி அவன் ஏன் எண்ணவில்லே? அவன் அதனை எண்ணி உணரும்படி, தோழிதான் எடுத்துரைக்க வேண் டும் என்றெண்ணி ஏங்கிஞள்!

“ தடைகளை வென்று வாரான் என்று கருதினேமே; தலைவன் எவ்வாறு வந்தான்!” என வியந்த தோழி, அவன் வருகையைத் தொடர்ந்து சுற்றிலும் நறுமணம் பரவி வரு வதை உணர்ந்தாள். தலைவியின் வீட்டினருகே உள்ளது வேங்கை மரம். ஊரெங்கும் மணம் நிறைந்து ஊரின் புறம்பே வழிவருவாரை ‘வருக!’ என்றழைப்பதுபோல் கமழ்வன, வேங்கை மரத்தின் மலர்கள்! தலைவனுடைய வருகைமீது மனம்ஒன்றியிருந்தமையால் தோழியும் தலைவி யும் அதனை அறியவே இல்லை. உணராதிருந்த இனிய மணத்தை அவன் வந்த பின்னரே உணர்ந்திருந்தனர்! அவனுக்கு வழிகாட்டிய வேங்கை மலர் மணம், திருமணம் செய்துகொள்ளவும் வழிகாட்டும் என்று நம்பித் தோழி மகிழ்ந்தாள்! வேங்கை மலர்ந்து மணம் கமழும் பருவமே வரைந்துகொள்வதற்கேற்ற காலம் என்பது பழந்தமிழர் கொள்கை! வேங்கை மணம் தலைவனுக்கு வழிகாட்டிய தோடு திருமணத்தையே அவனுக்கு நினைவூட்டுவதாகும் என்று கருதுகின்ருள்.

இன்றைய இடையூறுகளுக்கிடையே மனங்குளிர உதவி செய்தது வேங்கை மணம்! இனி என்றென்றும் இடையூறு நேராவண்ணம் இன்ப வாழ்வை வழங்குவது திருமணம்! பல்வகையான துன்பங்களையும் உணர்ந்து தன் பொருட்டுத் தலைவியும் தோழியும் நள்ளென் யாமத் தும் துயரம் நுகர்ந்து தன் வருகை ஒன்றையே நாடி வாடி யிருக்கும் பேரிடரை நீக்கவேண்டும் என்று மயங்கி மனங் கலங்கித் தலைவன் நிற்கின்ருன்! அவனுடைய நிலையை அறிந்து அவன் செய்யக் கடவதாய நன்மை, திருமணமே யாகும் என்று வற்புறுத்துகின்ருள்.

“ உயர்ந்தோங்கிய மலையின் தலைவனே! மழை மறைப் பதனல் விண்மீனெளியும் இலதாயிற்று! நீர்ச்செலவு

பெருக்கெடுத்தோடுவதனல் நிலங் காண் பாயல்லே! கதிரவனில்லா இரவில் நீளிருள் படர்ந்துள்ளமையால் நடந்து செல்லும் பாதை அறிவாயல்லே! யாவரும் ஒலியவிந்து உறங்குவதனல் ஊர் உள்ள இடத்தைத் தெளிவாயல்லே! இத்தகு நள்ளிரவில் நீ எவ்வாறு வந்தனை? வேங்கை கமழும் எம் சிற்றூரை எவ்வாறு அறிந்தனை? இடர்மிகு இரவில் நீ இவ்வாறு வருதல் குறித்துப் பெரிதும் வருந்துகின்றேன்!'' என்று கூறித் துயர் களையும் மருந்து திருமணமே என்பதைத் தோழி புலப்படுத்துகின்ருள்!

உயர்ந்தோங்கி விளங்கும் மலைக்கு அவன் தலைவன்! எனவே அவன்பால் உயர்ந்த குறிக்கோளும் இயல்பாக இருத்தல் வேண்டும்!

''வேங்கை கமழும் சிற்றூரை எவ்வாறு அறிந்தனை?'' என்றது ''வேங்கை கமழ்வதனல்தான் சிற்றூரை அறிந்தாய் போலும்!'' என்ற கருத்தைக் குறிக்கின்றது.

சீறும் வேங்கை போன்ற ஆற்றல் வாய்ந்த தலைவனுக்கு இன்று வழிகாட்டியது, கமழும் வேங்கை!

வாழ்வில் என்றும் இன்பம் கமழ வகைசெய்வது திருமணம் என்ற உண்மையை அவனுக்கு உணர்த்த உறுதுணை நின்றது வேங்கை மணம்!

தோழியின் சொற்களைக் கேட்ட தலைவன் தலைவியை வரைந்து கொள்ள உறுதி பூணுகின்ருன்.


''பெயல் கண் மறைத்தலின் விசும்பு காணலையே!
நீர்பரந் தொழுகலின் நிலங்கா ணலையே!
எல்லை சேறலின் இருள் பெரிது பட்டன்று!
பல்லோர் துஞ்சும் பானுட் கங்குல்
யாங்கு வந்தனையோ? ஓங்கல் வெற்ப!
வேங்கை கமழுமெஞ் சிறுகுடி
யாங்கறிந் தனையோ? நோகோ யானே!''

—கபிலர். குறுந்தொகை 355.

[எல்-ஞாயிறு; பால்நாள் கங்குல்-நள்ளிரவு; சிறுகுடி-சிற்றூர்; நோகு-வருந்துவேன்.]




# ரஸியாவின் காதல்



நா. ஜகந்நாதன்

"ஆச்சரியமாக இருக்கிறதே! நம்முடைய அரசியை யாவது இவர்கள் கொல்வதாவது!........"

"யாருக்கும் கேடு நினைக்கவில்லை; எத்தனையோ நன்மைகள் புரிந்தாள். மக்கள் கஷ்டமில்லாமல் வாழ்ந்தார்கள். அப்படிப்பட்ட நல்லரசியைக் கொலை செய்யத் துணிந்த காதகன், இரக்கமே இன்னதென்று தெரியாத பாவியாகத்தான் இருக்க வேண்டும்...."

"ஆமாம்,நம்முடைய ராணியை ஏன் கொன்ருர்கள் என்பதற்கு ஏதாவது ஆதாரம் கிடைத்ததா? எனக்கென்னமோ இதில் ஏதோ சூது இருக்கிறதென்று தெரிகிறது......"

"சூதும் சூழ்ச்சியும் இல்லாத ஆட்சி ஏதப்பா?.......நம்முடைய ராணியைய அல்தூனியாதான கொன்றிருப்பான் என்று நான் நம்புகிறேன்...."

"சீச்சீ! உனக்குக் கொஞ்சங்கூட அரசியல் அறிவே இல்லையே!......அல்தூனியா தான் பிறகு நம்முடைய ராணியோடு காதல் கொண்டானே! கல்யாணம்கூடச் செய்துகொண்டானே! உனக்கு அதற்குள்ளாகவா மறந்துவிட்டது!........"

"நான் ஒன்றையும் மறந்துவிடவில்லை. அவளோடு காதல் நாடகமாடியபடியே அவளைக் கவிழ்க்க அல்தூனியா செய்த சூழ்ச்சியாக இருக்கலாம் என்று நான் நம்புகிறேன்."

"நான் ஒன்றும் அந்த மாதிரி நினைக்கவில்லை. அல்தூனியா நம் ராணியை உள்ளன்போடு காதலித்தான் என்பது மட்டும்

எனக்கு நிச்சயமாகத் தெரியும். அவர்கள் இருவரும் மிகவும் அந்யோந்யமாக இருந்து வந்தார்கள் என்று ராணியின் அந்தப்புரத்தில் தோழியாக இருக்கும் என் மனைவி கூறக் கேட்டிருக்கிறேன்....ஆகவே அல்தூனியா தான் ராணியைக் கொலை செய்திருப்பான் என்று நீ சொல்வதை நான் நம்புவதற்கில்லை. இந்தச் செய்தியை வெளியே சொல்லிக் கொண்டிருக்காதே! உனக்கு வேலை போய்விடும். மண்டையும் உருண்டுவிடும்!....''

அது சரி! நம்முடைய ராணியை யார் கொன்றார்கள் என்று யாருக்குமே தெரியாதா? இவ்வளவு திறமையாக இந்த நாட்டை ஆண்ட ராணியைக் கொலை செய்தவர்களைக் கண்டு பிடித்துத் தகுந்த தண்டனை கொடுக்க வேண்டும் என்று ஏன் இந்த நாட்டு மக்கள் புரட்சி செய்ய எழவில்லை. அவர்கள் என்ன கோழைகளாகி விட்டார்களா?''

"கரீம்! போதும் நிறுத்து உன் பிரசங்கத்தை! நமக்கு என்னத்திற்கு இந்த வம்பெல்லாம்! யார் ராஜாவாக ஆனாலென்ன, நம் நிலைமை என்னமோ மாறப் போவதில்லை....... நம்முடைய பேச்சை யாராவது கேட்டுக் கொண்டிருந்தால் நம் இருவருக்கும் வேலை போய்விடும்!'' என்று கூறி அவனை அழைத்துக் கொண்டு போனான் அகமதுல்லாகான்.

கரீமும், அகமதுல்லாவும் அரண்மனைச் சேவகர்கள். அவர்களுக்கே புரியவில்லை, அரசியின் கொலைக்கு யார் காரணம் என்று. இந்தக் கொலை நடந்த நான்கு மாதங்களுக்கு முன்னால்....

"நம்முடைய மதத்திற்கே விரோதமாக நடக்கிறாள். இவளை உடனே தொலைத்து விட்டுத்தான் மறு காரியம் பார்க்கவேண்டும்.''

"பெண்ணா இவள்! ஆண் வேஷம் போட்டுக்கொண்டு இவள் குதிரை மேல் ஏறிக் கொண்டு சவாரி செய்வதும், நம்மை எல்லாம் மேய்ப்பதும் தூ தூ!........பெண் என்றே நம்ப முடியவில்லை''

"காதல் காதல் என்கிறாள். யாகுத்தைக் காதலித்தாள். அதுவும் நமக்கு விரோதமாக, நம்மை எல்லாம் மதிக்காமல். அவன் செத்துப் போனான். உடனே இவனைக் கல்யாணம் பண்ணிக் கொள்கிறேன் என்கிறாளே! காதல், காதல் என்கிறாளே, இது காதலா? காமம்! அவள் யாகுத்தின் மேல் கொண்ட காதல் எங்கே? அவன் இறந்து ஒரு மாதம் ஆகவில்லை. அதற்குள் அல்தூனியாவை மணந்துகொள்கிறாளாமே! சீ! சீ! இந்தக் காமப் பேயைஒழித்துக்கட்டவேண்டும்''

"ஆமாம்! அல்தூனியா, யாகுத் சாவதற்குக் காரணமாயிருந்தான். தன் காதலனைக் கொன்ற காதகனைக் காதலிக்கிறாளாமே, காதல்.... சீ! இப்படியும் ஒரு பெண்ணா!.......இவள் நம்மை ஆள்வதா?......நாம் இவளுக்குக் கட்டுப்பட்டுக் கொண்டு இருப்பதா? இப்போதே இவளை ஒழித்துவிட வேண்டும்! இவள் ஆட்சியை ஒழித்துக்கட்ட வேண்டும்......''

இப்படிப் பலவிதமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் மேலும் சிறிது நேரம் சில

யோசனைகளைக் கூறிப் பேசினார்கள். இவர்கள் பேச்சு ஓய்ந்ததும், ஒரு கரிய உருவம் அவ்விடத்தைவிட்டு மெதுவாக நகர்ந்து மறைந்தது, அதை யாரும் கவனிக்கவில்லை.

பேசிக்கொண்டிருந்தவர்கள், அவர்கள் பேசிய பேச்சுக்கள் இவைகளை யோசித்துக் கொண்டே அந்த உருவம் மெதுவாகத் தன் வழியே சென்று கொண்டிருந்தது. பேசிக்கொண்டிருந்தவர்கள் யார்? கேவலம் போர் வீரர்கள் அல்ல. தன் மந்திராலோசனை சபையில் உட்கார்ந்துக்கொண்டு, தன்னுடைய சொல்லுக்குத் தாளம் போடும் உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்த பிரபுக்கள்! மறைவில் தனக்கெதிராகச் சதி செய்கிறார்கள். ஆம்! அந்த உருவம்தான் நாடாளும் சுல்தானா ரஸியா. இந்தியாவை ஆண்ட முதல் பெண்ணரசி. சரித்திரப் பேராசிரியர்கள் எல்லாம் புகழும் வண்ணம் நாடாண்ட பெண். அவள்தான் இப்படி மாறு வேடம் புனைந்து, நாட்டைச் சுற்றிக் கொண்டு, தன்னைப்பற்றி, தன் ஆட்சியைப்பற்றி மக்கள் எப்படி நினைக்கிறார்கள் என்று அறிந்து வந்தாள். அவள் ஆட்சி திறமையாக நடந்து வந்தது. அவளது திறமைகளை உணர்ந்து தான் அவள் தகப்பன் ஆல்டாமிஷ், தான் வெளியூர்களுக்குச் செல்லும்போது எல்லாம் நாடாளும் பொறுப்பைத் தன் மகனிடம் தராமல் ரஸியா பேகத்திடம் ஒப்படைத்துச் செல்வது வழக்கம். அவனுடைய பயிற்சிபெற்ற ரஸியா தகப்பனுக்குப் பிறகு நாட்டைத் திறம்பட ஆண்டு வந்தாள்.

கி. பி. 13-ம் நூற்றாண்டின் அரசியல் நிலைக்கேற்ப நாடாளும் அரசனுக்கெதிராக ஏதேனும் ஒரு காரணத்தை வைத்துக் கொண்டு ஒரு கட்சி சதிபுரிந்து கொண்டு ஆட்சியைக் கவிழ்க்கும் வேலையில் ஈடுபட்டிருந்தது. அதே போல் ரஸியாவின் ஆட்சிக்கெதிராகக் கட்சி கிளம்பியது. அதற்குக் காரணம் ரஸியாவின் காதல் விவகாரம். ரஸியா, யாகுத்தைக் காதலித்தாள். ஆனால் பிரபுக்களுக்கோ அவன் விரோதி. ஆகவே பிரபுக்கள் ரஸியாமீது வெறுப்புக் கொண்டார்கள். ரஸியா இவர்கள் வெறுப்பை மதிக்கவில்லை. அந்த வேல்விழியாள் கொண்டிருந்த விரக வேதனை பிரபுக்களின் வெறுப்பைப் பொசுக்கிவிட்டது. எப்படியும் யாகுத்தைத்தான் விவாகம் செய்துகொள்வது என்று முடிவு செய்தாள். யாகுத், ரஸியாவின் படைத் தளபதி. வீரம், அழகு, கம்பீரம் மூன்றும் ஒருங்கே குடிகொண்ட அவனை ரஸியா காதலித்தது ஆச்சரியமல்ல. பிரபுக்கள் ஏன் ரஸியா, யாகுத்தை மணம் செய்து கொள்வதை எதிர்த்தார்கள் என்றால், அவன் பிரபுக்களின் ஜாதியைச் சேர்ந்தவனல்ல. ரஸியா தங்கள் ஜாதியினரில் ஒருவரை மணம் புரிந்து கொள்ளாமல் வேற்று ஜாதியானை மணந்து கொள்வதை எதிர்த்தார்கள். அந்தப் பிரபுக்களில் சிலரும் ரஸியாவை மணந்து கொள்ள ஆசைப்பட்டார்கள். ஆகவே ரஸியாவின் காதல் ஒரு போர்க்களத்தை உருவாக்கிவிட்டது,

யாகுத் என்ற தளபதிக்கு எதிராகக் கட்சி சேர்த்தவர்களின்

தலைவன் அல்தூனியா என்பவனும். ரஸியாவைக் காதலித்த அவன் பிரபுக்களைத் தூண்டிவிட்டு அவளுக்கு எதிராகக் கலகஞ் செய்யலானான். ரஸியாவும் அல்தூனியாவின் நோக்கத்தைப் புரிந்து கொண்டு, அவனோடு போர் செய்யத் தயாரானாள். யாகுத் அவள் படைகளின் தலைவனாகச் சென்றான். அல்தூனியாவும், யாகுத்தும் கோரமான போரில் ஈடுபட்டனர். அந்தப் போரில் ரஸியாவின் காதலன் யாகுத் கொல்லப்பட்டான். அவன் படைகள் தோல்வியுற்றுச் சிதறி ஓடின. ரஸியாவைக் கைது செய்து கொண்டு தன் ஜாகிரில் வைத்துக்கொள்ள எண்ணி, தன் பின்னால் அழைத்து வருமாறு உத்தரவிட்டு வெற்றி வீரனாய்த் திரும்பினான் அல்தூனியா. தன் காதலன் மரணமடைந்தது ரஸியாவிற்குச் சொல்லமுடியாத சோகத்தைக் கொடுத்தது. துயரமே உருவாய், அல்தூனியாவின் ஜாகிரில் சிறை வைக்கப்பட்டாள். சிறை என்றதும் கம்பிகளுக்கிடையே மற்றக் கைதிகளோடுகைதியாய் அடைக்கப்பட்டாள் என்று நினைத்தல் தவறு. ஒரு தனி அறையில் சகல விதமான வசதிகளோடு வசிக்க ஏற்பாடு செய்தான் அல்தூனியா. வெளியே தன்னிஷ்டப்படி போக முடியாது; பேச முடியாது, ஆகவே அது சிறைதானே. பல இரவுகள், பகல்கள் ஒன்றும் உண்ணாமல், நீர்கூட அருந்தாமல் தன் காதலனை நினைத்து உருகினாள் ரஸியா.

அல்தூனியாவின் நண்பனும், பிரபுவுமான ஒருவன் ரஸியாவின் மீது காதல் கொண்டு அவளை அடைய எண்ணிப்பல வழிகளிலும் தோற்று, இப்போது அல்தூனியாவின் வீட்டில் அவள் சிறை வைக்கப் பட்டிருப்பதை உணர்ந்து அவளோடு காதல் புரிய எண்ணிக் கிளம்பினான். அல்தூனியாவை அவன் ஒரு சமயம் பேராபத்திலிருந்து காப்பாற்றியிருந்தான். ஆகவே தன் துர்எண்ணத்திற்கு அல்தூனியா எதிராக ஒன்றும் சொல்லமாட்டான்; தன்னிஷ்டப்படி ரஸியாவை ஆடவைக்கலாம் என்ற எண்ணத்தோடு புறப்பட்டான். நல்ல வேளையாக அல்தூனியா அந்தச் சமயம் வீட்டில் இல்லை. அவன் அந்தஸ்தும் நிலைமையுமறிந்த காவலாளி கதவைத் திறந்து ரஸியாவின் அறைக்குள் விட்டுவிட்டான். பிரபு ரஸியாவின் நிலைமைக்கு அநுதாபம் தெரிவிப்பதுபோல் பாசாங்குடன்பேசிமெதுவாக தன் காதலை வெளியிட்டான். அல்தூனியா அவளைக் கொடுமைப் படுத்துவதாக அவன் கேள்விப்பட்டதாகவும், அவன் அவளைத் தன்னோடு அழைத்துக் கொண்டு போய் பழையபடி அரசியாக்குவதாகவும், அல்தூனியாவை ஒழித்துக் கட்டிவிடுவதாகவும், அதற்குப் பதிலாகத் தனக்குக் காதல் பிச்சை தருமாறும் பிட்சா பாத்திரத்தை நீட்டினான். ரஸியா த்ான் சரியான இக்கட்டில் அகப்பட்டுக்கொண்டதை நினைத்து எப்படிச் சமாளிப்பது என்று அல்லாவைப் பிரார்த்தித்துக் கொண்டாள். தன்னால் ஆனமட்டும் சொல்லிப் பார்த்தாள்.

அவன் காதலை எள்ளி நகையாடினாள். கோபம் கொண்ட அந்தப் பிரபு பலாத்காரம் செய்ய இது

தான் சமயம் என்று நெருங்கினான் அவளை.

"இத்தனை நாட்களாக என்னை இங்கே சிறை வைத்திருக்கிறார் அல்தூனியா. அவர் நினைத்திருந்தால் என்னை என்ன வேண்டுமானாலும் பண்ணியிருக்கலாம்; நான் அவருடைய அடிமை. ஆனால் அவர் பெருந்தன்மையோடு நடந்து கொண்டிருக்கிறார். இதுவரை என்னிடம் பேசக்கூடவில்லை. நம்முடைய மதத்திற்கே விரோதம் செய்கிறாய்! யாருமில்லாத வேளையில் அநாதையான என்னைக் கோழையைப்போல் நீ...." ரஸியா துடிக்கத் துடிக்கப் பேசிக்கொண்டிருந்தாள்.



"சரிதான் நிறுத்து! நம்முடைய மதத்திற்கே விரோதமாய் நீ யாகுத்தைக் காதலித்தது மட்டும் என்னவாம்? அல்தூனியா என்னமோ நல்லவன் என்று நினைத்து ஏமாறப் போகிறுய்!.... அதற்காகத்தான் இந்தமாதிரி வேஷம் போடுகிறுன் அவன். சரி! இப்போது என்ன சொல்கிறுய்?" என்று கேட்டான் அவன்.

அவன் கேட்க, அவள் மறுக்க இப்படியே ஒரு நீண்ட வாக்குவாதம் நடந்தது. கடைசியில் இவள் வழிக்கு வரமாட்டாள் என்று நினைத்துக்கொண்டு அவளைப் பலாத்காரம் செய்யஎண்ணி அவளை நெருங்கிப் பிடித்துக் கொண்டான், அவன் கண்களில் வெறி தாண்டவமாடியது. இனி அந்தக் காமுகனிடமிருந்து தன்னுல் தப்பமுடியாதென்று நம்பிக்கையை இழந்துவிட்ட அந்தத் தருணத்தில் கதவைப் படீர் என்று திறந்துகொண்டு அல்தூனியா உள்ளே நுழைந்ததை ரஸியா கண்டு பெருமுச்சு விட்டாள்.

அல்தூனியாவின் கண்களில் கோபக்கனல் வீசியது. "கோழை! யாருமில்லாத வேளையில் என் வீட்டில் நுழைந்து, என் அடிமையைத் துன்புறுத்த எவ்வளவு தைரியம்!" என்று கர்ஜித்தான்.

அந்தப்பிரபு, "ஆமாம். நீ ஏன் யாருமில்லாத நேரத்தில் இந்த அறையில் நுழைந்தாய்? அதற்குக் காரணம் சொல்!" என்று கேலிக் குரலில் கேட்டான்.

"காமுகனுகிய நீ உள்ளே சென்றிருப்பதைக் காவலாளி சொன்னுன். உடனே உள்ளே நுழைந்தேன், இதுவரை எத்தனை முறை யாருமில்லாத வேளையில் இந்த அறைக்குள் நுழைந்திருக்கிறேன் என்று ரஸியாவை நீயே கேட்டுப்பார்!......"

"நம்பவைத்துக்கழுத்தறுக்கும் நாடகத்தின் ஒரு பகுதி அது."

வாக்குவாதம் முற்றியது, வாய் சலித்தது; வாள்கள் பேச ஆரம்பித்தன. 'டிண், டிண்' என்று வாட்கள் உராய்ந்தன. ரஸியாவிற்கு என்ன நேருமோ என்ற பயம். கடைசியில் நீதி அநீதியை வென்றது. படுகாயப்பட்டு, வெட்கத்தோடு வெளியேறினுன் அந்தப்பிரபு. ரஸியாவை ஒருமுறை பார்த்துவிட்டுத் தன் அறைக்குச் சென்றுன் அல்தூனியா.

அந்தச் சம்பவத்திற்குப் பிறகு ரஸியாவின் உள்ளம் மாறியது. அல்தூனியாவின் பெருந்தன்மையும், பரந்த உள்ளமும் அவளை வெகுவாகக் கவர்ந்து விட்டன. மேலும் அவளது அழகு பல ஆபத்துக்களுக்கு அழைப்பு விடுத்தவாறு இருந்தது. பல காமுகர்கள் அவள் மீது கண் வைத்தபடி கொத்திக் கொண்டு போகக் காத்திருந்தார்கள். அல்தூனியாவைப் போன்ற ஒரு வீரனை மணந்து கொண்டால் தான் நிம்மதியாக வாழலாம் என்று முடிவு செய்தாள்.

திடீரென்று ஒருநாள் அல்தூனியா அவளை விடுதலை செய்து

> மோட்சம், மறுபிறப்பு, அழியாத ஆத்மா என்பதெல்லாம் வெறும் பொய். மனிதன் பிறக்கிறுன், உயிரோடு வாழ்கிறுன், பின்னர் இயற்கை நிலையை (மரணத்தை) அடைகிறுன்— இதுதான் உண்மை.
>
> —சர். சி. வி. இராமன்.

விட்டான், ''உன்னை இங்கேயே வைத்துக் கொண்டிருப்பதால் உனக்கு மட்டுமல்ல, எனக்கும் கூடக் கெட்டபெயர் ஏற்பட்டு விட்டது. ஆகவே உன்னை விடுதலை செய்கிறேன்,'' என்று கூறினான். அல்தூனியாவின் மீது அவள் கொண்ட காதல் மேலும் அதிகரித்தது. விடுதலையான சில நாட்களுக்குப் பிறகு அவனிடம் அவளே வலியச் சென்று தன்னை மணந்து கொள்ளுமாறு கூறினாள். பழம் நழுவிப் பாலில் விழுந்தது என நினைத்து அல்தூனியா அவளை மணக்க இசைந்தான்.

''பிரபுக்களே! நான் அல்தூனியாவை மணப்பதற்கு முன்னால் இத்தனை சம்பவங்கள் நடந்திருக்கின்றன. இவைகள் எல்லாம் உங்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. ஆகவேதான் என்னைப்பற்றியும், அல்தூனியாவைப் பற்றியும் அவதூறாகப் பேசிக் கொண்டு என் ஆட்சியை ஒழித்துவிட உங்களில் பலர் சதி செய்வதாகத் தகவல் கிடைத்திருக்கின்றன. அல்தூனியாவின் பரந்த உள்ளம் உங்கள் எல்லோருக்கும் உண்டாக வேண்டுமென்று அல்லாவைப் பிரார்த்திக்கிறேன்...'' என்று சபையோரைப் பார்த்துக் கூறினாள் ரஸியா. பிரபுக்களின் அந்தரங்கப் பேச்சை ஒட்டுக் கேட்ட மறுநாள் அவள் சபையைக் கூட்டி பழைய சம்பவங்களை எல்லாம் ஒன்று விடாமல் கூறினாள். சபையிலிருந்த பிரபுக்களில் பெரும்பாலோரும் ஆச்சரியப்பட்டு, ரஸியா அல்தூனியாவை மணந்துகொண்ட



டைரக்டர் :—(திரை மறைவில்) கண்ணே! பூங்கொடி போன்ற மெல்லிய உன் உடலை தூக்கிக் கொண்டு.......

நடிகர் :—(நடிகையை தூக்க முடியாமல்) என்ன சார்! இதுவா பூங்கொடி! தாங்க முடியாத 500 பவுண்டு பாரம் சார்.......

---

தில் தவறு ஒன்றுமில்லை என்று முடிவு செய்தனர். ஆனால் யாகுத்தின் கோஷ்டியினர் சமாதானம் அடையவில்லை.

அன்றிரவு யாகுத்தின் கோஷ்டியினர் சந்தித்தனர். அன்று காலை ரஸியா சொன்னவைகளைப்பற்றிப் பேசினார்கள். ''அது வெறுங் கட்டுக் கதை! அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளைக் கூறினால் தான், அல்தூனியாவின் மேல் நமக்கெல்லாம் நல்லெண்ணம் தோன்றும் என்று நினைக்கிறாள். அல் தூனியா ரொம்பவும் நல்லவன் என்று நம்மை நம்ப வைக்க அவள் செய்த கற்பனை! யாகுத்தைக் காதலித்த இவள் அல்தூனியாவை மணந்து கொள்வதா

வது! சதா அல்தூனியா என்று பிதற்றுகிருள்! அல்தூனியாவின் பரந்த உள்ளம் நமக்கெல்லாம் இல்லையாமே! சீ! கேவலம் ஒரு பெண் நம்மை இப்படி எல்லாம் பேச நாம் கேட்டுக் கொண்டிருப்பதா! இவளுடைய ஆட்சியை நாம் ஒழிக்கவேண்டும்! அல்தூனியாவையும் ஒழிக்க வேண்டும்........'' விவாதம் காரசாரமாக நீண்டபடி இருந்தது. அல்தூனியாவை ரஸியா போற்றுவதையும், அவனை மணந்து கொண்டதையும் யாகுத்தின் கோஷ்டியார் தீவிரமாக எதிர்க்கலானுர்கள். அவர்கள் கட்சி சேர்க்க ஆரம்பித்தார்கள்.

ரஸியாவிற்கு எதிராகக் கிளம்பிய யாகுத்தின் கோஷ்டிக்கு ரஸியாவின் சகோதரன் தலைவனுகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். அவன்தன் தமக்கைக்கு விரோதமாகச் சதியில் கலந்துகொண்டது ஏனென்ருல் அவனுக்கு அல்தூனியாவைப் பிடிக்காது. அல்தூனியாவைத் தன் தமக்கை மணந்தபோதே அவன் எதிர்த்தான். ஆனுல் அவளோ இந்த எதிர்ப்பை எல்லாம் பொருட்படுத்தாமல் அல்தூனியாவையே மணந்து கொண்டாள். 'சமயம் எப்போது வரும், சகோதரியின் ஆட்சியைக் கவிழ்க்கலாம்! என்று காத்திருந்த அவனுக்கு நல்லதொரு சந்தர்ப்பம் கிடைத்தது. அவன் யாகுத்தின் கோஷ்டியோடு சேர்ந்துகொண்டு தன் தமக்கையின் ஆட்சியைக் கவிழ்த்துவிட்டு தான் முடிசூட்டிக் கொள்ள விரும்பினுன். தனக்கு ஆதரவாளர்களைச் சேர்த்துக் கொண்டு, தமக்கையின் மீது படை எடுத்தான்

எதிர்ப்பெல்லாம் அடங்கி விட்டது என்று சோர்ந்திருந்த நேரத்தில் அவளை வெல்ல நினைத்துப் படை எடுத்தான். அவன் எதிர்பார்த்தற்கேற்பவே வெகு எளிதில் ரஸியாவின் படைகள் தோற்கடிக்கப்பட்டன. ரஸியாவையும் அல்தூனியாவையும் சிறை பிடித்துக் கொண்டு போனுர்கள். சிறையிலேயே இருவரையும் ஒருவர் பின் ஒருவராக வஞ்சகமாகக் கொன்றுவிட்டார்கள். ரஸியா கொலை செய்யப்பட்ட சில நாட்கள் சென்ற பிறகே அல்தூனியாவைக் கொலை செய்தார்கள் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. அல்தூனியா, ரஸியாவைக் கல்யாணம் செய்து கொண்டதால்தான் இப்படி எதிரிகளுக்கு அடிமையாய்ச் சிறையில் அவதிப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது என்று கோபத்தில் ரஸியாவைச் சிறையில் கொன்று விட்டதாக நாட்டில் வதந்தியைப் பரவ விட்டார்கள். வதந்தி பரவிய பிறகுதான் அல்தூனியாவைக் கொலை செய்தார்கள். இப்படியாக ரஸியாவின் காதல் அவளுக்கே யமனுக முடிந்தது.

ரஸியாவிற்குப் பிறகு அவள் சகோதரன் உள்பட எத்தனையோ பேர் ஆண்டார்கள். ஆனுல் அவளுக்குப் பிறகு ஆண்டவர்களில் ஒருவர் கூட ரஸியாவின் திறமையையோ, வீரத்தையோ பெற்றிருக்கவில்லை என்பது மட்டும் நிச்சயம். ரஸியாவின் கொலைக்கு எது காரணம், யார் காரணம் என்பது மட்டும் ஜனங்களுக்குப் புரியவேயில்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாய்க் கதை கூறிக் காலங் கழித்துக் கொண்டிருந்தார்கள். *



# நமது மருத்துவர்

G. வெங்கடப்பா M. B. B. S. (Ex) I. A. M. C.

விஞ: *மருத்துவரே, 15 வயதுள்ள என் நண்பர் ஒருவருக்கு உடல் முழுவதும் முடி வளர்ந்து, அழகைக் கெடுத்து துன்பம் கொடுக்கிறது. இதை நீக்க என்ன மருந்து உபயோகிக்க வேண்டும்?*

— எஸ். சந்திரன், விழுப்புரம்.

விடை: உங்கள் நண்பரின் உடலை தேர்ச்சியுள்ள ஒரு மருத்துவர் சோதிக்க வேண்டும். வளரும் பருவத்தில் உடலில் சில கோளங்கள் (Glands) வேகமாக வேலை செய்யும். தைராய்ட், பிட்யூட்டரி, அட்ரினலின் முதலிய கோளங்கள் சமமாக வேலை செய்யாமல், ஏதாவது ஒன்று வளரும் சத்தை அதிக அளவில் இரத்தத்தில் கலந்து விடுவதால் முடி அதிகமாக வளருகிறது. மருத்துவர் நேரில் பார்த்த பிறகுதான் சிகிச்சை செய்வார்.

முடிபோக்கும் சௌக்காரத்தை ஒரு சிலர் உபயோகிப்பதுண்டு, ஆனால் மீண்டும் வளரும். மின் ஊசி (Electric Needle), எக்ஸ்ரே (X-Ray) முதலியவைகளை உபயோகித்து முடிகளை எடுப்பதுண்டு, ஆனால் சிகிச்சையின்போது வலி ஏற்படும். இதை தோல் நிபுணர் தான் (Skin Specialist) செய்வார்.

சில ஆண்டுகளுக்குப் பிறகு கோளங்கள் மாறுபட்ட நிலையில் வேலை செய்யும் பொழுது, முடி உதிர்ந்து விடுவதும் உண்டு.

விஞ: *எனக்கு வயது 18. நல்ல நிறம் (சிவப்பு). ஆனால் வெளுத்த நிறம். இருந்தும் கைக்கு அடியில் (கக்கம்) கருப்பாக இருக்கிறது. இதை நீக்க ஏதாவது மருத்துவம் கூறுங்களேன்?*

—என். கமலா, ஆத்தூர், சேலம்.

விடை: தோல் நிபுணர் ஒருவரிடம் காட்டி யோசனை கேட்பது சிறந்தது. அதுவரையில் சில மாதங்களுக்கு பின் கூறும் முறைகளைக் கையாளவேண்டும்.

1. குளிப்பதற்கு உபயோகிக்கும் மஞ்சள் தேய்த்து தினந்தோறும் நீராடவேண்டும்.

2. ஒருநாள் விட்டு ஒருநாள் பூவரசன் காய், மலர், இதழ் ஆகிய வைகளை அரைத்துப் பூசி 1 மணி நேரம் கழித்து கழுவிவிட வேண்டும்.

3. அந்த இடத்தில் சிறு புள்ளிகளும், நமச்சலுமிருந்தால் (Whitfield ointment) விட்பீல்ட் ஆயின்ட்மென்ட் வாங்கி இலேசாக தினந்தோறும் ஒரு மாதத்திற்குத் தடவி வரவேண்டும்.

*வினா: என் வயது 21. உயரம் 5 அடி. தந்தையின் உயரம் 5 அடி 6 அங்குலம். தாயின் உயரம் 5 அடி 6 அங்குலம். என் உடல் மெலிந்துவிட்டது. முகத்தில் மீசையும், தாடியும் தோன்ற வில்லை. இதற்கு தகுந்த மருந்து வகைகளையும், ஒழுங்கு முறைகளை யும் பொன்னியில் தயவுசெய்து எழுதுங்கள்?*

—எம். பாலகிருஷ்ணன், மண்டபம்.

விடை: 1. தைராய்ட் (Thyroid—Extract-grain ½) சத்து ½ மணி அளவு உள்ள மாத்திரைகளை தினம் ஒன்று சாப்பிட்டு வரவேண்டியது. சில மாதங்களுக்குப் பின் குணம் தெரியும்.

2. காலையில் எழுந்தவுடன் படுக்கையில் உட்கார்ந்து கழுத்தின் முன் பாகத்திற்கு உள்ளங்கைகளால் சுமார் 5 நிமிடம் தேய்ப்பு (Massage) கொடுக்கவேண்டும்.

3. படுக்கையில் கால்களை நீட்டி உட்கார்ந்து கை விரல்களால் கால் பெரு விரல்களைத் தொடவேண்டும். கைகளைப் பக்கவாட்டமாக எடுத்து முதுகு தரையில் படும்படி பின் பக்கம் சாய்ந்து படுக்கவேண் டும். தலை, முதுகு ஆகியவைகளை இடுப்பிலிருந்து உயர்த்திக் கைகளை முன்னுக்குக் கொண்டுபோய் நீட்டிய கால்களின் விரல்களைத் தொட வேண்டும். இவ்விதம் 20 முறை மாறி மாறி பயிற்சி செய்ய வேண்டும்.

4. ஆட்டின் மூத்திரக்காய், (Kidney) விதைகள் (Testes) ஆகிய வைகளை வாரம் இரண்டு மூன்று முறை சமைத்து உட்கொள்ள வேண்டும். சாப்பிட இயலாதவர்கள் விதையின் சத்து "Testosterone" உள்ள மருந்தை உங்கள் வைத்தியரைக் கேட்டு ஊசியின் மூலம் வாரம் இருமுறை உடலில் செலுத்திக் கொள்ள வேண்டும்.

*வினா: நான் நல்ல உணவுகளையும், சத்துப் பொருள்களையும், உண்ணுகிறேன். தினம் முட்டை, பால், மாமிசம் முதலியவைகளையும் உண்ணுகிறேன். ஆனால் என் உடம்பு தேய்ந்துகொண்டே போகி றது. இதற்குக் காரணம் என்ன?*

—இரா. கனி, அரியலூர்.

விடை: நீங்கள் நல்ல உணவுகளைச் சாப்பிட்டபோதிலும் உடல் வளராமலிருப்பதற்குக் காரணம் தேகாப்பியாசம் இல்லாமை ஆகும். தேகப் பயிற்சியில் கைதேர்ந்த பள்ளி ஆசிரியர்கள் உதவியைக் கொண்டு எளிதில் செய்யக்கூடிய பயிற்சிகளை முறையுடன் கற்று தினந்தோறும் குறிப்பிட்ட நேரத்தில் பயிற்சி செய்துவர வேண்டும். உணவில் ஒரு பழம் சேர்த்துக்கொள்ள வேண்டும். மலச்சிக்கல் இல் லாமலிருக்க ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும். மனதைச் சந்தோஷ மாக வைத்திருக்க வேண்டும்.

# வளரும் இலக்கியம்

### ஆடும் ஆச்சாரியார்

எழுதியவர்: மீ. சு. இளமுருகு பொற்செல்வி

வெளியிட்டோர்: நம்நாட்டுப் பண்ணை, மணப்பாறை, திருச்சி மாவட்டம். விலை அணா எட்டு.

ஆச்சாரியார் அவர்கள் அரசியல் அரங்கில் ஆடிய (!) ஆட்டத்தைப்பற்றி, தீட்டிய ஏடு இது.

### ஆயர் முரசு (தமிழ் மாத இதழ்)

ஆசிரியர்: நா. வேலாயுதம், பாளையங்கோட்டை. விலை அணா மூன்று.

'ஆயர் குலத்திடையே அறிவுப் பயிர் வளர்ப்போம்' என்று முழக்கமிடுகிறது இந்த 'முரசு'. சகோதரத்துவம் சமத்துவம் என்று பேசிவரும் இந்நாட்களில் குறிப்பிட்ட ஒரு 'குலத்துக்காக' பத்திரிகை நடத்துவது, மிகவும் வருந்தத்தக்கது.

### மூவி பிலிம்ஸ் (மாதம் இருமுறை)

கூட்டாசிரியர்கள்:— ச. வீ. கனக சபாபதி, M. R. குருமூர்த்தி, M. B. M. Sc. (Lond) (Deepavali weekly) S. வீரபாகு B. A. 14, உஸ்மான் ரோடு, தி—நகர், சென்னை-17. விலை அணா நான்கு.

திரையுலகின் புதிய போக்குகளை ஒட்டி, இவ்விதழும் புதிய பாதையிலே செல்கிறது. சினிமா உலகில் நிகழும் சம்பவங்களையும் செய்திகளையும், விபரமாகத் தெரிந்து கொண்டு பின்பு அச்சேற்றுவது அவசியம் எனக் கருதுகிறோம்.

### இன்பக்கலை (1954 ஆண்டு மலர்)

விலை ஒரு ரூபாய்.

மலரில் பிரபலமானவர்கள் இடம் பெற்றிருக்கின்றனர். பெயர்களை (விரிக்கிற் பெருமென அஞ்சி விடுத்தனம்.) நாட்டிலுள்ள அவலக் காட்சிகளை சிந்தித்து சிந்தித்து அது மறைய உடல்-மனோத்துவ ஞானம்தான் பெரிதும் உதவுமென்ற முடிவுக்கு வந்து, மலரை வெளியிட்டிருக்கிறார்கள். ஆண்—பெண் மர்மஸ்தானங்களை (மூவர்ண சித்திரங்களாகவும்) விளக்கக் கட்டுரைகளுடன் பொறித்திருக்கிறார்கள். ''வாழ்க்கையைத் திருத்த வேண்டுமானால் மனதை முதலில் திருத்த வேண்டும். செய்த பிழையை நினைந்து வருந்த வேண்டும்'' என்ற அறிஞர் டால்ஸ்டாயின் பொன் மொழிகளை அவர்களுக்கு மீண்டும் எடுத்துக் கூற விரும்புகிறோம்.

—''வேதாளம்''

### மறைந்த மாவீரர் மறைமலை

ஆக்கியோன்: சைதை-சம்பந்தன், வெளியிட்டோர்: நீதி நிலையம், இராமநாதபுரம். விலை அணா மூன்று.

தமிழ்ப் புரவலர் மறைமலை அடிகள் மறைந்தபோது தமிழறிஞர்க நல்கிய கருத்துக்களோடு, மறைமலை அடிகளின் வாழ்க்கையைக் கோடிட்டு காட்டும் ஒரு கட்டுரையே இந்நூல். உணர்ச்சி வேகம் ஆசிரியரின் எழுத்தில் துள்ளி விளையாடுகிறது.

**கலை அரங்கம்** (திங்கள் இதழ்)

ஆசிரியர்: கலைச்செல்வன். விலை அணா எட்டு.

திரை உலகுக்கு அண்மையில் கிடைத்த புதிய இதழ் கலை அரங்கம். மூவண்ணப்படங்கள் உள்ளும் புறமும் நல்ல முறையில் அலங்கரிக்கின்றன. 'திரைக்குப் பின்' என்ற தலைப்பில் தணிக்கையாளரின் போக்கை விளக்கி இருக்கும் முறை பாராட்டத்தக்கது. கலைத்துறை சம்பந்தப்பட்ட புதிய செய்திகளுடன் கலைஞர்கள், டைரக்டர்கள் வாழ்க்கைக் குறிப்புகளும் இடம் பெற்றுள்ளன. கொடுக்கும் காசுக்கு இதில் உள்ள 'சரக்கு' குறைவு என்பது நமது எண்ணம். இந்த எண்ணம் நீங்குவது இதழின் முன்னேற்றத்தைப் பொறுத்திருக்கிறது.

**மணி விளக்கு** (ஈத் மலர்)

ஆசிரியர்: ஏ. கே. ஏ. அப்துஸ் சமது.

ஈத் தினத்தின் நோக்கத்தை விளக்கும் கட்டுரை, கதை, கவிதைகளைத் தாங்கி மணி விளக்கு ஜூன் இதழ் வரப் பெற்றோம். நபிகள் நாயகத்தின் வாழ்வையும் வாக்கையும் அறிவிக்கும் அரிய பல கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. இஸ்லாமிய சமய வளர்ச்சியின் லட்சியத்தை அடிப்படையாகக் கொண்ட இவ்விதழில் அதற்கு அரண் செய்யும் விதத்திலேயே எல்லாப் பகுதிகளும் இடம் பெற்றுள்ளன.

**பூமாலை** (திங்கள் இதழ்)

ஆசிரியர்: தில்லை வில்லாளன், தம்பி அலுவலகம், சிதம்பரம். விலை அணா எட்டு.

ஏடுகள் நடத்தும் தகுதி எங்களுக்குத்தான் உண்டு என்று இறுமாந்து கிடந்தவர்களின் நாவை அடக்க, புத்தம் புது ஏடுகள் திராவிட இயக்கத்துக்குத் தோன்றி வருகின்றன.

தெள்ளு தமிழில் தீஞ்சுவைக் கருத்துக்களை அள்ளித்தரும் வண்ண ஏடுகள் நடத்த எங்களாலும் முடியும்— அந்தத் திறமை எமக்கு உண்டு என்பதை நிரூபித்தது 'பொன்னி', அந்தப் பாதையில் பீடு நடை போட கிளம்பி விட்டது 'பூமாலை'

அறிஞர் அண்ணாவிடம் ஏறத்தாழ நான்கு ஆண்டு காலம் இருந்து பயிற்சி பெற்ற தில்லை வில்லாளன்தான் 'பூமாலை'யை ஈன்று புறந்தந்திருக்கிறார் என்றால், அதன் சிறப்பைப்பற்றி அதிகம் கூறத்தேவையில்லை.

உலக இலக்கியத்தில் உயர்ந்த இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ள எழுத்தாளர்களின் சிறந்த எண்ணக் குவியல்களும், எழுத்தோவியங்களும் இம் முதல் இதழில் இடம் பெற்றுள்ளன.

அண்ணாவின் மாஜிகடவுள்கள், புதுமைப்பித்தன் பற்றிய சுவையான செய்திகள் ஏற்கனவே புத்தகமாக வெளி வந்திருந்தாலும் அதைச் சுருக்கித்தந்துள்ள முறை படிக்க படிக்க இனிக்கிறது.

பிற மொழி இலக்கியங்களில் உள்ள சிறந்த கருத்துக்களை படிக்க முடியாதவர்களுக்கு 'பூமாலை' நன்கு பயன்படும் என்று கருதுகிறோம். தமிழர்க்கு சிறந்தவொரு இலக்கியக் கருவூலம் 'பூமாலை'

—"பாபு"

தந்தி : "NEWERA"

# வெற்றி பெற வேண்டும்.

## எல்லாப் பரிசுகளும் உத்தரவாதம்.

ஒவ்வொரு முற்றிலும் சரியான விடைக்கு ரூ. 2000/—மேலிருந்து கீழ் முதலிரண்டு வரிசைகள் சரியான விடைக்கு ரூ. 50/— மேலும் வேறு மூன்று பரிசுகள் முறையே அதிகப்படி கூப்பன்கள் பூர்த்தி செய்து அனுப்பியவர்கட்கு ரூ. 300/—, ரூ. 200/—, ரூ. 100/—.

50

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

5 முதல் 20 வரையுள்ள எண்களைப் பக்கத்திலிருக்கும் கட்டங்களில் பூர்த்தி செய்க. இடமிருந்து வலமாகவுள்ள வரிசைகளையோ, மேலிருந்து கீழாகவுள்ள வரிசைகளையோ, சதுரத்தின் மூலைகளுக்குக் குறுக்காகவோ எந்த வரிசையைக் கூட்டினாலும் மொத்தம் 50 தான் வரவேண்டும். ஒரு நம்பரை ஒரே முறைதான் உபயோகிக்கலாம்.

**முடிவு தேதி 2—7—54** **விடை 12—7—54**

பிரவேசக் கட்டணம் கூப்பன் 1-க்கு ரூ. **1—0—0**, 4 கூப்பன்களுக்கு ரூ. **3—0—0**, அல்லது ஒவ்வொரு 16 கூப்பன்களுக்கு ரூ. **10—0—0.**

**விதிகள் :—**

மேலுள்ள விபரப்படி கட்டணத் தொகையுடன் ஒருவர் சாதாரணத் தாளில் எத்தனை விடைகள் வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம். விடை கூப்பன்களுடன் M. O. இரசீது, போஸ்டல் ஆர்டர் அல்லது பாங்க் டிராப்டைக் கட்டணத்துக்காக இணைக்கவும். வெளிநாடுகளிலிருந்து பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். M. O. கூப்பன்களிலும், விடைத்தாளிலும் உங்கள் பெயரையும் முகவரியையும் தெளிவாக எழுதவும். விடைகளுக்கு ஆங்கில எண்ணையே உபயோகிக்கவும்.

மீரட்டில் பிரபல பாங்க் ஒன்றில் டிப்பாஸிட் செய்து வைக்கப்பட்டுள்ள சீலிடப்பட்ட எமது சரியான விடைக்கு வரிக்கு வரி சரியான விடைதான் தவறில்லாதது என்று கருதப்படும்.

விடை :
கூடுதல் 46

| | | | |
|---|---|---|---|
| 4 | 9 | 14 | 19 |
| 11 | 18 | 5 | 12 |
| 15 | 6 | 17 | 8 |
| 16 | 13 | 10 | 7 |

கடிதப் போக்குவரத்துகள் ஆங்கிலத்தில் தான் வைத்துக் கொள்ளவேண்டும். முடிவு தேதியிலிருந்து ஒரு வாரத்திற்குள்ளாக அனுப்பப்படும் விடை விபரமும் வெற்றி பெற்றோரின் விபரமும் பெற உங்கள் முகவரியுடன் தபால் தலை ஒட்டிய கூடு அனுப்புக. போட்டி நடத்துவோரின் முடிவுதான் முடிவானதும் சட்டப்படி கட்டுப்படுத்துவதுமாகும். இதுவே இந்தப் போட்டியில் கலந்து கொள்வோருக்கு முக்கிய விதி.

கூப்பன்களைக் கட்டணத்துடன் கீழுள்ள முகவரிக்கு அனுப்புக :—

**NEW ERA COMPETITIONS**

**P. B. 15, The Mall. (141) MEERUT (U. P.)**

# மாதவிடாய் நின்றுபோனதா?

**நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்)** Regd. by the Central Drugs Laboratory of Govt. of India. Under No. CDL/688

எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ. 8-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 10-8-0 (தபால் செலவு தனி)

# கர்ப்பதடை

**நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்)**
Government Registered No. 266.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பாவரியாக கருவை தடுக்கும். பில்ஸ் விலை. ரூ. 12-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (தபால் செலவு தனி)

Mgrs: **SEENU & CO., Post Box, 1638, (          ) MADRAS-1.**
கிளை: 134. SERANGOON ROAD. சிங்கப்பூர்.
சிலோன் ஏஜண்ட்: NEW COLOMBO MEDICAL STORES. 82. MAIN ST. கொழும்பு-11.



## மணமகள் தேவை

பி. ஏ. பாஸ் செய்துள்ள ஒரு 25 வயது கிறிஸ்தவ இளைஞருக்கு ஓரளவு படிப்பு, வருவாயுடன் கூடிய மணமகள் தேவை. எம்மதத்தினராயினும், எந்த இனத்தினராயினும் அக்கறையில்லை. தாய் தந்தையர், உடன் பிறந்தோர், வயது, சொத்து முதலிய விபரங்களுடன் புகைப்படமும் அனுப்புக.

திரு. பிள்ளை,
C/o
தபால் பெட்டி எண் 1795,
சென்னை-1.



## கொக்-சாஸ்திரம்



தனிமையில் படிக்க—ஆண் பெண் உறவு குறித்த படங்களும், நீங்கள் இதுவரை படித்திராத பல உபயோகமான விஷயங்களும் அடங்கியது.

விலை ரூ. 3. தபால் செலவு ரூ. 1.

## படுக்கையறைப் படங்கள்

பெண்களின் அந்தப்புர நிலைகள்—படுக்கையறைக் காட்சிகள்—அழகு இன்னும் வேறு பல காண விரும்புகிறீர்களா? அப்படியானால் இன்றே ஆர்டர் செய்க. 50 படங்கள் கொண்ட செட் 1-க்கு ரூ. 5.

தபால் செலவு ரூ. 1.

இரண்டும் ஆர்டர் செய்தால் ரூ. 8.

H. H. Stores (P. M.)
Post Box 51, MEERUT.



Edited, Printed & Published by Aru. Periyannan for Ponni Ltd., at Ponni Achakam, 111, Coral Merchant Street, Madras-1

ஜூன் 22-ந் தேதிமுதல் 'சில்'லென்று வீசுகிறது!

# தென்றல்

★ வார ஏடு ★

ஆசிரியர்: கண்ணதாசன்

★ இலக்கியத்தில் காதல்!
★ செத்தவர்களெல்லாம் சிறந்த கவிகளே!
★ அண்ணாவின் பெரும் பயணம்
★ சிறைகண்டேன் தோழீநான்!
★ இவனன்றோ கவிஞன்?
★ மாஸ்கோவா? காஞ்சீபுரமா?
★ எதிலிருந்து?
★ இ. பி. கோ. 109

இன்னும் பலப்பல! எண்ணக் குவியல்கள்!!

இதுவரை தமிழில் இப்படியொரு பத்திரிகை வெளிவந்ததில்லை.

தனி இதழ்: 0-2-0 ஆண்டுச் சந்தா: 6-0-0

எங்கும் விற்பனையாளர் விண்ணப்பிக்க

**தென்றல்**

2, சண்முக முதலி தெரு. :: சென்னை—14.

Regd. No. M. 6486. PONNI 15th June 1954

Grams: PILONK Phone: 2424

PENMEN LIMITED

No. 1-A ANDERSON STREET. MADRAS-1.

Sole Distributors to

THE PILOT PEN CO. (INDIA) LTD

For

* HYDERABAD,
* MYSORE,
* TRAVANCORE
* COCHIN
* COORG

STATES & SOUTH INDIA




BUY A BOTTLE TO-DAY